விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 29 திங்கட்கிழமை (11.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# தமிழ் மக்களின் விழிப்பே
# பேரவை என்ற பேரலை

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரை



(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் விழித்துக்கொண்டுள்ளனர் என்பதற்கான அடையாளமே தமிழ் மக்கள் பேரவை என்ற பேரலைதான் என வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்றைய தினம் தமிழ் மக்களின் பேரவையில் கூட்டத் தொடரில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறே கூறினார். தமிழ் மக்கள் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர் நேற்றைய தினம் காலை 10 மணியளவில் யாழ்ப்பாண பொது நூலக கேட்போர்

24 ஆம் பக்கம் பார்க்க....

## பேரவையின் தீர்வுத்திட்டத்தில் மக்களின் கருத்துக்கள் இணைப்பு

### நிபுணர்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் பேரவையினால் தயாரித்து முன்மொழிவு செய்யப்பட்ட தீர்வுத்திட்ட வரைபானது மக்களுடனான கலந்தாலோசனைக்குபின்னர் மக்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுள்ளது

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்டு மக்களின் கருத்துக்களை அறிவதற்



என தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வுத்திட்ட நிபுணர் குழுவின் இணைப்பாளர் வி.புவிதரன் தெரிவித்துள்ளார்.

காக வெளியிடப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவின் இறுதிவரைபை ஆராய் வதற்காக தமிழ் மக்கள் பேரவையின் கூட்

23 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் மா அதிபர் 18-ம் திகதி தெரிவு

(கொழும்பு)

புதிய பொலிஸ் மா அதிபர் தெரிவுக்கான இறுதித் தீர்மானம் எடுப்பதற்கான அரசியலமைப்பு பேரவையின் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இலங்கையின்33 ஆவது பொலிஸ் மா அதிபரான

24 ஆம் பக்கம் பார்க்க....

## இந்து மதகுருவின் வீட்டை தாக்கியோரில் இருவர் கைது!

(தும்பளை)

தும்பளை நெல்லண்டை வீரகாளி அம்மன் ஆலய பிரதம குருவின் வட்டின்மீது அத்துமீறி உள்நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட நபர்களில் இருவரைத் தாம் கைது செய்ததாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

24 ஆம் பக்கம் பார்க்க....

## ரெலிகொம் நிறுவன தலைவரின் வீட்டு வாடகை விவகாரம்!

### அமைச்சர் ஹரின் எதிர்ப்பு

(கொழும்பு)

ரெலிகொம் நிறுவனத்தின் தலைவருக்கு 7 இலட்சத்து 25 ஆயிரத்திற்கு வீடு வாடகைக் கொடுப்பனவை பெற்றுக் கொடுக்க ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த விடயத்திற்கு தொலைத் தொடர்பு மற்றும் டிஜிட்டல் உள் கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னான்டோ எதிர்ப்பினை தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தனது கவனத்திற்கு வந்ததுடன் இது தொடர்பில் ஆராய முடிவெடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் டெலிகொம் நிறுவனத்தின் தலைவர்

24 ஆம் பக்கம் பார்க்க....

## சீனாவுடன் மீண்டும் நெருக்கம்

### சுதந்திர வர்த்தக உடன்படிக்கை; பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு இணக்கம்

(பீஜிங்)

சீனப்பிரதமர் லீ கொன் இலங்கைக்கு அடுத்த வருடம் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்படும் எனவும் சீனப் பிரதமரின் இலங்கை விஜயத்திற்கு முன்னதாக சுதந்திர வர்த்தக உடனபடிக்கை பற்றிய ஆயத்தங்கள் பூர்த்தியாகும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பாதுகாப்புத் துறையில் நெருக்கமான உறவுகளை பேணிக் கொள்வதற்கு சீனாவும், இலங்கையும் விருப்பம் தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்தின் முடிவில வெளியிடப்பட்ட கூட்டறிக்கையிலேயே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களில் இரண்டு நாடு

23 ஆம் பக்கம் பார்க்க....

## கிராம சேவகர் தாக்கப்பட்டார்

(வற்றாப்பளை)

சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களின் விபரங்களை சேகரிக்கச் சென்ற கிராம சேவையாளர் மீது தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று மாலை 4.00 மணியளவில் கொக்குத்தொடுவாய் வடக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க....

## கேரளா கோவிலில் தீ அனர்த்தம் 110 பேர் பலி; 350 பேர் படுகாயம்



13 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)
உங்கள் ஆலய
திருவிழாக்களில்
அழைத்து மகிழுங்கள்

தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி
**கலைமாமணி Dr.S.S.குருஜீ**
T.P:-0757428011, 0767256024
**நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.**

(4190)

---

**Hotel Lux Etoiles inviting you to apply for the below mentioned positions to recruit staff for Lux Etoiles II new hotel**

***Job opportunity***

Receptionists cum marketing executives (Male and Female)

***Qualification***

Good Command over Languages: Fluent in English and also Sinhala speaking knowledge will be an advance qualification. Experience persons in similar position will be having first Preference

***Kindly present***

Interested candidates may call over with your full set of CV on 11.04.2016 at 10.00 am to 14.30 pm.

(இத்துடன் சமையல் உதவியாளர்கள் தேவை)

**Hotel Lux Etoiles**
No. 34, Chetty Street lane, Nallur, Jaffna.
You can contact us through 0759396600

(C-4278)

---

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அன்னை மடியில்
22 - 07 - 1934



அம்மன் அடியில்
13 - 03 - 2016

கடந்த 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப ஒளிவிளக்கு

### அமரர் அம்பிகைபாகன் தங்கம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 11.04.2016 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கூவில், கொட்டடி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அந் நிகழ்விலும் நாளை 12.04.2016 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதை ஒரு தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்
T.P.No: 0776155422

(C-4282)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### செல்வராசா ஈஸ்வரி (ரோகினி)

மலர்வு 1955.06.19 — உதிர்வு 2014.04.04

நீங்கள் எம்மை விட்டு மறைந்து ஈராண்டு
கடந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் நீங்காத நினைவாக
நிறைந்து நிற்கும்

(4171)

உங்களின் வார்த்தைகள்
என்றும் எம் இதயங்களில்
ஒலித்துக் கொண்டேயிருக்கும்


உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர்.

என்றும் உங்கள்
அன்பு நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மின்சாரத்தில் பயணிக்க கூடிய ரயில் சேவை இலங்கையிலும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு


கோப்புப்படம்



மின்சாரத்தின் உதவியால் பயணிக்கக் கூடிய ரயில் சேவையை இலங்கையில் விரைவில் அறிமுகம் செய்யவுள்ளதாக மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இந்த திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாணந்துறை நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

மேல்மாகாணத்தைமையப்படுத்தியதாக பிரதான 5 போக்குவரத்து மத்திய நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்பொழுது கொட்டாவ போக்குவரத்து மத்திய நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

அடுத்து வரும் நாட்களில் பாணந்துறை, கடவத்தை, கட்டுநாயக்க மற்றும் கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 40 வருடங்களாவது புதிய அரசியலமைப்பு நிலைக்க வேண்டும்

இலங்கையில் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு அடுத்த 40 வருடங்களுக்காவது உயிர் வாழும் ஒன்றாக அமைய வேண்டும். அத்துடன் ஒவ்வொரு இலங்கையரும் இதனை ஏற்றுக் கொள்வதாக அமைய வேண்டும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் ஊடாக அதிகாரங்கள் முடிந்தளவு பகிரப்பட்டுள்ளமையை புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் போது கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண சபையை பொறுத்தவரை அந்த மாகாண சபைக்கு 13வது திருத்தத்தின் ஊடாக அதிக அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

இதனைவிட அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனில். அது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படலாம் என்றும் சுசில் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பு 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ளன.

எனவே புதிய அரசியலமைப்பு 40 வருடங்களுக்காவது நிலைக்கும் வகையில் உருவாக்கப்படவேண்டும்என்று சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# 2 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை வெளிநாடுகளில் பதுக்கிய இலங்கையர்கள்

## அமெரிக்க நிறுவனம் தகவல் வெளியீடு

(வோஷிங்டன்)

**இலங்கையை சேர்ந்த ஊழல்மிக்க அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், குற்றவாளிகள் இலங்கையில் இருந்து 2 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

அமெரிக்காவின் வோஷிங்டனில் உள்ள குளோபல் பைனான்ஷியல் இண்டர்க்ரீட் என்ற நிறுவனமே இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த தொகையானது மூன்று ட்ரில்லியன்கள் அமெரிக்க டொலர்களை எட்டும் என அந்த நிறுவனம் கூறியுள்ளது.

2004 ஆம் ஆண்டு முதல 2013 ஆம் ஆண்டு வரை இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக இந்த பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கையில் இருந்து 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1.38 பில்லியன் அமெரிக்க டொலர்கள் திருட்டு வழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வோஷிங்டன் குளோபல் பைனான்ஷியல் இண்டர்க் ரீட் நிறுவனம் மோசடியான முறையில் சம்பாதிக்கப்பட்ட பணம் நாடுகளுக்கு நாடு அனுப்பி வைக்கப்படுவதை கண்காணிக்கும் நிறுவனமாகும்.

திருட்டு வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் மூலம் இலங்கை 17 பில்லியன் அமெரிக்க டொலர்களை இழந்துள்ளது.

பனாமாவில்உள்ளமோசெக பொன்சேகா நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் போல், இலங்கையில் நடந்த திருட்டு பணபரிமாற்றமும் பாரதூரமானது என கூறப்படுகிறது.

கறுப்பு பணப்பட்டியலில் பிரபலமான 149 நாடுகளின் வரிசையில் இலங்கை 53 வது இடத்தில் இருப்பதாக வோஷிங்டன் பைனான்ஷியல் இண்டர்க்ரீட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கொலம்பியாவில்ஹெரோயின்போதைபொருள் மூலம் கிடைத்த 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

# அரசின் நல்லிணக்க முயற்சிகளை யசுசி அகாசி வரவேற்றுள்ளாராம்

(கொழும்பு)



தேசிய அரசாங்கம் மேற்கொண்டு வரும் நல்லிணக்க முயற்சிகளை ஜப்பானின் இலங்கைக்கான சமாதான தூதுவர் யசுசி அகாசி வரவேற்றுள்ளார்.

பிரதி வெளியுறவு அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவை ஜப்பானில் வைத்து சந்தித்த வேளையில் அகாசி இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்போது அரசாங்கத்தின் நல்லிணக்க திட்டங்களை ஹர்ஷ டி சில்வா, அகாசியிடம் எடுத்து கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த அகாசி, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு தமது பாராட்டை தெரிவித்ததுடன் இந்த முயற்சிகளுக்கு ஜப்பானின் முழுமையான உதவி கிடைக்கும் என்றும் தெரிவித்ததாக இலங்கையின் வெளியுறவு அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# மனிதர்களை விற்பனை செய்யும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்டுள்ள மனிதர்களை விற்பனை செய்யும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் காரணமாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக பல தடைகளும் போடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தலதா அத்து கோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு ஆட்களை அனுப்பும் போது இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளினால் இலங்கையின் பெயரும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இந்தப் பொறுப்புக்களைச் சுமந்தவர்கள் இந்நிலை உக்கிரமடையும் வரை வேடிக்கை பார்த்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்கள் இந்நாட்டில் சுமார் 800 காணப்படுகின்றன. திருட்டுதனமாக இலஞ்சம் கொடுத்து செயற்படும் சில உப நிறுவனங்கள் சட்டவிரோதமாக ஆண்களையும், பெண்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது.

இதனை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித வியாபாரத்துக்கு எதிரான காரியாலயமொன்றை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் திறந்து வைத்து உரையாற்றுகையில் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# மகிந்தவுக்கு ராணுவ பாதுகாப்பு எனக்கு எதுவுமே தெரியாது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ர்ராஜபக்ஷவின் இராணுவ பாது காப்பை அகற்ற வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியமை பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என பாதுகாப்புச் செயலாளர் கருணா சேன ஹெட்டியாராச்சி தெரி வித்துள்ளார்.

மஹரகமஇளைஞர்சேவை சங்கத்தில் நேற்று நடைபெற்ற படைவீரர் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவப் பாதுகாப்பை அகற்ற வேண்டாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சிற்கு ஆலோசனை வழங்கியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

எனினும், இவ்வாறான எந்தவொரு ஆலோசனை அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை என ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

முப்படையினரைக் கொண்டு நபர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட முடியாது. சட்டத்தில் அதற்கு எவ்வித இடமும் கிடையாது.

ஜனாதிபதி இராணுவப் பாதுகாப்பை நீக்க வேண்டாம் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கவோ ஆலோசனை வழங்கவோ இல்லை என கருணாசேன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# திருட்டுச்சாராயத்தை பிடிக்க முடியாத பொலிஸார் மகிந்தவுக்கு பாதுகாப்பா?

## சுகந்த தேரர் கேள்வி

(கொழும்பு)



கிராமத்தில் மதுபானம் உற்பத்தி செய்யும் குற்றவாளியை பிடிக்க முடியாத பொலிஸாரினால் நாட்டின் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ஷவுக்குப் பாதுகாப்பு வழங்க முடியுமா? என சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே, சுதந்த தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் நேற்று முன்தினம் பொதுபல சேனா அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பிய வினாவுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)

நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம்
பெருமையுடன் நடாத்தும்



நூல்களின் வெளியீடும்
பாராட்டும்-2016
பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ்
பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

இடம் : தடங்கன் புளியடி நெல்லை முருகன் திருமண மண்டபம் (நெல்லியடி)
காலம் : 12.04.2016, செவ்வாய்க்கிழமை, காலை 09.00 மணி
தலைவர் : பேராசிரியர் மாணிக்கம் நடராஜசுந்தரம்
( ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் )
பிரதம விருந்தினர் : திரு. சிவஞானம் சிறிதரன்
( யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

*மேற்படி கழக அமைப்பாளர்*
சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்
B.A.Dip. in Edu M.A

*யா / கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை, பிரதியதிபர்*
தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன்
இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளி அம்மன்
வடபத்திர காளியம்மன் ஆதீன ஹர்த்தா



*மேற்படி கழக செயலாளர்*
வேல் நந்தகுமார் - MA in Tamil - MED
ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி



*நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம்*
நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறை

**நிகழ்வின் நிகழ்ச்சி நிரல்**

- விழா நாயகர்கள், பிரதம விருந்தினர் அழைப்பு
- மங்கல விளக்கேற்றல்
  - ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தசோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் - நல்லை ஆதீன முதல்வர், யாழ்ப்பாணம்
  - பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்
  - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
  - பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் - தலைவர்
  - திரு.சி.சிறிதரன் - பிரதம விருந்தினர்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து } ஸ்ரீமதி ஜெயபாரதி கௌசிகன்
- தமிழ்மொழி வாழ்த்து } ஆசிரியை, இசைத்துறை
- வாழ்த்தும் வரவேற்பும் பண்டிதர் பொன்.சுகந்தன்
- ஆசியுரை
  - ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்தசோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள்- நல்லை ஆதீன முதல்வர், யாழ்ப்பாணம்
  - சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் - நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆதீன கர்த்தா
- தலைமையுரை
  - பேராசிரியர் மாணிக்கம் நடராஜசுந்தரம் - ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- தொடக்கவுரை
  - திரு.வேல். நந்தகுமார் (ஆசிரியர்-யா/ஹாட்லிக் கல்லூரி) -நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகச் செயலாளர்
- வாழ்த்துரைகள்
  - திரு.சிவபாதம் நந்தகுமார் - கல்விப்பணிப்பாளர், வடமராட்சிக் கல்வி வலயம்
  - திரு.வேலுப்பிள்ளை சிவயோகன் - வடமாகாணசபை உறுப்பினர்
  - திருமதி அருள்நங்கை சண்முகநாதன் - இயக்குநர், யாழ். புதிய உயர் கல்லூரி
  - பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா - ஓய்வுநிலைப் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  - கலாநிதி தம்பையா கலாமணி - முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  - கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் -முதுநிலை விரிவுரையாளர், கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
  - திரு.சந்திரலிங்கம் சுகிர்தன் - வடமாகாணசபை உறுப்பினர்
  - திரு.கி.நடராஜா - ஓய்வுபெற்ற அதிபர்
- நூல்கள் வெளியீட்டுரை
  - திரு.தனபாலசிங்கம் ஜெயசீலன் - பிரதேச செயலர், பருத்தித்துறை
- நூல் மதிப்புரை 1 பனைமனை
  - திரு.ஆறுமுகம் சிவநாதன் - அதிபர், யா/புற்றளை மகா வித்தியாலயம்
- நூல் மதிப்புரை 2 தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் பெண்
  - திரு.ச.லலீசன் - பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
- முதற் பிரதி வழங்கல்
  - "பனைமனை"
  - பெறுநர் : திரு.பொன்னையா அரவிந்தன் - அதிபர் யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை
  - "தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பெண்"
  - பெறுநர் : திரு.நடராஜா சற்குணராஜா - சுசீலா நகைமாடம், பருத்தித்துறை
- சிறப்புப் பிரதிகள் வழங்கல்
- விழா நாயகர்கள் கௌரவிப்பு
- ஏற்புரை
  - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
  - பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்
- நன்றியுரை
  - திரு. பொன்னையா அரவிந்தன் - அதிபர் யா/கற்கோவளம் மெ.மி.த.க பாடசாலை
- நூற்பிரதி விலை
  - "பனைமனை" - ரூபா 560.00
  - "தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் பெண்" - ரூபா 300.00

அனைவரையும் இருகரம் கூப்பி அழைக்கின்றோம்.

(C-4276)



வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**கணிதம்**
தரம் 6 தொடக்கம் O/L
வரையான கணித வகுப்பு
வீடு வந்து கற்பிக்கப்படும். (4148)
தொடர்பு :- 077-8175794


# தமிழ் தலைமைகள் விட்ட தவறை மீண்டும் விட இடமளியேன்

## டக்ளஸ் எம்.பி உறுதி

(யாழ்ப்பாணம்)

புதிய அரசு தற்போது வழங்கியுள்ள சாதகமான வாய்ப்பை தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்கின்ற வகையில் சரியாக பயன்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு பின்னர் இலங்கையின் ஆட்சியாளர்களால் பல சாதகமான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தி தந்திருந்தபோதும் அவை எதனையும் தமிழ் தலைமைகள் சரியாக பயன்படுத்தியிருக்கவில்லை.

இந்த நிலையில் தற்போதைய புதிய அரசாங்கம் மீண்டுமொரு சாதகமான வாய்ப்பை வழங்கியுள்ளது. அதாவது பாராளுமன்றத்தை அரசியல் யாப்பு சபையாக மாற்றியுள்ளது. இச்சந்தர்ப்பத்தை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அத்துடன் அதற்கான வழிகாட்டல் குழுவில் உள்ள 21 பேரில் நானும் ஓர் அங்கத்தவனாக உள்ளேன். இத்தகையஓர் நிலையில் அச் சபைக்குள் இருந்துகொண்டுகடந்த காலங்களில் தமிழ் தலைமைகள் விட்ட தவறை மீண்டும் விடுவதற்குநான் இடமளிக்கப்போவதில்லை.அதில் மிகவும் தெளிவாக இருக்கிறேன். தமிழ் மக்களின் நலனகளை பாதுகாக்கின்ற வகையில் இதனை சரியாக பயன்படுத்தவேண்டும்.

அந்தவகையிலே இது தொடர்பாக சகல தரப்புகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம். தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்கள் பேரவை உட்பட அனைத்து தரப்புகளுடனும் பேசவுள்ளோம். அந்தவகையில் முதல் கட்டமாக எட்டு அமைப்புகளுடன் சந்திப்புக்கள் நடத்தியுள்ளோம்.

மேலும் புதிய அரசைக்கொண்டு அரசியல் விடயம் மாத்திரமல்ல மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் சரியான முடிவுகள் தமிழ் தலைமைகளால் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. எனவே அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் தலைமைகளிடம் வலியுறுத்த வேண்டும்.

மேலும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தபட்டுள்ள 65ஆயிரம் வீட்டுத் திட்டத்தை தவறவிட்டோமேயானால் இனி அதுபோன்ற தொருவேறு வாய்ப்பு கிடைக்கவாய்ப்பில்லை.

அத்துடன் இதுவரை காலமும் குடிசைகளிலும் வெயிலும் மழைகளிலும் கஷ்ரப்பட்ட மக்களுக்கு இவ் வீட்டுத்திட்டம் தற்காலிகமாக ஒரு அரண்மனை கிடைத்ததை போன்ற ஒன்றாகும்.

எனினும் இவ் வீட்டுத்திட்டம் தொடர்பில் இது பொருத்தமற்றது எமது பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் பொருத்தமற்றது என கூறிக் கொண்டிருப்பவர்கள், இந்த புதிய அரசாங்கத்தை தாம்தான் கொண்டு வந்ததாக கூறுபவர்கள் அரசாங்கம் அமையமுன்பே பல இரகசியசுற்று பேச்சுக்களை நடத்தியவர்கள் முன்னரே இது தொடர்பாக அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். இது எமது சூழலுக்கு பொருத்தமற்றது பண்பாட்டுக்கு பொருத்தமற்றது என அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அதனை விடுத்து அவர்கள இணக்க அரசியல் செய்கின்றோம் என்ற பெயரில் சுயபெருமையையே அதாவது எதிர்கட்சி தலைவர் குழுக்களின் பிரதி தலைவர் மாவட்ட இணைத் தலைவர்கள் என தமக்கான சுய பெருமைகளையே தேடியுள்ளனரே தவிர மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை கொடுக்கவில்லை. தமது தனிப்பட்ட நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக மௌனமாகவே உள்ளனர்.

தற்போது கூட வடமாகாண சபை தமிழ் தேசிய கூட்டமைப்பிடமே உள்ளது. ஆனால் அங்கு பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படவில்லை. நாங்கள் இருந்தபோது பிரச்சினைகளுக்கு முடிவுகளை வழங்கியிருந்தோம் அல்லது குறுகிய காலத்தில் அதற்கான தீர்வினை பெற்றுக் கொடுத்திருந்தோம். ஆனால் இப்போது பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கைகளை தாருங்கள் நாங்கள் அதனை மத்திய அரசாங்கத்திடம் வழங்குகின்றோம் என தெரிவிக்கிறார்கள்.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது தமிழ் மக்களது பிரச்சினைகள் அதாவது 65ஆயிரம் வீட்டுத்திட்ட பிரச்சினை, இந்திய மீனவர் பிரச்சினை, சம்பூர் பிரச்சினை தொடர்பில் மக்களுக்கு உரியதீர்வினை பெற்றுக் கொடுக்கவேண்டும்.

மேலும் எதிர்வரும் மாதம் பாராளுமன்ற அமர்வின் போது நான் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைக்கவுள்ளேன்.

அதில் போரில் இறந்தஉறவுகளை நினைவு கூருவதற்கும் அவர்களுக்கான அஞ்சலியை செலுத்துவதற்குமான ஒரு பொது தினத்தையும் அதற்கான பொது இடத்தையும் உருவாக்க வேண்டும் என அப் பிரேரணையில் முக்கியப்படுத்தவுள்ளேன்.

அத்துடன் அப்பிரேரணையூடாக வரலாற்றுகாலத்தில் துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்த முடிவில் கொல்லப்பட்ட எல்லாளனுக்கு துட்டகைமுனு நினைவாலயம் அமைத்து மரியாதை செய்ததை போன்று தற்போது இடம்பெற்ற யுத்தத்திலும் எல்லாளனுக்கு சிலையமைத்து நினைவு கூரவேண்டும் என்பதையும் வலியுறுத்த்வுள்ளேன்.

இதில் யார் எல்லாளன்? யார் துட்டகைமுனு என ஊடகவியலாளர் வினவியதற்கு அது தொடர்பாக தற்போதே தெரிவித்தால் அது தொடர்பாக பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வருவதற்கு தடையாக அமைந்து விடும் எனவும் ஆனால் அதுயார் என்பது மக்களுக்கே தெரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (9)

# மகிந்த வரவேற்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயம் நல்லதொரு விடயம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அகுனுகொலபெலஸ்ஸ விகாரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாடுகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுவது. மிகவும் முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் சீனாவுக்கு விஜயம் செய்ய முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தனது விஜயம் தொடர்பில் தெரியப்படுத்தியதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் இடம்பெற்ற சீன விஜயம் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (12)

# யாழ். ஆனைக்கோட்டை

# நாரவராக்காடு கருணைமிகு புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலய

# புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ பெருஞ்சாந்தி பெருவிழா- 2016

## சிறப்பு மலர்:- 11.04.2016



### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச்செய்தி

யாழ். ஆனைக்கோட்டை நாரவராக்காடு கருணைமிகு மஹாகவிர் அனுக்ரத்த விநாயகர் (புக்கை தின்னி பிள்ளையார்) ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ பெருஞ்சாந்தி விழா ஐங்கரன் அடியவர்களே!

பெறுதலுக்கு அரிதான மானிட பிறவியை நாம் எடுப்பதற்கு காரணம் யாதெனில் நமது பாவச் சுமையை களைவதற்காகவே பல வகை தீர்வுகளை இறைவன் அமைத்துள்ளான். அதில் ஒன்றுதான் கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழாவும் ஞான சம்பந்த குழந்தை பாடலிலே பெருஞ்சாந்திக் காணாது போவாயோ பூம் பாவாய் என்று பெருஞ்சாந்தி விழாவை சிறப்பித்து கூறினார். பிறப்பை அறுத்து எம்மை எல்லாம் புண்ணியாத்மா ஆக்குவதற்கு கும்பாபி ஷேகம் ஒரு சிறந்த வழிபாடாகும் . எனவே சைவ சமயத்தவர்கள் அனைவரும் இக்கும்பாபிஷேக மூலம் சிறப்புற்று வாழ இந்த புவிதன்னில் தர்ம வழிபாடு வேண்டி துதிக்கையான் பாதம் துதித்து வாழ்த்தி கூறி ஆசி கூறுகின்றேன்.

சுபமஸ்த்து

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.
"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**பிரம்ம ஸ்ரீ தாணு-வாசுதேவ சிவாச்சாரியார்,**
**தர்புருஷ சிவம்,**
**கும்பாபிஷேக பிரதம குரு,**




### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

அருள்நிறைந்த ஆனைக்கோட்டை புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பாரம்பரியம் மிக்க கிராமத்தில் அற்புதம் வாய்ந்த ஆனைமுகப் பெருமான் குடிகொண்டிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஆண்டுதோறும் இவ்வாலயத்தில் சிறப்பாக அலங்கார உற்சவம் நடைபெறுவதுடன் பல விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவது சிறப்புக்குரியது. இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புது மெருகூட்டப்பட்டு அழகுப் பொலிவுடன் கும்பாபி ஷேகம் நடைபெறுவது பாராட்டுக்குரிய விடயமாகும். ஆலய பரிபாலன சபையின் அரிய பணி தொடர விநாயகப் பெருமானை வேண்டி அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,**
**தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை**



### பெருஞ்சாந்தி விழாவில் பேரருள் தருவீரையா!

வேரோடு வினை நீக்கும் புக்கை தின்னிப் பிள்ளையாரே!
வெவ்வினை தீர்த்து நல்லருள் புரிவீரையா!
பேரோடும் புகழோடும் எம்மை வாழ்விக்கும் கணபதியே!
பெருஞ்சாந்தி விழாவில் பேரருள் தருவீரையா!
சீரோடுஞ் சிறப்போடும் கும்பாபிஷேகம் செய்திட்டோம்!
சித்திகள் தந்து எம்புத்தி தெளியவைப்பீரையா!
பாரோடு இணைந்தே உம் பத்மமலர்ப்பாதம் பணிந்தோம்
ஓடோடி வந்தே எமைக் காத்தருள் புரிவீரையா!



**கலாபூஷணம்**
**இராசையா ஸ்ரீதரன்**



### தலைவரின் வாழ்த்துச் செய்தி

அருள்மிகு நாரவராக்காடு புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெறும் இந் நன்னாளில் நம்மைக் காப்பதற்கும் சகல சௌபாக்கியங்க ளையும் அருளுவதற்கும் எம் பெருமான் மகா கும்பாபிஷேகம் செய்து தன்னைச் சாதாரணமாகவும் மௌனமாகவும் வீற்றிருந்து நன்மைகளையும் அற்புதங்க ளையும் செய்தும் தொடர்ந்து செய்யவும் ஆயுத்தமாகி உள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எம்பெருமான் திருப்பணி வேலைகள் மற்றும் கும்பாபிஷேகம் சிறப்புற நடத்த பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அடியார்களுக்கும் நன்றி கூறி எம்பெருமான் கடாட்சம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**இரத்தினகுமார் பிறேம்குமார்**
**(தொழிலதிபர், பிறேம் நகைமாடம்)**
**தலைவர் , பரிபாலன சபை.**



### அருளாசிச் செய்தி

வேரோடு வினை நீக்கும் யாழ். ஆனைக்கோட்டைநாரவராக்காடு கருணை மிகு புக்கை தின்னிப் பிள்ளையார் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ மகாகும்பாபிஷேக பெருஞ் சாந்திப் பெருவிழா சிறப்பு மலருக்கு அருளாசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அடியார்கள் அனைவரையும் பேரோடும் புகழோடும் வாழவைக்கின்ற கருணைமிகு புக்கை தின்னிப் பிள்ளையாருக்கு அவர்கள் அழகாக அமை த்திருக்கும் இந்த ஆலயம் அருள் மிகுந்த ஒரு ஆலயமாக விளங்குகின்றமை சிறப்பம்சமாகும். ஆகவே அடியார்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையாக நின்று அளப்பரிய அறப்பணியைச் செவ்வனே நிறைவு செய்து இன்று கும்பாபிஷேகமும் நடைபெறுவது எல்லாம்வல்ல விநாயகரின் திருவரு ளன்றி வேறில்லை.

சிறப்புமிகு திருப்பணி மூலம் ஆலயக் கட்டு மானங்கள் அழகுற அமைந்திருக்கின்றன. விநா யகர் திருவருளால் இன்றைய கும்பாபிஷேகநிகழ் வுகள் சிறப்புற்று நிறைவுற பத்மமலர்ப்பாதம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். எம். பெருமானுக்கு நடைபெறுகின்ற உற்சவங்களும் நன்றே நிகழ நல்லைக் குருமணியை வணங்கி வாழ்த்தி உளமாரப் பிரார்த்தித்து ஆசி வழங்கி மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**



### செயலாளரின் வாழ்த்துச் செய்தி

நாரவராக்காட்டில் கருணையோடும் அற்புதமாகவும் அற்புதங்கள் நிகழ்த்தியும் அனைவர் மனதிலும் நீங்கா இடம்பெற்ற புக்கை தின்னிப் பிள்ளையாருக்கு இந்நன்னாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று தமது பக்தர்களை பாகுபாடு பார்க்காது அனைவருக்கும் உதவி செய்யவும் கஷ்டங்களையும் கவலைகளையும் நீக்குவதற்கு எம்மை ஆயத்தப்படுத்தி புனருத்தாரணம் செய்யப்பட்டு தமது அருட்கடாட்ச பீடத்திற்கு செல்கின்றார் என மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து எம்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

**சற்குணானந்தம் உஷாநந்தினி**
**செயலாளர்,**
**பரிபாலன சபை**

**பிறேம் நகை மாடம்**
**பிறேம் பிளாஷா**
**171, யாழ் வீதி,**
**மானிப்பாய்.**

**கும்பாபிஷேகம்**
**மன்மத வருடம் பங்குனி மாதம்**
**29 ஆம் நாள் 11.04.2016**
**திங்கட்கிழமை**
**9.20 மணிமுதல் 10.00 மணிக்குள்**

**மலரமைப்பு:- வி.கிரிதரன்,**
**மானிப்பாய்.**

**சுந்தர்சன்**
**யாழ் வீதி,**
**மானிப்பாய்.**

**கஜலக்ஸ்மி ஜுவல்லறி**
**இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T:P: 077 735 2010**




**NEW HEALTH FITNESS**
**GYM, YOGA & KARATE CENTRE**
**யாழ் வீதி,**
**ஆனைக்கோட்டை, கூழாவடி.**

**செல்வாமஹால் திருமண மண்டபம்**
**1229, பூநாறி மரத்தடி,**
**K.K.S. வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**விநாயகர் பட்டுச்சோலை**
**இல.08,**
**ஆலடிச் சந்தி,**
**மானிப்பாய்.**

**சுதாஸ் ஐஸ்கிறீம்**
**171, யாழ்வீதி,**
**மானிப்பாய்.**
**போட்டன் வீதி,**
**மானிப்பாய்.**

(C-4277)

# வடக்கில் எந்த பாரிய செயற்றிட்டங்களானாலும் எமக்கூடாகவே அரசு செயற்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் திட்டவட்டம்



வட மாகாணத்திற்குரிய எந்த பாரிய செயற்றிட்டமானாலும்எமக்கூடாகவே அவை மத்திய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென வடக்கு மாகாண சபைமுதலமைச்சர்சிவிக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான உதவிப்பாலம் நிகழ்வு நேற்று முன்தினம் கைதடி ஸ்ரீ விநாயகர் மண்டபத்தில் ஆரம்பமானது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட எம் மக்கள் பலருக்கும் பலவிதமான உதவிகளை நாம் செய்து வருகின்றோம்.

எனினும் பாரிய திட்டங்களையே உலகம் எதிர்பார்க்கின்றது. ஆனால் அத்திட்டங்கள் வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் மத்திய அரசாங்கத்தினாலேயே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பல தடவைகளில் எங்களிடம் கேட்காது எமது அலுவலர்களுடன் மட்டும் கலந்தாலோசித்தே இவ்விதமான பாரிய செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் "நெல்சிப்" போன்ற பாரிய செயற்றிட்டங்களில் ஊழல் நடைபெற்ற போது எம்மால் அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பது சிரமமாக இருந்தது. எமது மாகாணத்திற்குரிய எந்த பாரிய செயற்றிட்டமானாலும் எமக்கூடாகவே அவை மத்திய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கடமைக்காகக் கடிதம் அனுப்பி தாம் நினைத்தவாறு நடந்துகொள்வதை நாம் கணடித்து வருகின்றோம்.

65000 பொருத்து வீடுகள் திட்டமும் தான்தோன்றிதனமாக எமது பங்கு பற்றல் எதுவுமின்றியே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு செயற்றிட்டம். எமது பங்கு பற்றலை நாம் ஒரு ஆணவப் போக்கில் கோரவில்லை. எம்மை மதிக்கவில்லை என்பதற்காக நாம் கோரவில்லை. மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களுடன் கலந்தாலோசித்தால் மக்கள் சார்பான கருத்துக்களை வெளியிடலாம் என்ற எண்ணத்திலேயே எம்முடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்க வேண்டுகின்றோம். அத்துடன் அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பகிர்வு என்று வாய் கிழியக் கத்திவிட்டு இதைக்கூட எமக்குத் தெரியாமல் செயற்படுத்த முன்வந்தால் மத்தியின் உண்மையான மனநிலை என்ன என்றகேள்வியேமேலோங்கி நிற்கும்.

இன்றும் சென்ற ஆண்டைப் போல் CSR (Corporate Social Responsibility) என்ற சமூகத்திற்கான வர்த்தகக் குழுமப் பொறுப்புணர்வு என்ற கொள்கை ஆற்றுப்படுத்தலானது எமது கொடையாளர்களால் எம் சார்பாகவே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அவர்கள் அளிக்கும் உதவி எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வருடப்பிறப்பின் போது அவர்கள் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்று இங்கு வந்திருப்போர் நித்திய கல்யாணி நகை மாளிகை வர்த்தக நிலையத்தின் சொந்தக்காரர் ஜெயராஜூம், கொழும்பு வெள்ளவத்தை மயூராபதி அறங்கா வலர் சுந்தரலிங்கமும் மட்டுமல்ல. சங்கம் அமைத்து பலர் இங்கு வந்துள்ளார்கள். அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பண உதவியுடன் தான் இன்றைய இந்தக் கைங்கரியம் முன்னெடுத்துச் செல்லப் படுகிறது. அவர்கள் மயூராபதி அம்மன் நலன்புரிச்சங்கம் என்ற ஒரு சங்கத்தை அமைத்து அதனூடாக அதன அங்கத்தவர்களின் உதவிகளைப் பெற்று போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு உதவ முன் வந்துள்ளார்கள். இங்கு வந்திருக்கும் அங்கத்தவர்கள்பலர் எனனை வந்து கொழும்பில் சந்தித்தும் இருக்கின்றார்கள். சைக்கிள்கள், தண்ணீர் பம்புகள், தையல் இயந்திரங்கள், பாடசாலைப் பைகள், காலணிகள் என்று பலவிதமான உதவிகளைத் தந்துதவியுள்ளார்கள்.

எம்மைச் சந்திக்கப் பல பாதிக்கப்பட்ட மக்கள் புதன் கிழமைகளில் படையெடுத்து வருகின்றார்கள். பலரின் குறைகளைத் தீர்க்க முடியாத நிலையில் நாங்கள் அவர்கள் பெயர்களையும் தேவைகளையும் பதிந்து வைக்கின்றோம். இவ்வாறான நிகழ்வுகள் வந்ததும் அவர்களுக்கு எம்மாலான உதவிகளை வழங்குகின்றோம். பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு உதவிகள் புரிகின்றோம்.

இன்றைய நிகழ்வு ஒரு தற்காலிகமான மகிழ்வேற்றும் நிகழ்வே. வருடப் பிறப்பின் போது இங்கு வந்திருக்கும் பயனாளிகளுக்கு ஏதோ ஒரு உதவி கிடைக்கப் போகின்றது. ஆனால் அது உங்களை வருடப் பிறப்பின் போது மகிழ்வுடன் வைத்திருக்க எமது கொடையாளிகள் தரும் உதவி. இதை நாங்கள் மதிக்கின்றோம். வரவேற்கின்றோம். மகிழ்வுடன் கையேற்கின்றோம். உங்களிடம் கையளிக்கின்றோம். ஆனால் வெறும் உதவிகளிலேயே காலத்தைக் கடத்தும் ஒருபழக்கம் எங்களுள் சிலருக்கு இப்பொழுது பழக்கப்பட்டு வருகிறது. எங்காவது சென்று ஏதாவது உதவிகளைப் பெற்று அன்றாடம் வயிற்றை நிரப்ப அவர்கள் ஆயத்தமாகி இருக்கின்றார்கள். இதுதவறான வழிமுறை.

பல மாணவ மாணவிகள் பிறநாடுகளில் இருந்து அவர்களின் உற்றார், உறவினர் அனுப்பும் பணத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். அங்கு அவர்கள் எவ்வளவு பாடுபட்டுவயிற்றைக்கட்டி, வாயைக் கட்டிப் பணம் அனுப்புகின்றார்கள் என்பதை எம்முள் பலர் அறிவதில்லை, உணர்வதில்லை. மாணவ மாணவியர் தம் சொந்தக் கால்களில் நின்று முன்னேற முடிவெடுக்க வேண்டும். படித்துவிட்டு வேலை கிடைக்காது தவிக்கின்றோம் என்று பலர் கூறுவது எனது காதுகளுக்குக் கேட்கின்றது. ஆனால் அந்த நிலை நிரந்தரமானதாக இருக்காது. வெளிநாட்டுப் புலம்பெயர் எமது மக்களின் உதவியுடன், எமது கொடையாளிகளின் உதவியுடன் பல செயற்றிட்டங்களைச் செயன்முறைப்படுத்தப் போகுங்காலம் வெகு தூரத்திலில்லை.

படித்தவர்களும் பாமரர்களும் ஏதாவது தொழில்களில் ஈடுபட வேண்டும். கணனி பாற்பட்ட தொழில்களையும் சிறுகைத் தொழில்களையும் நாம் ஊக்குவித்து வருகின்றோம். எம்மைப் பொறுத்தவரையில் பாரிய தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் நிறுவி மக்களை ஒரு இடத்திற்குக் கொண்டு வந்து பலவித சமூகச் சிக்கல்களை ஏற்படுத்தாது எமது சூழலை தொடர்ந்திருக்கச் செய்து மக்கள் தாம் இருந்த இடங்களில் இருந்தே சிறுகைத் தொழில்களில் ஈடுபடவும், சந்தை வாய்ப்புக்களைப் பெறவும் நாம் ஆவன செய்து வருகின்றோம்.

ஆகவே இன்றைய கொடைகள் கையளிக்கும் நிகழ்வு பாதிப்புற்ற மக்களின் மனங்கள்வருடப்பிறப்பின்போது மன மகிழ்வை ஏற்படுத்தவே நாமும் எமது கொடையாளர்களும் சேர்ந்து செய்யுங் கைங்கரியம். தொடர்ந்து உங்களை கையேந்துபவர்களாக நாங்கள் வைத்திருக்க மாட்டோம். ஆகவே சிறிய மத்திய தர தொழில் முயற்சிகளில் யாவரும் இறங்க முன் வர வேண்டும். உதாரணத்திற்கு நெசவுத் தொழிலை மக்களிடையே பரப்பி அவர்களின் படைப்புக்களை ஏற்று சந்தைப்படுத்தி பயனைப் பெறலாம். இவ்வாறான தொழிலகளில் நீங்கள் ஈடுபடவும் எமது கொடையாளர்கள் உதவுவார்கள் என்பதற்கு ஏற்கனவே டிமார்க் ஜெயராஜ் உத்தரவாதம் அளித்துள்ளார்.

அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!. எங்கள் தொழிற்திறனை மேம்படுத்த வேண்டும். எமது கைத்தொழில்களின் தரத்தைநாம் மேம்படுத்த வேண்டும். மற்றவர்களின் உதவிகளை எதிர்பார்க்கும் குணம் போய் தன்னுறுதியுடன் தங்கள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்க எம்மவர்கள் பழகிக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## லொக்கு பண்டார 18 மில்லியன்களை கேளிக்கைகளுக்கு பயன்படுத்தினார்!



சப்ரகமுவ மாகாண முனனாள ஆளுநர்டபிள்யூ ஜே.எம். லொக்கு பண்டார சுமார் 18 மில்லியன்ரூபா பொது மக்களின் நிதியை பல்வேறு கேளிக்கை நிகழ் வுகளுக்கு பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு இந்த நிதியைக் கொண்டு பலருக்கு வெகுமதிகளும் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வு திணைக்களத்தின் அறிக்கையின் மூலமே இது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதேவேளை விரைவிலஇலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு விசாரணைக்காக லொக்கு பண்டார அழைக்கப்படுவார் என சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1985 இந்து, நட்சத்திரம்: உத்தரம், கி.பா:41, உயரம்: 5'5", தகைமை/தொழில்:O/L/சவுதி, தொ.இ: B/5701
- பிறப்பு: 1981 இந்து, நட்சத்திரம்: அவிட்டம், கி.பா: 57சூரிசெவ் 7 இல், உயரம்: 5'6", தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில், தொ.இ: B/5704
- பிறப்பு: 1987 இந்து, நட்சத்திரம்: உத்தராடம், கி.பா: 18, உயரம்: 5'4", தகைமை/தொழில்:O/L/சொந்தம், தொ.இ: B/5705
- பிறப்பு: 1978 இந்து, நட்சத்திரம்: ஆயிலியம், கி.பா: 30செவ் 2 இல், உயரம்: 173cm, தகைமை/ தொழில்:பொறியியளாளர் சுவிஸ், தொ.இ: B/5706

இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1986 இந்து, நட்சத்திரம் உத்தரட்டாதி, கி.பா: 44செவ் 4 இல, உயரம்: 5'2", தகைமை/தொழில்:A/L/ அரசதொழில், தொ.இ: G/5702
- பிறப்பு: 1990 இந்து, நட்சத்திரம்: திருவோணம், கி.பா: 30செவ் 7 இல், உயரம்: 5'5", தகைமை/தொழில்:BA, தொ.இ: G/5711
- பிறப்பு: 1988RC, உயரம்: 5'1", தகைமை/தொழில்:பட்டதாரி/ விரிவுரையாளர், தொ.இ: G/5712
- பிறப்பு: 1992 இந்து, நட்சத்திரம்: பூரட்டாதி, கி.பா: 29செவ் 1 இல, தகைமை/தொழில்:O/L, தொ.இ: G/5715

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# காட்டை அழித்த றிசாத்தை அரசாங்கம் பாதுகாக்கிறது



## பொதுபல சேனா குற்றச்சாட்டு



நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்க பாடுபட்ட அரசியல் தலைவர்களை பாதுகாப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. வில்பத்து காடழிப்புக்கு பொறுப்பான றிசாத் பதியுதீனுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்ததை விடவும் பொறுப்பு வாய்ந்த அமைச்சுக்களை வழங்கி அவரைப் பாதுகாத்து வருகினறது என பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே குற்றம்சாட்டினார்.

அதேபோன்று குற்றவியல் திணைக்களத்தில் முன் வைக்கப்பட்ட முறைப்பாடுகளுககு இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லையெனவும் அவர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார். (இ-5)

## சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு

# தகைமைச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும்

## திட்டப் பணிப்பாளர் வலியுறுத்து



சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கும்போது தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் வழங்கப் படவேண்டியது அவசியம் என யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸவரன் தெரிவித்துள்ளார்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்டச்செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவினால் "யாழ்.முயற்சியாளர் - 2016" விற்பனைக் கண்காட்சி நேற்றையதினம் யாழ் மாநகரசபை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆந்த ஆரம்பநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுதொழில் முயற்சியாளர்களை இணைத்து அவர்களது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கிலும் தரத்தினை மேம்படுத்தும் நோக்கிலும் இக் கண்காட்சி ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் முதலாவது விற்பனைக்கண்காட்சி இதுவாகும். இதில் யாழ். மாவட்டத்திலுள்ள 82 தொழில் முயற்சியாளர்கள் வருகைதந்து அவர்களின் உற்பத்திப்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டச் செயலகமானது அனைத்து துறைகளை போன்றும் கைத் தொழில் துறையையும் மேமபடுத்தும் நோக்கில் பல செயற் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து தொழில் முயற்சியாளர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களை ஒருங்கிணைத்து அவர்களின உற்பத்திப் பொருட்களுக்கு சிறந்த தரத்திலான சந்தை வாய்ப்பினை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் அரச அதிபரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் தாமாகவே உற்பத்திகளை மேற்கொண்டு தாமாகவே சந்தைவாய்ப்பினை தேடிக் கொள்கிறார்கள். அவர்களின் உறபத்திகளை சிறந்த முறையில் ஒழுங்கான முறையில் வடிவமைத்து வெளி இடங்களுக்கு சந்தைப்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கான பல செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

அதன் முதற்கட்ட திட்டமாக யு.என்.டி.பி.நிறுவனத்தினால 200 தொழில் முயற்சியர்ளர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் உற்பத்திப்பொருட்களை தெரிவுபடுத்தி அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி அவர்களின் உற்பத்தி களை எஸ்.எல்.எஸ் தரத்தில் உருவாக்குவதற்குரிய துறைசார்வல்லுநர்களினதும் உதவிகளை பெற்றுக்கொடுக்கவுள்ளோம்.

எமது மாவட்டத்தில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழில முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களுடன் கலந்துரையாடியதற்கமைவாக யாழ். மாவட்ட சிறு தொழில் முயற்சியாளர் சங்கம் அல்லது சமாசம் என்ற ஒன்றினை உருவாக்கி தம்மை ஒருங்கிணைக்குமாறு கோரியுள்ளார்கள். இதை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளேன்.

மேலும் இங்கு அரச தனியார் நிறுவனங்கள் சிறு கைத்தொழிலாளர்களுககு பயிற்சிகளை வழங்குகின்றார்கள். ஆனால் பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ்களை வழங்குவதில்லை.

எனவே சிறு தொழில் முயற்சியாளாரை வலுப்படுத்தும் நோக்கில் பயிற்சி பெற்றவர்களுக்கு தேசிய தொழில் தகைமைச்சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# செய்தித்துளிகள்

## 40 அடி பள்ளத்தில் விழுந்தது கார் விபத்து

### பெண் பரிதாபமாக பலி

பண்டாரவளை-அப்புத்தளை பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த காரொன்று, வீதியை விட்டு சுமார் 40 அடி ஆழமான பள்ளத்துக்குள் விழுந்ததில், குறித்த காரில் பயணித்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அதே காரில் பயணித்த தாயும் சகோதரனும் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 22 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (இ-5)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

மித்தெனிய பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இனந்தெரியாத நபரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டிய பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோ மீதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-5)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று

துன்னாலை தெற்கு,கலிகை கந்தசுவாமி கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 21 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-5)

✦✦✦✦✦✦✦

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தான துவஜாரோகண மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 11 தினங்கள் திருவிழா நடை பெறும்.

எதிாவரும் 20 ஆம் திகதி புதன் கிழமை இரதோற்சவமும் மறுநாள் வியாழக் கிழமை சித்திரா பூரணை தீர்த்தமும் நடைபெறவுள்ளது. (இ-5)

## மகிந்த மலர்வளையங்களிலும் தரகுப் பணம் பெற்றாரா?

முன்னாள் ஜனாதிபதி கொள்வனவு செய்த பெறுமதி மிக்க மலர்வளையங்கள் தொடர்பிலான நிதி முறைகேடு குறித்த விசாரணைகளை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் தடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச பொதுமக்களின் வரிப்பணங்களின் மூலம் பெறுமதி மிக்க மலர்வளையங்களை கொள்வனவு செய்துள் ளார்.

இதன்போது அவர் மலர்வளையங்களின் பெறுமதியைக் காட்டிலும் அதிக விற்பனை விலைகளிலேயே அதற்கான பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் சீ.ஐ.டி. விசாரணைகளை முன்னெடுத்துள்ளபோதும் அதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் சில அதிகாரிகள் தடை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# யாழ்.முயற்சியாளர் - 2016 விற்பனைக் கண்காட்சி







(படங்கள்:- பொ.சோபிகா)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்டச்செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் "யாழ் முயற்சியாளர் - 2016" விற்பனைக் கண்காட்சி நேற்றையதினம் யாழ் மாநகரசபை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண சிறு கைத் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகம் செய்யும் நோக்கிலும் அதற்கான சந்தைவாய்ப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் யாழ் மாவட்டச்செயலக சிறுகைத் தொழில் அபிவிருத்திப் பிரிவினால் நேற்றைய தினம் இக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் தலைமைக்காரியாலய பணிப்பாளர் சுதீர ஜயரத்ன, யாழ். மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதமலர்மோகனேஸ்வரன், யாழ். சணச அபிவிருத்திவங்கியின் முகாமையாளர் சுப்பிரமணியம் சபேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்ட இக் கண்காட்சி இனறையதினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நடைபெறவுள்ளது. (இ-9)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை கிளிநொச்சியில் 25 ஆம் திகதி ஆரம்பம்

(மல்லாவி)

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும்ஜனாதிபதிஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான விசாரணைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை வரை தொடர்ந்து 3 தினங்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்நடைபெறும்எனஆணைக் குழுவின் செயலாளர் எஸ்.டிபிள்யூ. குணதாச அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக மக்களை விழிப்பூட்டும்செயற்றிட்டங்கள் குறித்த கலந்துரையாடல் ஒன்று பிரதேச செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் மட்டத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஒரு கோடி30இலட்சம் ரூபா நிதியில் வேலைகள் முன்னெடுப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச சபைக்குட்பட்ட இரண்டு வீதிகள் ஒரு இறுதிக் கழிவு சேகரிக்கும் இடம் ஆகியவற்றின் வேலைகளுக்கு ஒரு கோடியே 30இலட்சத்து 80ஆயிரம் ரூபா நிதிகிடைக்கப் பெற்றுள்ளதாக துணுக்காய் பிரதேச சபை செயலாளர் கந்தசாமி சத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் கோத்தம்பியா குளம் இராமவீதி 750மீற்றர் தூரத்திற்கு கல்லிட்டு தார் வீதியாக புனரமைப்பு செய்வதற்கு 40இலட்சம் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியான 90 இலட்சத்து 80ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்விளான் கிராமத்தில் அமைந்துள்ள பிரதேச சபைக்குரிய இறுதிக்கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும்இடத்திற்கு சுற்றுவேலி அமைப்பதற்கும் அதன் உள்ளக வீதி புனரமைப்பு செய்வதற்கும் 20இலட்சத்து 65 ஆயிரம் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

அத்துடன் ஐயங்கன்குளம் கிராம வீதி ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு கல்லிட்டு தார் வீதியாக புனரமைப்பு செய்வதற்கு 70 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதியாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

மேற்படி வேலைகள் அனைத்தும் எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் மாதமளவில் நிறைவு பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்களில்

# கடும் வெப்பநிலை காரணமாக தோல் நோய்களின் தாக்கம் அதிகரிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அண்மை நாட்களாக நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட பொதுமக்கள் ஆகியோர் தோல் சம்பந்தமான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் சின்னம்மை, கூவைக் கட்டு ஆகிய வெப்ப நோய்களி னால் தாக்கமுற்று வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

அண்மை நாட்களாக மேற்படி மாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கத்தினால் கடும் வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதுடன் பொது மக்களும் தோல் நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்களின் கைகள், தோள் பகுதிகள் ஆகியவற்றில் கொப்புளங்கள் தோன்றுவதுடன் உதட்டுப் பகுதியில் வெடிப்பு ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பில் வைத்தியர்கள் கருத்துத் தொரிவிக்கையில் ,

தற்போதைய வெப்பநிலை தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முற்பகல் 11 மணியில் இருந்து பிற்பகல் 4 மணி வரையிலான நேர இடை வெளியில் வெளி நடமாட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கின்றனர்.

அத்தோடு கூடுதலாக தண்ணீரைப்பருகுவதுடன் இளநீர், தயிர் போன்ற குளிர்மையான பொருட்களையும் உண்ணுமாறு தெரிவித்துள்ளார்.

நோய் தாக்கத்துக்குள்ளானவர்கள் அருகில் உள்ள வைத்திய சாலைகளை நாடி சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (2-15)

# புது வருடத்தை எவ்வாறு கொண்டாடுவது முன்பள்ளி சிறார்களுக்கு கற்பிக்கப்பட்டது



முல்லைத்தீவு மாவட்டத்தின் பனிக்கன்குளம் கலைமகள் முன்பள்ளியில் தமிழ்– சிங்கள புது வருடத்தை முன்னிட்டு முன்பள்ளி சிறுவர்களுக்கு பாரம்பரிய நிகழ்வைக் கொண்டாடும் முறை தொடர்பில் அண்மையில் கற்பிக்கப்பட்டது.

இதன்போது தமிழ் சித்திரை புத்தாண்டை எவ்வாறு கொண்டாடுவது, அந் நாளில் எவ்வாறான நிகழ்வுகளைச் செய்வது என்பவை தொடர்பாக சிறார்களுக்கு கற்பிக்கப்பட்டது. (2-281)

# பரீட்சைகளில் சித்தியெய்திய மாணவர்கள் கௌரவிப்பு

(குருமன்காடு)

வவு., செட்டிகுளம் மகா வித்தியாலத்தில் 2015 ஆம் ஆண்டு தரம் 5, க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா நேற்று முன்தினம் அதிபர் செ.தர்மரட்ணம் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ். அன்ரன் சோமராஜா, கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) க.அ.சிவனருள்ராஜா, வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) து.லெனின் அறிவழகன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது சாதனை நிலை நாட்டிய மாணவர்களுக்கு கௌரவிப்புக்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (2-250)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில்

# 585 மாணவர்கள் பெற்றோரை இழந்த நிலையில் கல்வி பயின்று வருகின்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் பெற்றோரை இழந்த 585 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர் என மேற்படி பணிமனைத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட 104பாடசாலைகளில்32ஆயிரத்து245மாணவர்கள்கல்விபயின்று வருகின்றனர்.

இந்நிலையில் பெற்றோரை இழந்த 585 மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன் தந்தை மட்டும் இழந்தநிலையில்ஆயிரத்து459மாணவர்கள்கல்விபயின்றுவருகின்றனர்.

இதேவேளை இம் மாணவர் களில் அதிகமானோர் கடந்த கால யுத்தத்தில் பெற்றோரை இழந்துள்ளதுடன் விசேட தேவைக்குரிய மாணவர்களாக 444பேர் காணப்படுவதுடன் இவர்கள் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 17 விசேட கல்வி அலகுகளின் ஊடாக கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர்எனஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-272)

# ஒழுக்கமுடைய எதிர்கால சந்ததியினரை உருவாக்க அனைத்து தரப்பினரினதும் பங்களிப்பு அவசியம்

## சாந்தி எம்.பி. வலியுறுத்து

ஒழுக்கமுடைய எதிர்கால சந்ததியனரை உருவாக்க எமது சமூகத்தினர் அனைத்து தரப்பினரும்ஒன்றிணைநது பங்களிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அறநெறி பாடசாலைகளை சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஆகியோருடனான கலந்துரையாடலொன்று அண்மையில் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரதாபன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது உரையாற்றிய தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, எமது இளைய சமூகம் கலாசார ரீதியாக பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்கி வருகின்றது.இச்சவால்கள் அனைத்தும் எமது இனத்தின் எதிர்கால இருப்பினை கேள்விக்குள்ளாக்கும் வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. எனவே எமது சமூகத்தின் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒழுக்கமுடைய எதிர்கால சந்ததியை உருவாக்க பங்களிக்க வேண்டும். குறிப்பாக எமது பெற்றோர் பிள்ளைகளின் ஒழுக்க நெறி விடயங்களில் கூடிய அக்கறையுடன் செயற்பட வேண்டுமென வும் தெரிவித்ததுடன அறநெறி வகுப்புக்களை நடத்தி வருகின்ற ஆசிரியர்களின்சேவையானதுஎமது மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான தெனவும் தெரிவித்தார். இந்நிகழ்வில் அறநெறி ஆசிரியர்கள் மற்றும் அறநெறி கற்பிக்கின்ற ஆலய நிர்வாக சபையினர் எதிர்நோக்கிவரும் சவால்கள் பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.எதிர்காலத்தில் பிரதேச செய லத்திற்குட்பட்ட பகுதிகளின் அறநெறி பாடசாலைகளை ஒன்றிணைத்து அறநெறி ஒன்றியத்தின் உருவாக்கம் பற்றியும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.(2-281)




# பழைய மாணவர் சங்க நிர்வாகத்தெரிவு

(பனிக்கன்குளம்)

மு/வித்தியானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்க முற்பகல் பத்து மணிக்கு கல்லூரி கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் பாடசாலை பழைய மாணவர்கள் பலரும்கலந்து கொண்டனர்.

இதன்போது பழைய மாணவர் சங்க தலைவராக பாட சாலை அதிபர் க.சிவலிங்கம் செயலாளராக செ.சிவராசா, பொருளாளராக க. விஜிந்தன்,உப செயலாளராக பா.விதுரன் ,விளை யாட்டுக் குழுவிற்கு ம.விக்னேஸ் வரன் ஆகியோர் தெரிவாகினர்.

இதேவேளை 8 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (2-281)

# காத்தவராயன் சிந்துநடை கூத்துப்போட்டி

முல்லைத்தீவு மாவட்ட கலைஞருக்கான மாபெரும் காத்தவராயன் சிந்து நடைக்கூத்துப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இருந்து நள்ளிரவு வரை மு/வித்தியானந்தாக் கல்லூரியில் வன்னிக்குறோஸ் கலாசாரப் பேரவைத் தலைவர் சி.நாகேந்திர ராசா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

குறித்த போட்டி முல்லைத்தீவு மாவட்ட வன்னிக்குறோஸ் கலாசாரப் பேரவையின் ஒழுங்கமைப்பிலும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவிலும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)



தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சின் அனுசரணையின் கீழ் இயங்கும் “சிரமவாசனா” நிதியத்தின் பங்களிப்புடன் கௌரவ தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனவிரட்னவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களுக்கான இலவச கண்மருத்துவ முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி வளாகத்தில் முற்பகல் பத்து மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் 90 ற்கும் மேற்பட்டோர் பங்குபற்றினர்.இவர்களுக்கான இலவச கண்பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இன்றைய சூழலில் குழந்தைகள், சிறுவர்கள் பாதுகாப்பற்ற சூழலில் வளர்க்கப்படுகின்றார்கள்

## இதனால் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது என்கிறார் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி




கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெறுகின்ற சட்ட விரோதமான செயற்பாடுகளை தீர்ப்பதற்கு பொலிஸாருக்கு மட்டுமே கடமையுண்டு என பொதுமக்கள் கருதுகின்றனர் என கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.சில்வா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் பொது அமைப்புக்களின் தலைவர், செயலாளர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.சில்வா, போக்குவரத்து அதிகாரி எஸ்.தனபால, சமூக சிவில் பொறுப்பதிகாரி டி.ஜி.ஜெயசிறி ஆகியோருடன் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற சட்ட விரோதமான செயற்பாடுகளான கசிப்பு உற்பத்தி விற்பனை, மணல் அகழ்வு, மதுபான விற்பனை, சிறுவர் பெண்கள் மீதான துஷ்பிரயோகங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் மக்கள் பிரதிநிதிகளால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போதே கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தற்போது சமூகம் முகம் கொடுக்கும் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பொலிஸாருக்கு மட்டுமே கடமையுண்டு என பொதுமக்கள் கருதுகின்றனர்.

ஆனால் விடயங்களில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், திணைக்களங்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவருக்கும் பொறுப்பும் கடமையும் உள்ளது.

ஒவ்வொரு பெற்றோருக்கும் தங்களின் பிள்ளைகளை பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது.

இன்றைய சூழலில் சிறுவர்கள் அல்லது குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழலில் வளர்க்கப்படுகின்றார்கள், வளர்கின்றார்கள். இதனால் அவர்கள் துஷ்பிரயோகங்களுக்கும் பாதிப்பிற்கும் உள்ளாக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாற்றப்படுகின்றது.

இதனால் அவர்களின் கல்வி முழுமையாகப் பாதிக்கப்படுகின்றது.

நாம் பொலிஸார் என்ற வகையில் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையிலும் சட்டங்களின் அடிப்படையிலும் மக்களுக்கான பணிகளை ஆற்றி வருகின்றோம்.

இதேவேளை வீதி விபத்துக்களை தடுப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்றோம். இவ்வாறான பிரச்சினைகளை பொலிஸ் திணைக்களம் மட்டுமே இல்லாதொழிக்க முடியாது. அனைத்து தரப்பினரினதும் கூட்டு முயற்சி ஊடாகவே இவற்றை ஒழிக்க முடியும். அத்துடன் சிறந்ததொரு சூழலையும் உருவாக்க முடியும்.

இதுபோன்ற கலந்துரையாடல்கள் எதிர்வரும் காலங்களில் நடைபெற வேண்டும். இது சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் செயற்குழு உறுப்பினர்கள் வர்த்தக சமூக அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், செயலாளர், சிகை அலங்கரிப்போர் சங்கம், தனியார் பேருந்து சங்கத்தினர், தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியம், இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி கிளை, மகளிர் அபிவிருத்தி நிறுவனம், மகா சக்தி மகளிர் சம்மேளனம், கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட சங்கம், கிளிநொச்சி தமிழ்ச்சங்கம் ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்க்ள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (2-277)




# சோலைநகர் ஊடாக மேற்குபுறம் செல்லும் பிரதான வீதியின் நிலையோ படுமோசம்



கிளிநொச்சி சோலைநகர் கிராமத்தின் ஊடாக மேற்குப் புறப் பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள நிலையில் போக்குவரத்து செய்ய முடியாக வகையில் துண்டிக்கப்பட்டு காணப்படுகின்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் சிவன் சோலை, சிவநகர், உருத்திரபுரம், சோலைநகர் கிராமங்களைச் சேர்ந்த குறித்த வீதியூடாகவே கிளிநொச்சி மேற்கு பிரதேசங்களுக்கான போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் மக்களின் மீள்குடியேற்றத்தின் பின்னர் இப்பாதை புனரமைப்பு செய்யப்படாதுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள் ஆகியோரினால் தெரியப்படுத்தப்பட்ட போதும் எவ்விதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-272)

# நடைபாதை வியாபார நடவடிக்கைக்கு ஒருவார காலத்திற்கு முற்றாகத்தடை

## கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சந்தைகளை சூழவுள்ள பகுதிகளில் (இரண்டு கிலோ மீற்றருக்குட்பட்ட) நேற்று தொடக்கம் ஒரு வார காலத்திற்கு நடைபாதை வியாபார நடவடிக்கைக்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் அறிவித்துள்ளார்.

எனினும் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக கரைச்சி பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்று சபையினால் ஒதுக்கப்பட்ட இடத்தில் வியாபார நடவடிக்கைகளை வர்த்தகர்கள் மேற்கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கரைச்சி பிரதேச சபையினரால் ஒதுக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட இடத்தை தவிர ஏனைய இடத்தில் எந்தவொரு வியாபாரச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு சட்டத்தை மீறி செயற்படும் வர்த்தகர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக தகவல் தேவைப்படின் 070 291 9200 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென அவர் கூறியுள்ளார். (2)

# அம்பாள்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுப்பு




(மல்லாவி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள அம்பாள் குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த பகுதியில் பொது மக்கள் குடியேறி வாழ்ந்து வரும் நிலையில், கண்ணி வெடிகள் காணப்பட்டதை அடுத்து சம் பநதப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது, அதன் படி ஜப்பானிய நிதி ஒதுக்கீட்டில் குறித்த பகுதியில் கண்ணி வெடி அகற்றும் பணிகள இடம் பெற்று வருகின்றன.

எனினும் குறித்த பகுதியில் கண்ணி வெடி அகற்றும் செயற் பாடுகள் இடம்பெறும் நிலையில், அருகில் வீடுகள் காணப்படுவதுடன், சிறுவர்களின் நடமாட்டமும் காணப்படுகின்றது.

குறித்த பகுதியில் இருந்து அகற்றப்பட்டு வரும் கண்ணிவெடிகள் தொடர்பில், அருகில் உள்ள மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்பதுடன், அகற்றப்படும் நேரங்கள் தொடர்பில் அப்பகுதி மக்கள் அவதானத்துடன் செயற்படும் வகையில் கையாளப்பட வேண்டும் எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கண்ணி வெடி அகற்றும் பகுதியிலிருந்து 20 மீற்றர் தொடக்கம் முதல் மக்கள் வாழந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.(2-15)

# காடழித்து 30 ஏக்கர் நிலப்பரப்பில் முல்லைத்தீவில் இராணுவ முகாம்

## வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் காசிநகர் அண்மித்த பகுதியில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் காடுகளை அழித்து அங்கு இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். காசிநகர் பகுதியை அண்மித்த குமுழ முனை பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பாரிய காடழிப்பு பெரும் போராட்டங்களின் பின்னர் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது இராணுவத்தினர் காடழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.


இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்தும் காடழிப்பு நடைபெற்று வருவதாவும் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இராணுவத்தின் இந்த காடழிப்பு நடவடிக்கை தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, உப்பு மாவெளி சாமி தோட்டம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த படைமுகாம் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு காசிநகர் கிராமத்தின் பின்புறமாக உள்ள கனடியன் வீதியின் நிறைவில் உள்ள இடத்தில் சுமார் 30 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக அப்பகுதி மக்கள் எம்மிடம் முறையிட்டனர். இதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தேன். முன்னர் காடழிப்பு இடம் பெற்ற நிறைவு பகுதியில் காடழித்து குறித்த இராணுவ முகாம் அமைக்கப்படுகின்றது என அவர்கூறினார். இந்த விடயத்தை உடனடியாக முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். வடக்கு மாகாண முதலமைச்சர் ஆக்கபூர்வமான நடவடிக்கையினை உடனடியாகவே எடுத்துள்ளதாக அறிய முடிகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்து வெவ்வேறு வடிவங்களில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் ஏனைய வளங்களும் அழிக்கப்பட்டு கேட்பாரின்றிக் கொள்ளையிடப்படுகிறது. முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கைகட்டி பார்த்துக் கொண்டிருக்கும் நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது எனவும் ரவிகரன் மேலும் தெரிவித்தார். (2-281)

# SLEAS போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள்

## விடய ஆய்வு தொடர்பான வினா



வலம்புரியில் கடந்த சில நாட்களாகத் முகாமைத்துவம் தொடர்பான குறிப்புக்கள் வெளிவந்த பொழுது பல நூற்றுக் கணக்கான வாசகர்கள் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்ததுடன், எவ்வாறு ஒரு விடய ஆய்வு ( Case Study) தொடர்பான வினாவுக்கு விடையளிக்கலாம் என்ற பகுதியையும் பிரசுரிக்குமாறும் கேட்டிருந்தனர். அவர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், சில மாதிரி விடய ஆய்வுகளை இங்கு தருவதுடன், அவற்றை எவ்வாறு எழுதலாம் என்ற குறிப்புக்களும், வழங்கப்படுகின்றன. பரீட்சார்த்திகள் இதில் நிறைந்த பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் வகையில், மிக எளிமையான பகுதியில் இருந்து வினாக்கள் ஆரம்பிப்பதால், அவற்றிற்கான விடைகளை வலம்புரிக்கு அனுப்பி வைப்பீர்களாயின் மிகப் பொருத்தமான விடைகளை எழுதியவர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்

ஒரு பாடசாலையில் நிகழும் அன்றாட நிகழ்ச்சியில் ஒரு அதிபரின் செயற்பாடு மற்றும் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் எவ்வாறு தமது கடமைகளைச் செய்ய வேண்டுமென்ற தரவுகளைக் கொண்டதாக சாரதா வித்தியாலயத்தில் ஒருநாள் நடைபெற்ற சம்பவத்தை விடய ஆய்வாக வழங்குகின்றேன்.

இன்று வடமாகாணம் கல்வித் தரத்தில் 9 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்ட நிலையில் இது பற்றிச் சிந்திக்கும் வகையில் இந்தச் சிறிய சம்பவக் கற்கையை வாசித்து சிந்திப்பதற்காகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**சிவபுரி சாரதா வித்தியாலயம**

பின்தங்கிய கிராமமான சிவபுரியில் உள்ள சாரதா வித்தியாலயம் தரம்-2 பாடசாலை. இங்கு வகுப்பு 1 இல் இருந்து 11 வரையுள்ள வகுப்புகளில் 113 மாணவர்களும் 9 ஆசிரியர்களும் உள்ளனர். அதிபர் செல்வநாதன் அந்த ஊரில இருந்து ஆறு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நகரப் பகுதியில் இருந்து உந்துருளியில் வந்து போவார். ஒன்பது ஆசிரியர்களில் ஏழு ஆசிரியர்கள் வெளியூர்களைச் சேர்ந்தவர்கள். சுந்தரமூர்த்தியும் அவரது மனைவியான அஞ்சலி ஆசிரியையும் அந்தப் பாடசாலைக்கு அண்மையில் இருந்து வருகை தருபவர்கள். இந்தப் பாடசாலைக்கான பொதுப் போக்குவரத்து வசதிகள் இல்லாததால், அநேகமான ஆசிரியர்கள் உந்துருளிகளில் வருவார்கள். பாடசாலை ஆரம்பமாகும் நேரத்தில் பாடசாலை அபிவிருத்திச் சபை இயங்கிய காலத்தில் நியமிக்கப்பட்ட சிற்றூழியரான சண்முகம், பாடசாலையைத் திறந்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து வைத்திருப்பார். பிள்ளைகள் நேரத்துடனேயே வந்து கிட்டிப் புள் அடித்து விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஆறு மாணவர்களைக் கொண்ட க.பொ.த. (சா/த) வகுப்பின் மாணவர்கள் தமது வகுப்பறையில் ஆங்காங்கே இருக்கும் மாட்டெருக்களை அள்ளுவதும், வகுப்பை ஒழுங்கு செய்வதும் அவர்களது நாளாந்த வேலைகளாக இருக்கும். அதிபர்,நகரப் புறத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றும் தனது மனைவியையும் 5 வயது மகளையும் பாடசாலையில் கொண்டு போய் விட்டபின் காலை 8.40 மணியளவில் வந்து விடுவார். அதற்கிடையில் நகரப்புறத்தில் இருந்து வரும் ஆசிரியர்களில் இரண்டு பேர் பாடசாலைக்கு வந்து விடுவார்கள். அவர்களும் வந்தவுடன் கையொப்பக் கொப்பியில் முதலாவது வரியை அதிபருக்காக இடத்தை விட்டு அவர்கள் தமது கையொப்பத்தை வைத்து விட்டு நேராக ஆசிரியர் அறைக்குச் சென்று தாம் கொண்டு வந்த காலை உணவைச் சாப்பிடத் தொடங்கிவிடுவார்கள். அவர்கள் வகுப்புக்குச் செல்லும்பொழுது முதலாவது பாடம் முடிந்து விடும். அப்பொழுதுதான் வியர்த்து விறுவிறுக்க அருகில் உள்ள அஞ்சலி ஆசிரியையும், அவரது கணவரான சுந்தரமூர்த்தி ஆசிரியரும் வந்து சேர 9 மணியாகிவிடும். அப்பொழுது அதிபர் அவர்களைக் கண்டும் காணாதவர் போல் இருந்து தனது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

"நான் வெளியூரில் இருந்து வாற படியால் ஏன் இந்த ஊர் ஆட்களோடை பிரச்சினைப் படுவான். இது அவர்களுடைய ஊர்" என்று ஒரு சிலருடன் தனது அபிப்பிராயத்தைப் பரிமாறிக் கொள்வார். அதே வேளை பொதுவாக வலய மட்டத்தில் ஆசிரியர் வாண்மை விருத்தி தொடர்பாக ஒழுங்கு செய்யும் செயலமர்வுகளிலும் ஆசிரியர்கள் பங்குபற்றுவது குறைவாகவே உள்ளது.

பாடசாலையில் பழைய மாணவர்களுக்கான சங்கமோ பாடசாலை அபிவிருத்திக் குழுவோ என்று எதுவுமே இல்லை. அதே போன்று புதிதாக நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயலமர்வுகளிலும் அதிபர் கலந்து கொள்ளாததால் இதில் கூறப்பட்ட விடயங்கள் பற்றியும் அறிந்திருக்கவில்லை. பொதுவாக பெற்றோரும் அந்தப் பாடசாலைக்கு வருவது குறைவாக இருந்ததால், பொது மக்கள் தொடர்பும் இல்லாது போய் விட்டது.

சுந்தரமூர்த்தி ஆசிரியரைக் கொண்டே பல வேலைகளைச் செய்விப்பதால், அந்தக் கிராமத்துடன் அவருக்கு நேரடியாக எந்தத் தொடர்பும் இல்லை. அதனால் அதிபருக்குப் பிரச்சினைகளும் குறைவாகவே இருந்தன. பாடசாலை வேலைகளிலும், உள்ளூர் வேலைகளிலும் கூடிய நேரத்தை சுந்தரமூர்த்தி ஆசிரியர் கழிப்பதால், கற்பித்தல் வேலைகளில் அதிகம் ஈடுபாடு காட்டாமுடியாதிருப்பதைப் பற்றி அவரும் அதிகளவில் கவலைப்படவில்லை. ஆனால் அதிபர், அவர் மீது அதிக நம்பிக்கை கொண்டிருப்பதால், அந்தப் பாடசாலையின் அதிபர் போன்றே தன்னைக் காட்டிக் கொள்ளுவார். அதன் காரணமாக ஏனைய ஆசிரியர்களுக்கும் அவர்மீது ஒரு பயம் இருந்தது.

அதிபருடைய மேசையில் எப்பொழுதும் கோவைகளும், பழைய பத்திரிகைகளும் நிறைந்துபோய் இருக்கும். மேசையின் மேற்பரப்பு தூசிபடிந்து போய் இருக்கும். சண்முகம் பாடசாலையைத் திறந்து ஒழுங்கு செய்யும் பொழுது அதிபரின் அலுவலகத்திற்குள் செல்வதில்லை. அந்த அறையின் திறப்பை அதிபர் கொண்டு செல்வதால், அவர் இல்லாத வேளைகளில் யாருமே அலுவலக அறையினுள் செல்வதில்லை.

தர உள்ளீட்டுக் கணக்குகள், உலக உணவுத்திட்டம் தொடர்பான கணக்குகள் போன்ற முக்கியமான விடயங்களை அதிபரே செய்து கொள்வதால் கணக்கு வைப்பு தொடர்பாக எந்தப் பிரச்சினையும் அங்கே இருப்பதில்லை. இது தொடர்பாக வலயம், மாகாணம் ஆகியவற்றில் இருந்து வருகை தரும் அதிகாரிகளும் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்களும் ஓரளவு திருப்தி அடைந்தவர்களாகவே செல்வதால், அதிபர் இது தொடர்பாகத் தனது மகிழ்ச்சியை வெளிக்காட்டவும் தவறுவதில்லை. அந்தப் பாடசாலையில் இருந்து இதுவரை 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் தேர்வில் எவருமே தெரிவு செய்யப்படாதது இந்த ஊரவர்களுக்கும் கவலை. க.பொ.த. (சா/த) பொதுப் பரீட்சையிலும் கூட ஒருவரும் சித்தியடைந்து உயர்தர வகுப்பில் கற்பதற்கான தகுதியை அடையவில்லை. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 15 வீதத்திற்குக் குறைவான மாணவர்களே சித்தி பெறுகின்றனர். 2011 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு 6 மாணவர்கள் மட்டுமே அனுமதி பெற்றிருந்தனர். ஏனைய வசதியான பெற்றோர் தமது பிள்ளைகளைத் தூரத்தில் உள்ள விபுலானந்த வித்தியாலயத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டனர். வலயத்தில் இருந்து மேற்பார்வை மற்றும் உரிய வழிகாட்டல்களைச் செய்வதற்குக்கூட எவரும் வருகை தருவதில்லை என்று சில படித்த பெற்றோர் குறைபட்டுக் கொள்வார்கள்.

வலயத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக விஞ்ஞான சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் சிவநேசன் புதுச்சேரிக் கிராமத்திற்கு அண்மையில் இருப்பதால், அந்தப் பாடசாலைக்கு அடிக்கடி வருகை தருவதால் அங்கே கற்பிக்கும் ஆசிரியர்களும் அவரை நன்கு அறிந்து வைத்துக் கொண்டிருந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமையானதால், சிவநேசன் அந்தப்பாடசாலையைத் தெரிவு செய்திருந்ததால் வழமைபோல் தனது காலை ரியூசன் வகுப்புகளை முடித்துவிட்டு 9.30 மணியளவில் தனது உந்துருளியில் பாடசாலைக்கு வந்து நேராக அதிபர் அலுவலகத்திற்குச் சென்றார்.

"Good Morning Sir…" அதிபருக்கு வணக்கம் செலுத்திய சிவநேசனை நிமிர்ந்து பார்த்த அதிபர் அவரைப் புன்முறுவலுடன் வரவேற்றார்.

"சேர்… விஞ்ஞான பாடத்தை மேற்பார்வை செய்ய வந்தனான். அஞ்சலி ஆசிரியையைப் பார்க்க வேணும். அவ வந்திருக்கிறா தானே சேர்."

" நான் அந்தப் பக்கம் போகேல்லை வந்திருப்பா என்றுதான் நினைக்கிறன்..சண்முகம்!.. ஆசிரியர் கையொப்பப் புத்தகத்தைப் பார்.:" அதிபர் சண்முகத்திடம் கூறவும்.

"ஓம் சேர். அவ இன்றைக்கு நீங்கள் வாறதுக்கு அஞ்சு நிமிசம் இருகக ஒன்பது மணிபோலதான் வந்தவ" சண்முகம் அங்கே இருந்த சூழலையும் கவனிக்காது, தனது மனதில் இருந்ததை அப்படியே கூறினார்.

"அப்ப சரி சேர் நான் அவவைப் பார்த்து விட்டு வாறன்."

என்று கூறியபடி வரவுக் கையொப்பத்தில் 8 மணி என்று எழுதிக் கையொப்பம் வைத்து விட்டு நேராக வகுப்பறைக்குச் சென்றார். அவரது ஒவ்வொரு செய்கையையும் சண்முகம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டே இருந்தார். அஞ்சலி ஆசிரியையைத் தேடிச் சென்ற சிவநேசன் 9 ஆம் வகுப்பில் இருந்த அஞ்சலி ஆசிரியையைப் பார்த்ததும் நேராக அந்த வகுப்பினுள் நுழைந்தார். 9 ஆம் வகுப்பில் விஞ்ஞான பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருந்த அஞ்சலி அவரைக் கண்டதும் கதிரையில் இருந்து, எழுந்து வரவேற்றார். அந்த ஒரு சில நிமிடத்திற்குள் மாணவர்கள் தங்களுக்குள் கதைகத் தொடங்கி விட்டனர்.

அன்று 15 மாணவர்கள் மட்டுமே இருந்தனர். பாரம்பரிய முறையில் வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எல்லா மாணவர்களும், தமது மேசையில் அரசினால் வழங்கப்பட்டிருந்த விஞ்ஞானப் புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டிருந்தனர். வகுப்பறை மூலையில் சில உடைந்த மேசை கதிரைகள் தூக்கிப் போடப்பட்டிருந்தன. அதற்குள் கழித்துப் போடப்பட்ட கடதாசித்துண்டுகள் மற்றும் கூட்டி ஒதுக்கப்பட்ட குப்பைகள் குவிந்து காணப்பட்டன.

"ரீச்சர்!… இன்றைக்கு என்ன அலகு படிப்பிக்கிறியள் ? எத்தனை மாணவர்கள் இன்றைக்கு வந்திருக்கினம்?"

"இரண்டு பேரைத் தவிர மற்றப் பெடியங்கள் எல்லாம் வந்திருக்கிறாங்கள். இன்றைக்கு ஒளித் தொகுப்பு பற்றிய பாடம் படிப்பிக்கிறன்" அந்த ஆசிரியையும், மிகவும் பணிவோடு சொல்லியபடி அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ரீச்சர் பாடக் குறிப்பு, பதிவேடுகள் எல்லாம் ஒழுங்காக வைச்சிருக்கிறியள் தானே?

இப்ப அடிக்கடி மாகாணத்தில் இருந்து ரீம் (Team) வாறபடியால் நாங்களும் இனிக் கவனமாக இருக்க வேணும். எங்கை உங்களுடைய கொப்பிகளைத் தாருங்கோ பார்ப்பம் .." சிறிது அதிகார தோரணையில் அதட்டிக் கேட்டதும், அஞ்சலி தலையைச் சொறிந்து கொண்டே,

" சேர்.. வீட்டிலை இருந்து வாற அவசரத்திலை அதை மட்டும் எடுக்க மறந்து விட்டன் நாளைக்கு வரேக்கை கொண்டு வாறன்" அஞ்சலி மிகவும் பணிவாகக் கூறியதும்,

"நீங்கள் இன்றைக்கு ஒன்பது மணிக்குத்தானே வந்தனீங்கள். பாடசாலைக்கு வாறதென்றால் எப்பவும் முன்னாயத்தத்தோடை வரவேணும். பொறுப்பில்லாத ஆககளாக இருக்கிறியள்." அவருடைய வார்த்தைகளைக் கேட்டதும மாணவர்களால் சிரிப்பை அடக்க முடியாது, தங்களுக்குள் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர்.

ஆசிரியையுடன் பேசிக் கொண டிருக்கும் பொழுதே சிவநேசன் அடிக்கடி தனது மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது நண்பகல் 12 மணியாகி வட்டது. முதலாம் வகுப்பில் படிக்கிற தனது மகளைக் கூட்டிவரப் போக வேண்டும் என்ற எண்ணம் வந்ததும், புறப்படுவதற்குத் தயாராகினார்.

"சரி ரீச்சர் இனிமேல் வரேக்கை எல்லாவற்றையும் ஒழுங்காகக் கொண்டு வாங்க..நேரமாச்சுது நான் போயிற்று அடுத்த கிழமை வரேக்கை பழசு எல்லாம் சேர்த்துப் பார்ப்பேன்"

அந்த வகுப்பறையில் இருந்தும் வெளியேறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சிவநேசன், அதிபரின் அறைக்குச் சென்று,

" சண்முகம் அண்ணை!…. என்ரை பதிவுக் கொப்பியை எடுத்துத் தாங்கோ.." சண்முகம் எடுத்துக் கொடுத்த சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களுக்கான பதிவேட்டில் தனது குறிப்புக்களை எழுதத் தொடங்கினார்.

"இன்று இப் பாடசாலையைத் தரிசித்து விஞ்ஞான பாடத்தை மேற்பார்வை செய்தேன். பதினைந்து மாணவர்கள் சமூகமளித்திருந்தனர். பாடக்குறிப்பு தொடர்பாகவும், கற்றல்-கற்பித்தல் தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது"

தர உள்ளீட்டுக் கணக்கு தொடர்பான பற்றுச் சீட்டுக்களையும், உறுதிச் சீட்டுக்களையும் ஒழுங்குபடுத்துவதில் அதிபர், கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்ததால், சிவநேசனுடன் கதைத்து நேரத்தை விரயமாக்குவதைத் தவிர்த்துக் கொண்டார்.

"சேர்..நான் போயிற்று வாறன்.. எல்லா விடயமும் ரீச்சரோடை கதைத்திருக்கிறன்"

"சரி..சரி போயிற்று வாருங்கோ.." தனது காசுப் பதிவேட்டில் இருந்து கவனத்தை எடுக்காமலேயே அவரை அனுப்பி வைத்தார்.

மேலே உள்ள சம்பவக் கற்கையை நன்கு வாசித்து பின்வரும் வனாக்களுக்கு விடை அளிககுக.

1.சாரதா வித்தியாலயத்தில் நீங்கள் அவதானித்த குறைபாடுகள் எவை?

2.சிவநேசன் அவர்கள் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றுவதற்குப் பொருத்தமான ஒருவர் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? அவ்வாறாயின் அவரது நிறைவான அல்லது குறைபாடான பண்புகளைக் குறிப்பிடுக.

3.சிறந்த பாடசாலையின் முகாமைத்துவக் கட்டமைப்பை எவ்வாறு அமைக்கலாம்?

4.நீங்கள் ஒரு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில், இந்தப் பாடசாலையை மேம்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள்?

5.நீங்கள் ஒரு கல்வி நிர்வாகி என்ற வகையில் இப் பாடசாலையின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள்?

6.பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக அதிபர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக கல்வி அமைச்சு அறிமுகப்படுத்திய மாற்றங்கள் எவை?

நடராஜா அனந்தராஜ்
B.A.(Hons,),M.A
Dip.in.Edu.Dip.in.Journalism
SLPS .SLEAS

# துர்முகி வருஷப் பிறப்பு கருமங்கள்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புதன் | | சந் |
| கேது | துர்முகி வருஷ ஜாதகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ் | லக்கினம் | |

## வாக்கிய பஞ்சாங்கம்

மன்மத வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2016) புதன்கிழமை முன்னிரவு 6 மணி 36 நிமிடம் பூர்வபக்க சப்தமித் திதியில் திருவாதிரை நான்காம் பாதத்தில் துலா இலக்கினத்தில் விருச்சிக நவாம்சத்தில் சூரிய காலவோரையில் இப்புதிய துர்முகி வருஷம் பிறக்கின்றது. அன்று பிற்பகல் 2 மணி 36 நிமிடம் முதல் அன்று முன்னிரவு 10 மணி 36 நிமிடம் வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் கடம்பமிலையும் காலில் வேப்பமிலையும் வைத்து ஸ்நானம் செய்து நல்ல பச்சை வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் பச்சைக்கரை வெள்ளைக்க ரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து மரகதம், வைரம் இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விக்னேஸ்வரன் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தருமங்கள் செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி, அவர்களின் ஆசி பெற்று உறவினர், நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை கலந்த உணவருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து புதிய வருடப் பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவத்தால் பெற்ற மானிடப் பிறவியில் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

**சங்கிரமதோஷ நட்சத்திரங்கள்- வாக்கிய பஞ்சாங்கம்**

மிருகசீரிடம் 3,4 ஆம் கால்கள், திருவாதிரை, புநர்பூசம் 1,2,3 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 4ஆம் கால், அனுசம், கேட்டை, சதயம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து தோஷ நிவர்த்தி செய்யக் கடவர்.

## திருக்கணித பஞ்சாங்கம்

நிகழும் மன்மத வருஷம் பங்குனிமாதம் 31 ஆம் திகதி (13.04.2016) புதன்கிழமை இரவு 7 மணி 48 நிமிடம் துர்முகி என்னும் பெயருடைய புத்தாண்டு உதயமாகின்றது. அன்று நட்சத்திரம் புநர்பூசம் முதலாம் பாதம், திதி பூர்வபட்ச சப்தமி. இது 60 வருஷ சுற்றுவட்டத்தில் 30ஆவது வருஷமாகும். அன்று மாலை 3 மணி 48 நிமிடம் முதல் இரவு 11 மணி 48 நிமிடம் வரை மேட சங்கிரமன புண்ணிய காலம் என்று சொல்லப்படும். வருஷம் பிறக்கும் போது உதயலக்கினம் துலாம் ஆகும்.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்**

மிருகசிரிடம் 3,4 ஆம் கால்கள், திருவாதிரை, புநர்பூசம், அனுசம், கேட்டை, பூரட்டாதி இவற்றிற் பிறந்தோர் மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து தான தருமங்கள் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

## மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாது,
மாதுளம்பூ, தாமரைப்பூ,
துளசி, வில்வம்,
அறுகு, பால்,
கோமயம், கோசலம்,
கோரோசணை, குங்குமப்பூ,
பச்சைக் கர்ப்பூரம்,
மஞ்சள், சுக்கு,
திப்பிலி

ஆகியவற்றை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

## துர்முகி வருஷ கைவிசேஷம் வாக்கிய பஞ்சாங்கம்

16.04.2016 சனிக்கிழமை இரவு 10.38 மணி முதல் 12.23 மணிவரை
16.04.2016 சனிக்கிழமை பின்னிரவு 2.35 மணி முதல் 4.04 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை பகல் 9.07 மணிமுதல் 9.35 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை பகல் 9.47 மணிமுதல் 11.46 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை இரவு 6.05 மணிமுதல் 7.25 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை இரவு 10.19 மணிமுதல் 12.15 மணிவரை

**திருக்கணித பஞ்சாங்கம்**

16.04.2016 சனிக்கிழமை மாலை 6.10 மணி முதல் 7.30 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை இரவு 10.16 மணிமுதல் 11.20 மணிவரை

## துர்முகி வருஷ (2016-2017) நட்சத்திர கந்தாய, ஆதாய பலன்கள்

| நட்சத்திரங்கள் | | சித்திரை-ஆடி | ஆவணி-கார்த்திகை | மார்கழி-பங்குனி |
|---|---|---|---|---|
| 01 | அச்சுவினி | 7 | 1 | 1 |
| 02 | பரணி | 2 | 2 | 4 |
| 03 | கார்த்திகை | 5 | 3 | 2 |
| 04 | ரோகிணி | 0 | 1 | 0 |
| 05 | மிருகசீரிடம் | 3 | 2 | 3 |
| 06 | திருவாதிரை | 6 | 0 | 3 |
| 07 | புநர்பூசம் | 1 | 1 | 4 |
| 08 | பூசம் | 4 | 2 | 2 |
| 09 | ஆயிலியம் | 7 | 0 | 0 |
| 10 | மகம் | 2 | 1 | 3 |
| 11 | பூரம் | 5 | 2 | 1 |
| 12 | உத்தரம் | 0 | 0 | 4 |
| 13 | அத்தம் | 3 | 1 | 2 |
| 14 | சித்திரை | 6 | 2 | 0 |
| 15 | சுவாதி | 1 | 0 | 3 |
| 16 | விசாகம் | 4 | 1 | 1 |
| 17 | அனுசம் | 7 | 2 | 4 |
| 18 | கேட்டை | 2 | 0 | 2 |
| 19 | மூலம் | 5 | 1 | 0 |
| 20 | பூராடம் | 0 | 2 | 3 |
| 21 | உத்தராடம் | 3 | 0 | 1 |
| 22 | திருவோணம் | 6 | 1 | 4 |
| 23 | அவிட்டம் | 1 | 2 | 2 |
| 24 | சதயம் | 4 | 0 | 0 |
| 25 | பூரட்டாதி | 7 | 1 | 3 |
| 26 | உத்தரட்டாதி | 2 | 2 | 1 |
| 27 | ரேவதி | 5 | 0 | 4 |

✦ ஒரு கந்தாயம் 4 மாதங்கள் கொண்டது.

✦ ஒரு கந்தாயத்தில் 0 ஏற்பட்டால் 4 மாதங்கள் நிம்மதிக் குறைவு ஏற்படலாம்

## இராசி பலன்

11.04.2016
(பங்குனி 29, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 8.17 மணிவரை
ரோகினி முன்னிரவு 9.37 மணிவரை
சுபநேரம் 12.06-1.36 மணிவரை
இராகுகாலம் 7.36-9.06 மணிவரை
கடைசி பங்குனித் திங்கள்

| | | | |
|---|---|---|---|
| சூரி, சுக் | புத | சந் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ் | | |

**வளவன்**

**மேடம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக விளங்குவர், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, ஊர் மாற்றங்கள் இடம் பெறலாம், சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**கடகம்:** பொருளாதார முன்னேற்றம் காண்பீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி:** மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், செய்தொழில் மேன்மையுண்டு, ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**துலாம்:** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, முயற்சிகளில் சிறு தடைகள் தாமதங்கள் ஏற்படலாம், வரவும் செலவும் சமமாகும்.

**விருச்சிகம்:** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**மகரம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்:** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்:** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்கள் உருவாகும், நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம்.

# பிரான்ஸில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை

## ஒரு இலட்சம் பேர் பங்கேற்பு



(பாரீஸ்)

தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டத்தில் மறுசீரமைப்பு மேற்கொள்ள முடிவு செய்துள்ள பிரான்ஸ் அரசாங் கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

பிரான்ஸில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. எனவே அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக இதனை கட்டுப்படுத்த தற்போதைய ஜனாதபதி பிராங்கோஸ்ஹாலண்டே முடிவு செய்துள்ளார்.

இதன் ஒரு பகுதியாக வாரத்துக்கு 35 மணி நேரங்களுக்கு மேல் உழைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதல் சம்பளத்துக்கு தடை விதித்து சட்டத்தில் புதிய திருத்தம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள் கூடுதல் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் என அந்நாட்டு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

எனினும் இந்த சட்ட சீரமைப்புக்கு நிறுவனங்கள், தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இந்த சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸின் முக்கிய நகரங்களில் போராட்டம நடைபெற்றது. தலைநகர் பாரீஸ உட்பட 200 நகரங்களில் நடைபெற்ற இந்த போராட்டங்களில் சுமார் 1 இலட்சத்துக்கும்மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அவர்களில் பெரும்பான்மையானர்கள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சில இடங்களில் இந்த போராட்டம் வன்முறையாக மாறின. இதன் காரணமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பட்டாசுகளை வெடித்தும் பொலிஸாரை நோக்கி கற்களை வீசியும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

பதிலுக்கு பொலிஸாரும் கண்ணீர் புகைக்குண்டை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடிக்க முயன்றனர். மேலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் காரணமாக பிரான்ஸில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (இ-5)




## ஏமன் படைவீரர்கள் 17 பேர் சுட்டுக்கொலை அல்கொய்தா தீவிரவாதிகள் அட்டூழியம்

(ஏடன்)

ஏமன் நாட்டில் அல்கொய்தா தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

அங்கு ஜனாதிபதி ரப்பு மன்சூர் ஹாதி ஆதரவு படையினர் 17 பேர், நேற்று அதிகாலை ஏடன் நகரில் இருந்து அல்கொய்தா தீவிரவாதிகள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அல மஹ்ரா மாகாணத்துக்கு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களை அல் கொய்தா தீவிரவாதிகள் வழி மறத்து ஒதுக்குப்புறமான ஒரு இடத்துக்கு கடத்தி சென்றனர்.

அங்கு அவர்களை அல் கொய்தா தீவிரவாதிகள் வரிசை யாக நிற்க வைத்து சுட்டுக்கொன்றார்கள். இந்த் சம்பவத்தின் போது, பிடித்து வைத்திருந்த வேறு 17 பணயக்கைதிகள் காயம் அடைந்ததாகவும். ஆனால் அவர்கள் உயிருடன் இருப்பதாகவும் உள்ளூர் அதிகாரி களும், மக்களும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், ஏமனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## வருமான வரித்துறைக்கு ஒத்துழைப்பு அளிக்கிறேன்

### நடிகர் அமிதாப்பச்சன் அறிக்கை

(மும்பை)

தான் சட்டத்தை மதித்து நடப்பவன் என்றும், வருமான வரித்துறைக்கு ஒத்துழைப்பு அளித்து வருகிறேன் என்றும் இந்தி நடிகர் அமிதாப்பச்சன் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் கணக்கில் வராத கறுப்பு பணத்தை மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் மறைமுகமாக முதலீடு செய்திருப்பதாக அண்மையில் தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதில், இந்தி நடிகர் அமிதாப்பச்சன் பெயரும் அடிபட்டது.

எனவே, மராட்டிய அரசின் புலிகள் பாதுகாப்பு பிரசார தூதர் மற்றும் பாந்திரா குர்லா காம்ப்ளக்சை சர்வதேச நிதி மற்றும் சேவை மயமாக மாற்றுவதற்கான ஆலோசனை குழுவின் உறுப்பினர் ஆகிய பொறுப்பில் இருந்து அவரை நீக்குமாறு காங்கிரஸ் கட்சி போர்க்கொடி உயர்த்தியது.

இதனிடையே, தன் மீதான குற்றச்சாட்டுகளை 73 வயது நடிகர் அமிதாப்பச்சன் திட்டவட்டமாக மறுத்தார். இது தொடர்பாக அவர் மீண்டும் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

ஆவலுடன் காத்திருக்கிறேன். வருமான வரித்துறையும், அமுலாக்க இயக்குநரகமும் எனக்கு அனுப்பிய நோட்டீசுகளுக்கு கவனத்துடன் நான் பதிலளித்து இருக்கிறேன்.

நான் சட்டத்தை மதித்து நடப்பவன். பனாமா அறிக்கையில் வெளியானது படி, அந்த 4 நிறுவனங்களின் இயக்குநராக நான் பதவி வகிக்கவில்லை.

இந்த விவகாரத்தில் முழுமையான விசாரணைக்கு மத்திய அரசு உத்தரவிட்டு இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். மேற்படி, அந்த 4 நிறுவனங்களிலும் என்னுடைய பெயர் எப்படி இணைக்கப்பட்டது என்பதை அறிய ஆவலுடன் காத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார். (இ-5)

## வடகொரியா மீண்டும் அத்துமீறல்



கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணை இயந்திர சோதனையை நடத்தி வடகொரியா அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல், வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. 3 முறை அணுகுண்டுகளை வெடித்து சோதித்த அந்த நாடு, இந்த ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி மிக பயங்கரமான ஐதரசன் குண்டினை முதன் முதலாக வெடித்து சோதித்ததாக அறிவித்தது.

சர்வதேச அளவில் இது மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. வடகொரியாவின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கிற விதமாக ஐ.நா. புதிய பொருளாதார தடைகளை விதித்து கடந்த மாதம் தீர்மானம் நிறைவேற்றியது.

ஆனாலும் வடகொரியா அதையும் பொருட்படுத்தவில்லை. ஒரு பக்கம் கடுமையான பொருளாதார நெருக்கடி, மற்றொரு பக்கம் உலக நாடுகளின் எதிர்ப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் ஏவுகணை சோதனைகளை நடத்தி வருவதுடன், சிறிய அளவிலான அணுகுண்டுகளையும் தயாரித்து வருகிறது.

இந்த நிலையில் அந்த நாடு அதிரடியாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை இயந்திர சோதனையை நேற்று முன்தினம் நடத்தி உள்ளது.

இந்த சோதனை, வடகொரியாவின் மேற்கு கடலோர பகுதியில் தொலைதூர ஏவுகணை ஏவுதளத்தில், நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன் மேற்பார்வையில் நடந்தது. சோதனையின்போது அந்த இயந்திரம், காதை செவிடாக்கும் வகையில் மிகுந்த சத்தத்துடன் தீப்பிளம்புகளை கக்கி சென்றது என வடகொரிய அரசு செய்தி நிறுவனம் கூறுகிறது.

இந்த சோதனை பற்றி வட கொரியா தலைவர் கிம் ஜாங் உன் கூறும்போது, "இப்போது நம்மால் அமெரிக்காவின் பிரதான பகுதி உட்பட இந்த புவிக்கோளின் எந்தவொரு பகுதியிலும் பகைவர்களை தாகக முடியும்" என குறிப்பிட்டதாக அந்த செய்தி நிறுவனம்மேலும்கூறுகிறது.

அமெரிக்காவுக்கு அணுகு ண்டுகளை சுமந்து சென்று ஏவுகணை தாக்குதல் நடத்துகிற ஆற்றலை வடகொரியா பல்வேறு கட்டங்களாக அடைந்து விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

வடகொரியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை இயந்திர சோதனை குறித்து வோஷிங்டனில் அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கருத்து தெரிவிக்கையில், "வட கொரியா இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் விலகி இருக்க வேண்டும். இல்லாவட்டால், அந்த பிராந்தியம் மேலும் சீர்குலைந்து போகும். அதற்கு பதிலாக வட கொரியா ஏற்கனவே அளித்த தனது வாக்குறுதிகளை யும், சர்வதேச பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு தேவையான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று கூறினார். (இ-5)

## எகிப்தில் தொடர் குண்டு வெடிப்பில் ராணுவ அதிகாரி உட்பட 7 பேர் பலி

எகிப்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இவர்கள் அங்கு பல்வேறு தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றி ராணுவவீரர்கள் மற்றும் அப்பாவி மக்களை கொன்று குவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சினாய் தீபகற்பத்தில் உள்ள ராபா மற்றும் ஷேக் ஷ்வாய்த் என்ற இடங்களில் தீவிரவாதிகள் வீதிகளுக்கு அடியில் வெடி குண்டுகளை மறைத்து வைத் திருந்தனர்.

அந்த வீதிகளில் வாகனங்கள் சென்ற போது தீவிரவாதிகள் 'ரிமோட்' மூலம் அந்த வெடி குண்டுகளை வெடிக்க செய்தனர்.

அடுத்தடுத்து நடந்த இந்த 2 குண்டு வெடிப்பு சம்பவங்களில் ராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 6 ராணுவவீரர்களும், அப்பாவி பெண் ஒருவரும் உடல்சிதறி உயிரிழந்தனர். மேலும் இந்த குண்டு வெடிப்புகளில் சிக்கி 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிர வாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். இது தொடர்பான தகவலை தங்களுக்குரிய சமூக வலைத்தளங்களில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. (இ-5)

# திருவிழாவில் பயங்கரத்தீ 110 பேர் பலி! 350பேர் காயம்



(சென்னை)

கேரளா மாநிலம் கொல்லம் பரவூர் புட்டிங்கள் தேவி கோவில் திருவிழாவில் நேற்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 110 பேர் உயிரிழந்ததாகவும் 350 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கேரள மாநிலம் கொல்லம் அருகே உள்ள பராவூர் கோவிலில் ஆண்டு தோறும் நடைபெறும் கோவில் திருவிழா இந்தாண்டும் வழக்கம் போல் நடைபெற்றுள்ளது. திருவிழாவின் போது வாணவேடிக்கையில் ஏற்பட்ட தீ விபத்தில் கோயில் கட்டடம் இடிந்து விழுந்ததில் பலர் சிக்கியுள்ளனர். நேற்று அதிகாலை 3.30 மணிக்கு இத்தீவிபத்து இடம் பெற்றுள்ளது. இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (இ-5)

## மோடியின் இதயத்தை உலுக்கிய துயர சம்பவம்



கேரள மாநிலம் கொல்லம் பகுதியில் உள்ள பராவூர் கோவிலில் நேற்று அதிகாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் உயிரிழப்பு 100 ஆக அதிகரித்துள்ளது.350 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கேரளாவின் தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். தீ விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக குண மடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார். இந்த தீ விபத்து சம்பவம் இதயத்தை உலுக்கிவிட்டதாகவும் மோடி வரு த்தம் தெரிவித்துள்ளார்.

மேலும், இது குறித்து நேரில் அறிய, பிரதமர் மோடி கேரளா வருகிறார் என்று தகவல்.முன்னதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் தலைமையிலான குழுவை கேரளாவுக்கு பிரதமர் அனுப்பியுள்ளார். (இ-5)

## தி.மு.கவை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ளும் மு.க.அழகிரி



தி.மு.கவில் இருந்து விலகி இருக்கும் மு.க.அழகிரி தற்போது உதய சூரியன் சின்னத்தை ஆதரிப்பீர் என்று பிரசாரம்மேற்கொண்டுள்ளார்.

திமுகவில் இருந்து கடந்த 2014 ஆம் ஆண்டு நிரந்தரமாக நீக்கப்பட்ட மு.க.அழகிரி கடந்த மார்ச் 24ம் திகதி கருணாநிதியை திடீரென சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பு பற்றி, அழகிரி கூறும் போது, தந்தை என்ற முறையில் அவரை சந்தித்தேன் என்று விளக்கமளித்தார்.

இந்நிலையில், நேற்று தனது பேஸ்புக் பக்கத்தில் "சூரியனுக்கு சொந்தங்கள் நாங்கள், ஆதரிப்பீர் உதயசூரியன்" என்று பிரசாரம் மேற்கொண்டுள்ளார்.

அழகிரியின் இந்த பிரசாரம் அவரது ஆதரவாளர்களை உற்சாகமடைய வைத்துள்ளது. ஆனால், தென் மாவட்ட ஸ்டாலின் ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-5)

## மக்களை குடிகாரராக்கியது தி.மு.க.தான் முதலமைச்சர் ஜெயலலிதா குற்றச்சாட்டு



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முதலமைச்சருமான ஜெயலலிதா சென்னை தீவுத்திடலில் சட்டமன்ற தேர்தலுக்கான பிரசாரத்தை தொடங்கியுள்ளார்.

சென்னை தீவுத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஜெயலலிதா, பிரசார மேடையில் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தபடியே தனது பிரசாரத்தை நேற்று முன் தினம் தொடங்கினார்.

மேலும் தெரிவிக்கையில்,

சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தமிழகத்தில் நிலவிய மின்வெட்டு குறைக்கப்பட்டு தற் போது தடையில்லா மின்சாரம் வழங்கப்படுகிறது. 2011ம் ஆண்டு வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளோம்.

விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி, கறவை மாடு, மகப்பேறு நிதியுதவி, திருமண நிதியுதவி, முதியோர் நிதி, மடிக்கணனி, பள்ளி- கல்லூரி மாணவர் விடுதி உணவுக்கான தொகை உயர்வு, உழவர் பாதுகாப்பு திட்டம், காப்பீட்டு திட்டம், ஜவுளி பூங்காக்கள், மாணவர்களுக்கான உதவித்தொகை, 25 சதவீத மானியக்கடன், மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து வசதி உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயற்படுத்தி உள்ளோம்.

தற்போது தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கொண்டு வருவது பற்றி பலர் பேசி வருகின்றனர். மதுவிலக்கு பற்றி தி.மு.க. தலைவர் கருணாநிதி பேசுவது விநோதமாக இருக்கிறது. மதுவிலக்கு பற்றி யார் வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் கருணாநிதி பேசக்கூடாது, தி.மு.க.வினர் பேசக் கூடாது.

மக்களை அதிகம் குடிக்க வைத்தது தி.மு.க. தான்.எனது நெஞ்சார்ந்த குறிக்கோள், பூரண மதுவிலக்கு கொண்டு வரவேண்டும் என்பதுதான். ஆனால், மது விலக்கை பற்றி தீவிரமாக ஆராய்ந்து தான் முடிவெடுப்பேன். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கு கொண்டு வரப்படும் என்று தெரிவித்தால் நம்ப முடியாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறுகிறார்.

தி.மு.க. இந்த தேர்தலில் ஜெயிக்கப்போவதில்லை என்று கருணாநிதிக்கு நன்றாகத் தெரியும். எனவே தான் அரசியல் காரணங்களுக்காக மதுவிலக்கைப் பற்றி பேசி வருகிறார். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் மதுவிலக்கைப் பற்றி குறிப்பிட்டால் மக்கள் நம்பக்கூடாது என்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

எந்த ஒரு செயலையும் ஆராய்ந்து, எந்த ஒரு உறுதிமொழியையும் செயற்படுத்த முடியுமா? என்று சிந்தித்து அதன் பிறகே அந்த உறுதியை இந்த ஜெயலலிதா வழங்குவார் என்று அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.பூரண மதுவிலக்கு தான் நான் கொண்டுள்ள கொள்கை ஆகும்.

ஆனால், ஒரே கையெழுத்தில் அதனைக் கொண்டு வருவது என்பது இயலாது. இதை படிப்படியாகத் தான் கொண்டு வர முடியும். எனது தலைமையிலான அ.தி.மு.க. எதிர் வரும் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைந்தவுடன் மதுவிலக்கு படிப்படியாக அமுல் படுத்தப்பட்டு, பூரண மதுவிலக்கு என்ற நிலை எய்தப்படும்.

முதலில் சில்லரை மதுபானக் கடைகள் செயற்படும் நேரம் குறைக்கப்படும். பின்னர் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும். அதன்பின்னர் சில்லறை மதுபானக் கடைகளுடன் இணைந்த பார்கள் குறைக்கப்படும்.

குடியால் பாதிக்கப்படுவோரை மீட்டு சிகிச்சை அளிக்க மீட்பு நிலையங்கள் உருவாக்கப்படும். இதுபோன்ற நடவடிக்கைகளின் முடிவில் பூரண மதுவிலக்கு என்னும் லட்சியத்தை அடைவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# உலர் உணவுப் பொருட்கள் பொலிஸாரால் வழங்கப்பட்டன



பொலிஸ் வீரர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு பொலிஸ் சேவையில் கடமையற்றி உயர் நீத்தவர்களின் உறவினர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கொழும்பிலுள்ளபொலிஸ்நலன் புரிச் சங்கம் குறித்த நிகழ்விற்கு அனுசரணை வழங்கியுள்ளது. காங்கேசந்துறைப் பிராந்திய பொலிஸ் நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இவ்வுலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. காங்கேசந்துறைப் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். ஜஃபரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அரிசி, மா, சீனி, பருப்பு, மீன்ரின் உள்ளிட்ட தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள பொருட்கள் வழங்கப்பட்டன. (இ-60)

# வானொலியைத் திருடி விற்ற இளைஞர்கள் மாட்டினர்

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து ஆட்டோ ஒன்றிலிருந்து வானொலிப் பெட்டியைத் திருடியவர்களை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயப் பகுதியில் வைத்து இடம்பெற்ற இத் திருட்டுத் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை நெல்லியடி நகரில் உள்ள கடை ஒன்றில் வானொலிப் பெட்டியை விற்பனை செய்ய வந்த இளைஞர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப் படுகிறது. திருடப்பட்ட வானொலிப்பெட்டி மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# நோயாளியுடன் அம்புலன்ஸை தாக்கிய காட்டு யானை

வெல்லவாய வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டி காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

வெல்லவாய- ஆலபல்லம பிர தேசத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்த அம்புலன்ஸ் வண்டியில் இருந்த சாரதி, தாதி மற் றும் குறித்த நோயாளி ஆகியோர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 50 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 75 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 160 | 100 |
| தக்காளி | 100 | 100 | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 60 | 60 |
| கோவா | 80 | 50 | 70 | 80 | 60 |
| கரட் | 120 | 120 | 100 | 120 | 100 |
| பூசணி | 40 | 30 | 15 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 20 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 30 | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 75 | 100 | 50 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 100 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 50 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 140 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 50 | 120 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 60 | 140 | 80 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 500 | 400 |
| போஞ்சி | 120 | 200 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 30 | — | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 240 | 200 | 220 | 600 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 110 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 240 | 200 | — | — | — |
| முள்ளங்கி | 60 | 40 | 25 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## வரதராஜ பெருமாள், குடும்பத்துடன் இந்தியாவுக்கு தப்பிச் சென்றார் 152

### வாழ்க்கைக் குறிப்பு

உமா மகேஸ்வரனுக்கு 38 வயது. இளம் வயதிலேயே ஈழ விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர். முதலில் அமிர்தலிங்கத்தின் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் மாணவர் அமைப்புத் தலைவராக இருந்தார்.

பின்னர் பிரபாகரனுடன் சேர்ந்து புதிய புலிகள் என்ற இயக்கத்தைத் தொடங்கினர். இருவரும் 1976 ஆம் ஆண்டு வரை நண்பர்களாக இருந்தனர்.

### காதல்

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் இளைஞர் பிரிவைச் சேர்ந்த ஊர்மிளா என்ற பெண்ணை உமா மகேஸ்வரன் காதலித்தார். திருமணம் ஆகாமலேயே இருவரும் கணவன் மனைவி போல வாழ்வதாகச் செய்தி பரவியது. காதல், செக்ஸ் கூடாது என்ற இயக்கத்தின் கொள்கையை உமா மகேஸ்வரன் மீறிவிட்டதாகப் பிரபாகரன் கருதினார்.

இதன் காரணமாக பிரபாகரனுக்கும் உமா மகேஸ்வரனுக்கும் தகராறு ஏற்பட்டது. புதிய புலிகள் இயக்கத்தைக் கலைத்துவிட்டு இருவரும் தனித்தனியாகப் பிரிந்து வெவ்வேறு இயக்கங்களைத் தொடங்கினர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என்ற பெயரில் புதிய இயக்கத்தைப் பிரபாகரன் தொடங்கினார். பிளொட் இயக்கத்தை உமா மகேஸ்வரன் அமைத்தார்.

### துப்பாக்கிச் சண்டை

1982 ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர், பாண்டி பஜாரில் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் மோதிக்கொண்டு ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டனர்.

சிறு காயத்துடன் தப்பிய இருவரையும் பாண்டிபஜார் பொலிஸ் கைது செய்தனர். பிறகு இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

1987 இல் சென்னை மகாலிங்கபுரத்தில் உள்ள பிளொட் அலுவலகத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

உமா மகேஸ்வரன் வழக்கமாகத் தங்கும் அறையை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். ஆனால் அவர் வேறு அறையில் இருந்ததால் தப்பினார்.

### கீரி-பாம்பு

பிரபாகரனையும் உமா மகேஸ்வரனையும் ஒன்று சேர்க்க பலர் முயற்சி மேற்கொண்டனர். ஆனால் முயற்சி பலிக்கவில்லை. இருவரும் கீரியும் பாம்பும் போல் இருந்து வந்தனர்.

இலங்கையிலும் இரு இயக்கங்கள் இடையே அடிக்கடி மோதல்கள் நடந்து வந்தன. பிளொட் இயக்கத்தைச் சேர்ந்த வசந்தன், சிவநேசன் என்ற 2 முக்கிய தளபதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உமாமகேஸ்வரன் கொல்லப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு பிளொட் முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். அதில் பிளொட் இயக்கத்தைச் சேர்ந்த 50 பேர் கொல்லப்பட்டனர்.

1989 ஆம் ஆண்டு ஜூலை மாத தொடக்கத்தில் கொழும்பு நகரின் தென் பகுதியில் பக்கலா என்ற இடத்தில் பிளொட் தொண்டர்கள் 15 பேர்கள், விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### மாலைதீவு புரட்சி

மாலத்தீவில் அரசாங்கத்துக்கு எதிராக 1988 நவம்பரில் புரட்சி நடந்தது அல்லவா?

அந்தப் புரட்சியை நடத்தியவர் உமாமகேஸ்வரன். இந்திய இராணுவம் சென்று அந்தப் புரட்சியை அடக்கியது. இலங்கையின் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜ பெருமாள், குடும்பத்துடன் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றார்.

வட கிழக்குப் பகுதியில் உள்ள தமிழ் மாநிலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கம் (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி) ஆளும் கட்சியாக இருந்து வந்தது.

இதுவரை இந்த இயக்கம் இந்திய இராணுவத்தின் தயவில் ஆளும் கட்சியாக இருந்தது.

இப்போது இந்திய இராணுவம் எல்லையை விட்டு வெளியேறி வந்ததால் தமிழ் மாநிலம் முழுவதும் விடுதலைப்புலிகளின் கைகளில் வந்துவிட்டது.

### 2 கப்பல்களில்

இதனால் விடுதலைப்புலிகள் தங்களைத் தாக்குவார்களோ என்று அச்சத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினரும் அவர்களது குடும்பத்தினரும் 2 கப்பல்களில் அகதிகளாக இந்தியா சென்றார்.

அவர்களைத் தமிழ் நாட்டில் தங்க வைத்தால் சட்டம் ஒழுங்கு கெட்டுவிடும் என்று கூறி, அவர்கள் கப்பலை விட்டு இறங்குவதற்குத் தமிழக அரசு அனுமதி மறுத்துவிட்டது.

அதுபோல் ஆந்திராவும் மறுத்துவிட்டது. இதனால் அவர்களுக்கு ஒரிசா வில் அடைக்கலம் அளிக்கப்பட்டது. அங்கு 1355 பேர் அடைக்கலம் புகுந்தனர்.

### வரதராஜ பெருமாள்

இதைத் தொடர்ந்து தமிழ் மாநில முதலமைச்சர் வரதராஜ பெருமாளும் சொல்லிக் கொள்ளாமல் இலங்கையை விட்டு 11.03.1990 அன்று தப்பி இந்தியா சென்றார்.



வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜ பெருமாள், குடும்பத்தினர்


(தொடரும்)

# பலமிழக்கும் மகிந்த அணி

# மைத்திரி பக்கம் தாவும் எம்.பிக்கள்

## அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு) மகிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு எதிர்க்கட்சியில் இடம்பெற்றுள்ள சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கத்துக்கு மாற இருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



கூட்டு எதிர்க்கட்சியில் இடம்பெற்றுள்ள, சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களே, மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவிருப்பதாகவும், அவர்களுக்கு பதவிகளும் வழங்கப்படலாம் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் இடம்பெற்றிருந்த மனுச நாணயக்கார மற்றும் லக்ஸ்மன் செனவிரத்ன ஆகியோர் கடந்த வாரம், பிரதி அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்களாகப் பதவியேற்றிருந்தனர்.

இவ்வாறு மேலும் பலர் அரசாங்கத்துடன் இணையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, கடந்த வாரம, மூன்று புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து, இலங்கையின் தற்போதைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 92 ஆக அதிகரித்துள்ளது,

இதுகுறித்து விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், மேலும் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படலாம் என்று அரசாங்கத் தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள் ளன.

இதனிடையே கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த வேறு எவரும் அரசாங்கத்துடன் இணையமாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ-5)

# தலைமன்னார்-இராமேஸ்வரம் இடையே பாலம் அமைப்பதில் இந்திய அரசு உறுதி

பாக்கு நீரிணையில் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் பாலம அமைக்கும் திட்டத்தில், இந்திய மத்திய அரசாங்கம் உறுதியாக இருப்பதாக, வீதப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கப்பல்துறை மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டம் இப்போது ஆரம்பகட்டத்தில் இருக்கிறது. மஹாகவி பாரதியாரின் கனவை நிறைவேற்றும், இந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில், இந்திய மத்திய அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

இந்த திட்டத்தில் இலங்கை அரசாங்கமும் இணைந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-5)

# மின்சாரக் கட்டணம், எரிபொருள் விலை தொடர்பில் விலைப் பொறிமுறைமை!

மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலை தொடர்பில் விலைப் பொறிமுறைமை ஒன்றை அறிமுகம் செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலை நிர்ணயத்தின் போது அவற்றின் உற்பத்திச் செலவுகளை ஈடு செய்யும் வகையில் விலைப்பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம இலங்கைக்கு 150 கோடி அமெரிக்க டொலர் கடன் வழங்க உள்ளது.இது தொடர்பில் கடந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதிகளுக்கு அமைய சக்திவள விலைநிர்ணயம் தொடர்பில் அரசாங்கம் தலையீடு செய்யாது சந்தையின் கேள்வி நிரம்பல் பற்றிய காரணிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

இதன்படி காலத்திற்கு காலம் உலக சந்தையில் எரிபொருள் விலை ஏற்ற இறக்கத்திற்கு அமைய எரிபொருளின் சில்லறை விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணங்களுக்கும் கால மாற்றத்திற்கு ஏற்ற வகையில் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக விலை நிர்ணயிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்த நடைமுறை இதுவரையில் அமுல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு 900ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

தேசிய பொலிஸ்ஆணைக் குழுவிற்கு 900 ற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவற்றில் அதிகமான முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராகவே பதிவாகியுள்ளதாகவும் குறித்த ஆணைக் குழுவின் செயலாளர் ஆரிய தாச குரே தெரிவித்தார்.

இதனடிப்படையில் இவ்வாண்டில் மாத்திரம் 468 முறைப்பாடுகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் 148 முறைப்பாடுகளுக்கு தற்போது விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

மொத்தமாக 468 முறைப்பாடுகள் விசாரிக்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

இவற்றில் பொலிஸாருக்கு எதிரான மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கெதிராக அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### என்னைச் சரியாக கவனிக்கவில்லை

திருமணங்கள், வேறு சில நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு அழைப்பின் பேரில் போகிறோம். நமக்கு தடல்புடலான வரவேற்பு கிடைக்குமென, நாம் நன்கு கவனிக்கப்படுவோம் என்றும் நாம் தான் அன்றைய நிகழ்ச்சியின் பிரதம விருந்தினர் என்றும் கற்பனைகளை வளர்த்துக் கொள்கிறோம்.

போனால்,

பெருத்த ஏமாற்றம்! வாங்க என்று சாதாரணமாக கேட்டு விட்டு அவர்கள் நகர்ந்து விடுகிறார்கள். ஏன் தான் வந்தோமோ என்று வருந்துகிறோம். கூடவே நான்கு பேரை கூட்டிக் கொண்டு சென்றிருந்தாலும் நமக்கு மிகப்பெரிய அவமானம் நேர்ந்து விட்டது என்று நாமாக எண்ணிக்கொள் கிறோம்.

ஒரு திருமணம் அல்லது ஏதோவொரு நிகழ்ச்சி என்றாலோ அதை நடத்துபவர்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் கலவரம் அடைந்து விடுவார்கள். விழாவை சிறப்பாக நடத்த வேண்டும். எவரும் குறை கூறாதபடி அமைய வேண்டும் என்றெல்லாம் அவர்கள் எண்ணும் போது அவர்களது நெஞ்சம் மிகவும் பதற்றம் அடைகிறது. வழக்கமான அவர்களது சுபாவம் அந்த நேரம் மூட்டை கட்டி வைக்கப்படுகிறது. மகிழ்ச்சி மறைந்து சேர்க்கையான உணர்வுகள் அவர்களை ஆக்கிரமிக்கின்றன.

விழா சம்பந்தமாக ஆளுக்கு ஆள் ஆயிரத்தொரு பிரச்சினைகள் சொல்லி சம்பந்தப்பட்டவர்களை மேலும் திணறச் செய்கிறார்கள்.

இதயம் வேகமாக அடித்துக்கொள்கிறது. விழிகள் நம்மைப்பார்ப்பது போல் தோன்றினாலும் நம் உருவம் அவர்கள் மனதில் பதிவதில்லை. யாரைக் கவனிப்போம், யாரைக் கவனிப்பதில்லை என்று புரிவதில்லை. ஞாபக சக்தி தடுமாறுகிறது.

இப்படிப்பட்டதொரு பரிதாபமான சூழ்நிலை யில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு நம்மையே கவனித்துக்கொண்டிருப்பார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

அத்தகைய எதிர்பார்ப்பு கொஞ்சமும் நியாயமாகாது. நீங்கள் அவர்களோடு நெருக்கமில்லாதவரா? நன்கு கவனிப்பார்கள் என நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது இது இயற்கை.

மிகவும் வேண்டியவரா? அப்போதும் உங்களை நன்கு கவனிப்பார்கள் என நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது.

காரணம் நீங்கள் விழா சம்பந்தப்பட்ட வரை நன்கு அறிந்தவர். ஒருவேளை அவர் உங்களை கவனிக்க முடியாவிட்டாலும், நம் நிலைமைகளை புரிந்து கொண்டு தவறாக எண்ணமாட்டார் என்று உங்கள் மீது வைத்திருக்கும் உயர்வான நம்பிக்கையின் காரணமாகவும் தம் மனதை அவர் சமாதானப் படுத்திக் கொள்ளக் கூடும்.

விழாவோடு சம்பந்தப்பட்டவர்களின் துன் பச்சுமைகளையும் பிரச்சினைகளையும் குறைப்பதை விட்டு விட்டு அந்த மகிழ்ச்சியான சூழ்நிலையை அனுபவிப்பதை விட்டுவிட்டு தோளோடு தோள் நின்று நாமும் அவர்களுக்கு உதவியாக வேலை செய்வதை விட்டு விட்டு வெறுமனே நானும் நீங்கள் நடத்திய நிகழ்ச்சிக்கு வந்தேன் என்று பதிவேட்டில் ஆஜர்செய்வ தையே தலையை காட்டுவதையே குறிக்கோளாக கொண்டவர்களுக்கு–

என்னைச் சரியாக கவனிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை கூற எவ்விதத் தகுதி யும் இல்லை!

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்


1407

## இரும்பைத் தின்ற எறும்பு!

...பலமுறை மாடசாமி கேட்டுப் பார்த்துவிட்டான்.

"இன்னும் கொஞ்சம் வேலையிருக்கு.

அதை முடிச்சிட்டுத் தர்றேம்பா பொறு. என்ன ஓடியாப் போகப் போறேன்!" என்றபடி நாட்களைக் கடத்தி வந்தான் குப்புசாமி.



ஒருநாள் -

பொறுமையிழந்த மாடசாமி, நேராய் குப்புசாமி வீட்டு வாசலில் போய் நின்றான்.

"இப்பவே என்னோட மண்வெட்டியையும் கோடாரியையும் கொடு!" என்று கேட்டான் மாடசாமி.

குப்புசாமி கொஞ்சமும் தயங்கவில்லை.

"அட, வேலையெல்லாம் முடிஞ்சு கொடுத்திடலாமுன்னு நேத்துதான் எடுத்துக் கழுவி வச்சேன். காலையில பாத்தா உன்னோட மண்வெட்டியையும் கோடாரியையும் எறும்பு தின்னுட்டுப் போயிடுச்சு!"முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொண்டு குப்புசாமி சொன்னான்.

மாடசாமியால் எதுவும் பேச முடியவில்லை.

மனம் நொந்துபோய் வந்த மாடசாமி, மனைவி பார்வதியிடம் குப்புசாமி நடந்ததைச் சொன்னான்.

"ஏங்க, இதைச் சும்மா விடக் கூடாது. ஊரைக் கூட்டுங்க, நியாயம் கேட்போம்" என்றாள் பார்வதி.

ஊரும் கூடியது.

மாடசாமி நடந்ததைச் சொன்னான்.

குப்புசாமி சளைக்கவில்லை.

"நான் ஒண்ணும் பொய் சொல்லலே. நடந்த உண்மையச் சொல்றேன். வாங்கினதைக் கொடுக்கணும்னு தான் நானும் எடுத்து வச்சேன். எறும்பு தின்னுட்டுப் போயிடுச்சு. நானென்ன செய்ய?"

அதையே திரும்பத் திரும்பச் சொன்னான்.

ஊர்ப் பெரியவர்களால் எதுவும் பேச முடியவில்லை.

மொத்தக் கூட்டமும் வாய் மூடி நின்றது.

மாடசாமியின் பக்கம் நியாயம் இருப்பதாகப் பலர் நினைத்தாலும், 'குப்புசாமியப் பத்தித்தான் தெரியுமே தெரிஞ்சும் ஏன் கொடுத்தான்? அவனுக்கு வேணும்தான்!' என்று குப்புசாமிக்கு ஆதரவாகவும் சிலர் இருந்தார்கள்.

என்ன தீர்ப்பு சொல்வதென்று ஊர்ப் பெரியவர்கள் திகைத்து நின்ற வேளையில், மாடசாமி மனைவி பார்வதி திடுதிடுவென ஓடி வந்தாள்.

"அய்யோ எல்லாரும் சீக்கிரம் ஓடி வாங்க எங்க வீட்டு மாட்டுத் தொட்டியில உள்ள தண்ணீ தீப்பிடிச்சு எரியுது!" என்று பெருங்குரலெடுத்து அலறினாள்.

மொத்தக் கூட்டமும் 'கொல்' லென்று சிரித்தது.

"எங்கேயாச்சும் தொட்டித் தண்ணீ தீப்பிடிச்சு எரியுமா?" என்று நக்கலாக கேட்டான் குப்புசாமி.

"இரும்பையே எறும்பு திங்கிற ஊர்ல, தண்ணீ மட்டும் தீப்பிடிக்காதோ!"என்று பதிலுக்குக் கேட்டாள் பார்வதி.

"சபாஷ், சரியான கேள்விதான்!" என்று மொத்தக் கூட்டமும் ஆமோதித்தது.

பதிலேதும் பேச முடியாமல், தலை குனிந்தான் குப்புசாமி?

(முற்றும்)

### ஆப்ரகாம் லிங்கன்



1809 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆப்ரகாம்லிங்கன். அவரது தந்தை தாமஸ் லிங்கன். குடும்ப ஏழ்மை காரணமாகலிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல் போன்ற அரிய குணங்கள் சிறு வயதிலேயே லிங்கனிடம் இருந்தது. எப்போதும் கலகலப்பாகப் பழகுதல் கதை சொல்லுதல் வேடிக்கையாகப் பேசுதல் ஆகிய லிங்கனின் குணங்கள் அவர் மீது மற்றவர்களை விருப்பம் கொள்ளச் செய்தன.

தனது இருபத்து மூன்றாவது வயதில் முதன் முதல் ஆப்ரகாம் லிங்கன் பிளாக்காக் போரில் ( black hawk war ) கலந்து தலைவனாக பணியாற் றியது புதியதோர் பாதையை காட்டியது.

ஆபிரகாம்லிங்கன் ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவராவார். அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர்.

1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க, தென் மாநிலப் பிரிவினைக் கருத்தாளர்களை எதிர்கொண்டு உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர்.

1847 - 1849 ஆண்டுகளில் அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்தார். 1860 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1865 இவர் வோஷிங் டன் டி.சி யில் உள்ள ஃவோர்டு அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் கொல்லப்பட்டார். அமெரிக்க ஒன்றியத்தின் ஒற்றுமைக்காக உயிர் துறந்து புகழ் எய்தினார்.

04.2016
11

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1079 - போலந்து மன்னன் இரண்டாம் பொலேஸ்லாவ் என்பவனின் கட்டளைக் கிணங்க கிராக்கோவ் ஆயர் ஸ்டானிஸ்லாஸ் தூக்கிலிடப்பட்டார்.
- 1831 - உருகுவேயில் சல்சிபுதிஸ் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான சருவா இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர்.
- **1865 - ஆப்ரகாமலிங்கன் தனது கடைசிப் பேச்சை நிகழ்த்தினார்.**
- 1899 - ஸ்பெயின் புவேர்ட்டோ ரிக்கோவை ஐக்கிய அமெரிக்காவுக்கு அளித்தது.
- 1905 - ஐன்ஸ்டீன் தனது சார்புக் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 1921 - விளையாட்டு வர்ணனை முதன்முறையாக வானொலியில் ஒலிபரப்பானது.
- 1957 - பிரித்தானியா சிங்கப்பூரின் சுயாட்சிக்கு ஒத்துக் கொண்டது.
- 1970 - அப்போலோ 13 ஏவப்பட்டது.
- 1979 - தான்சானியப் படைகள் உகண்டாவின் தலை நகரான கம்பாலாவை ஆக்கிரமித்தன. இடி அமீன் தப்பி ஓட்டம். .
- 1987 - இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் லண்டனில் கைச்சாத்தா னது.
- 2002 - வெனிசுவேலாவில் ஜனாதிபதி ஹியூகோ சாவெஸ் இற்கெதிராக இராணுவப் புராட்சி இடம்பெற்றது.
- 2012 - இந்தோனேசியாவில் சுமாத்ரா கடற்பகுதியில் 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டது.

**பிறப்புகள்**

- 1869 - கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (இ. 1944)

**இறப்புகள்**

- 1918 - ஓட்டோ வாக்னர், ஆஸ்திரியக் கட்டடக்கலைஞர் (பி. 1841)

# மகிந்தவின் தலைவிதியை மே தினம் நிர்ணயிக்கும்

இம்முறை மே தினத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளப் போவது காலியில் நடக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்திலா அல்லது கிருலப்பனையில் நடக்கும் பொது எதிரணியின் கூட்டத்திலா என்பது இதுவரை மர்மமாகவே இருக்கின்றது எனவும், மே முதலாம் திகதியே அவருடைய எதிர்காலம் தீர்மானிக்கப்படும் எனவும் அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

காலியில் நடக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூடடத்தில் கலந்து கொள்ளுமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது என்று அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும், அவர் கிருலப்பனையில் நடக்கும் அரசுக்கு எதிரான பொது எதிரணியின் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து நடக்கும் கூட்டத்திலும் நிச்சயம் பங்கேற்பார் எனப் பொது எதிரணி வட்டாரங்கள் கூறியுள்ளன.

எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்சமயம் நடந்துவரும் பனிப்போரின் உச்சக்கட்டம் இரு சாராரினதும் மேதினக் கூட்டத்திலேயே வெளிப்படும் எனவும், அதனைத் தொடர்ந்து அக்கட்சியின் எதிர்காலம் நிச்சயிக்கப்படும் எனவும் அரசியல் விமர்சகர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)


*யாரிடம் பேசுவது?*

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

*எம்முடன் பேசுங்கள்.*

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
**021 222 8117, 077 900 8776**
*Sponsored by Enlightenment Circle, UK*
(C-3712)


## வாகனங்கள் ஏல விற்பனைக்கான கேள்விக் கோரிக்கை

NPYW-1846 இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள பஜாஜ் (BAJAJ) வகை முச்சக்கரவண்டி ஏல விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் வாரத்தில் ஏழு நாட்களும் காலை 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிவரையும் கீழ்க்காண் முகவரியில் பார்வையிட முடியும் என்பதோடு கேள்வி கோர விரும்புவோர் தங்களது கேள்விக் கோரிக்கையினை மூடு தபாலில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் " பஜாஜ் (BAJAJ) முச்சக்கர வண்டிக்கான கேள்வி கோரல்" எனத் தவறாது குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 25.04.2016 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு**

**தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

(சி-4275) **தொ.பே.இல:- 077 060 4950, 021 492 3118**

# மரண அறிவித்தல்

## அமரர் திருநாவுக்கரசு இராசரத்தினம்

**(உரிமையாளர், விஜிதா அரிசி ஆலை, தாவடி)**



யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், யாழ். தாவடியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராசரத்தினம் அவர்கள் 09-04-2016 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு தர்மலெட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகம்மா அவர்களின் அன்புக் கணவரும் கல்யாணி, கலைவாணி, கருணாகரன்(லண்டன்), இரவீந்திரன்(லண்டன்), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேஸ்வரி(லண்டன்), நவரட்ணம்மா (லண்டன்), மங்கையர்க்கரசி (ஓய்வுபெற்ற ஆசிரியை- இந்து மகளிர் கல்லூரி), சீவரத்தினம் (நந்தலாலா இரும்பகம்), மீனாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr.சுரேஸ்(ஆதார வைத்திய சாலை- தெல்லிப்பழை), சுபாஸ்சந்திரன் (கணக்காளர்- கொழும்பு), பிரகலதா (லண்டன்), பதிமிலா (லண்டன்), காண்டீபன் (பொறியியலாளர்- கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (A.K.T), சிவஞானம் (A.K.S), திருநாவுக்கரசு(விகடகவி, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி) மற்றும் தயாளன்(கணக்காளர்- கனடா), சிவகலை, காலஞ்சென்ற பேரம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் யோகம்மா அவர்களின் உடன் பிறவாச் சகோதரரும் ஹரிணி, பிருந்தாபன், சுபாங்கி, டீபக், சுஜின், பிரிட்டிகா, சுகந், கிஷான், அக்ஷயா, அக்ஷானா, கிரிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 11-04-2016 திங்கட்கிழமை இன்று பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தாவடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல- 47,**
**ஆனைக்கோட்டை வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**யாழ்ப்பாணம்.** (4182)

**குடும்பத்தினர்**
**Dr.சுரேஸ்**
**076 668 9357**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 689

Search for people, places and things | Nagendram Home


சந்திரன் சிந்து




விதுசாளினி



கஜல்விழி




பாபு




அபிஷா




சர்மிளா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இன்றைய இளைஞர்கள் மத்தியில் அருகிச் செல்லும்

# ஆலய வழிபாடும் சமயப் பண்பாடும்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'ஆலய வழிபாடு கோடி புண்ணியம்' எனப் பல்வேறு ஆலய வழிபாட்டின் மகிமையையும் ஆலயத்தின் அவசியம் பற்றியும் சமயச் சான்றோர்கள் எடுத்தியம்பிச் சென்றிருக்கிறார்கள். எம்மையெல்லாம் வழிப்படுத்தவும் இயக்கவும் ஒரு சக்தியுள்ளது. அதுவே இறைவன் என்று கூறப்படுகிறது. எம்மிடமுள்ள தீய குணங்களையெல்லாம் அகற்றி, தர்ம வழி செயற்படவும் மன அமைதி பெறவும் ஆலய வழிபாடு சாலச் சிறந்தது.

மதம் ஒவ்வொன்றும் தனி மனிதனை நெறிப்படுத்தி பூமியில் சிறந்த மனிதனாக விளங்கச் செய்கின்றது. இவ்வகையில் நெறிப்படுத்தல் என்பது இல்லையேல் ஒவ்வொரு மனிதனும் மனம் போன வழி சென்று, இடர்களுக்குட்பட்டு சிக்கிச் சிதைந்து சின்னா பின்னமாகி தமது வாழ்க்கையைத் தொலைத்துக் கொள்ள நேரிடுகின்றது. ஆகவே சமயநெறி சார்ந்த ஆலய வழிபாடு இன்றியமையாததாகும்.

ஆக! எம்முன்னோர் சமய நெறியை சாலக் கடைப்பிடித்து நல்வழி வாழ்ந்திருக்கிறார்கள், ஆலய வழிபாட்டை சிறப்பாக மேற்கொண்டிருகிறார்கள் என்பதற்கு இன்று எம்மத்தியில் பாரப்படுத்தி விட்டுச் சென்றிருக்கின்ற ஆலயங்கள் எமக்கு சான்று பகிர்கின்றன. ஆனால் இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானோர் மத்தியில் அருகி வருகின்ற பல்வேறு நல்ல விடயங்களில் ஒன்றாக விளங்குவதுதான் ஆலய வழிபாடும் அதனுடன் இணைந்த பண்பாட்டு விழிமியங்களுமாகும். இது ஓர் அவல நிலையாகும். இவ்விடயம் இன்றுள்ள மூத்தோர் மத்தியில் பெரும் கவலை தரும் விடயமாகவே விளங்குகின்றது. தங்களது வழித்தோன்றல் உறவுகளே இன்றைய இளம் தலைமுறையினர். எனவே அவர்கள் சமய பண்பாட்டு அம்சங்களைப் புறந்தள்ளி, அவற்றை மறந்து வழி தவறி நடந்து பிரச்சினைகளிற்குட்பட்டு வாழ்க்கையைத் தொலைப்பதை அவர்களால் பார்த்துவிட்டு சும்மா இருக்க முடியுமா? உள்ளத்தில் ஆயிரம் குமுறல்கள் கொண்டு தமக்குள்ளே புலம்பிவிட்டு ஊமைகளாக இருக்கின்றனர் எமது மூத்தோர் என்பதை இன்றைய இளம் சந்ததியினர் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய நவீன விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் உலகில் பல்வேறு வேலைப் பழுக்கள், மற்றும் பணத்தை பெருக்கும் நோக்குடன் ஓயாது செயற்படல், போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ வேண்டியுள்ளதால் நேரம் என்பது மிக அருமையானதாகவும் முக்கியமானதாகவும் விளங்குவது உண்மைதான். இவ்வாறெல்லாம் ஓடி ஓடி நாம் ஓயாது உழைப்பது, நாம் சிறந்ததும் சந்தோஷமானதுமான ஓர் நல் வாழ்க்கை வாழவே ஆகும்.

எனவே இங்கு நல் வாழ்க்கை வாழ்தல் என்பதில் அமைதி, ஆரோக்கியம், அறம் எனப் பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இவ்வகையில் நல் வாழ்க்கை வாழ எமது வாழ்க்கை அட்டவணையில் ஆலய வழிபாட்டிற்கும் ஓர் இடம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும் என்பதை மறந்துவிடலாகாது.

ஒவ்வொரு மதத்தினரும் தமது மதவழிபாட்டை மேற்கொள்ளும்போது தமது மதநெறி உரைத்து நிற்கின்ற பண்பாட்டு விழுமிய அம்சங்களிற்குட்பட்டு அவற்றைக் கடைப்பிடித்து வழபாடுகளில் ஈடுபடுதல் என்பது மிக மிக அவசியமும் விரும்பப்படுவதுமாகும். அவ்வகையில் ஈடுபடுகின்றபோதுதான் அம் மதத்திற்குரிய பெறுமதி அல்லது மதிப்பு பேணப்படுகிறது. அதுமட்டுமல்ல அப்பண்பாடு தொடர்ந்து பேணப்பட்டு சரியான முறையில் அடுத்த சந்ததிக்கு பாரப்படுத்தப்படும். அல்லது கையளிக்கப்படும். அதுமட்டுமல்ல யார் ஒருவர் சமய பண்பாட்டு விழுமியங்களை சரிவரப் பின்பற்றுகின்றாரோ அவர் சமூகத்தில் சிறந்த ஒரு மனிதராகவும் மிளிர்வார் என்பதில் எந்தவித ஜயமுமில்லை.

இன்றைய பெரும்பாலான இளைஞர்களைப் பொறுத்தவரை இவ் அம்சங்கள் அருகி வருகின்றமைக்கு காரணங்களைத் தேடியறிய முயற்சிக்கின்ற போது பல்வேறு தரப்பினர்களிடையே சந்தேகம் எழுகின்றது. அதாவது மேற்சொன்ன பண்புகளை இவ் இளைஞர்களிடத்தே வளர்த்து விடுவதில் பாடசாலைகள் தவறிழைக்கின்றனவா? பெற்றோர்கள் தவறுகின்றனரா? இளைஞர்கள் தாங்களே தவறுகின்றனரா? போன்ற சந்தேக வினாக்கள் எழுகின்றன. இங்கு ஆழமாக நாம் பார்க்கின்ற போது மூன்று தரப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக விளங்குகின்றனர்.

### பாடசாலைகளின் பங்கு

பாடசாலைகளைப் பொறுத்தவரை சமூக நிறுவனங்களாகும். இப் பாடசாலைகள் கல்வியை மட்டும் போதிக்குமிடமல்ல. பண்பாட்டம்சங்களையும் பழக்க வழக்கங்களையும் வளர்த்தெடுக்கும் நிறுவனமாகவும் திகழ்கின்றன. எனவே பாடசாலைகளிற்கும் சமூகத்தில் பாரிய பொறுப்புக்கள் காணப்படுகின்றது. பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறுபவர்கள் சமூகத்தில் தன்னையும் ஓர் பிரஜையாக இணைத்துக் கொள்ள நேரிடுகின்றது. இவ்வகையில் இணைந்து கொள்ளுபவர் சமூகத்திற்குப் பொருத்தமானவராகவும் சமூகத்துடன் இணைந்து இயங்கக் கூடியவராகவும் சமூக சமய பண்பாட்டு விழுமியங்கள் பொருந்தப் பெற்றவராகவும் திகழ வேண்டும். இதனை விடுத்து சமூக இயைபிற்குப் பொருந்தாத ஒருவரையேனும் பாடசாலைகள் வெளியேற்றுதல் கூடாது.

எனவே பாடசாலைகள் சமய விழாக்கள், சமய ஆராதனைகள், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றுக்கு முன்னுரிமையளித்து மாணவர்கள் அவற்றைக் கடைப்பிடித்து நேரடி அனுப வங்களைப் பெற வழி செய்ய வேண்டும். இன்று ஒரு சில பாடசாலைகளை விடுத்து பெரும்பாலான பாடசாலைகளின் தரத்தை தீர்மானிப்பது கல்விசார் அடைவுகளேயாகும். எனவே கல்விக்கே முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று முழுமையாக செயற்பட்டு கலாசார பண்பாட்டு விழுமியங்களை கை நழுவவிட்டு, சமூகத்திற்குப் பொருத்தமற்ற பிரஜைகளை பாடசாலைகள் உருவாக்குகின்றன.

இன்று சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் சமூகத்தை ஆக்கிரமித்துள்ளன. இப்பிரச்சினைகளிற்கான காரணகர்த்தாக்கள் இளைஞர்களாகும். சமூக வேலைத் திட்டங்களில் பங்கு கொள்ளாமை, முதியோரை மதிக்காமை, பொற்றோரை மதிக்காமை, ஆசிரியரை மதிக்காமை, ஆலய வழிபாட்டில் பங்கெடுக்காமை, ஆலயங்களிற்கு கலாசார ஆடையுடன் செல்லாமை, சமய பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்காமை போன்ற பலவாகும்.

இப் பண்புகளை வெளிப்படுத்துவோர் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறியோரே என்று சமூகத்தில் கூறும் போது கவலை தரும் விடயமாக காணப்படுகிறது.

எனவே, பாடசாலைகளிற்கு ஓர் தார்மீகப் பொறுப்புண்டு, அது என்னவெனில் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றனவோ, அதே போல் சமய வழிபாடுகள், இறை நம்பிக்கைகள், சமய விழாக்கள், தமிழ்ப் பண்பாட்டு அம்சங்கள், ஒழுக்க விழுமியங்கள், சமய பண்பாட்டு கலாசாரங்கள் என்பவற்றிக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை மாணவர்களிடத்தே வளர்த்து, சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்கள் கைவரப் பெற்ற பிரஜைகளாக மாணவர்களை சமூகத்திற்கு அனுப்ப வேண்டும். அதற்காக செயற்பாட்டு திட்டங்களை வரைந்து செயற்படுத்துவதுடன் முன்மாதிரிகள், போதனைகள், வழிகாட்டுதல்கள் என்பவற்றையும் முன்னெடுக்க வேண்டும். இதில் பாடசாலைகளைப் பொறுத்தவரை அதிபர், ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். எனவே பாடசாலைகள் இவ்விடயத்தில் தவறுகின்றனர் என்ற வார்த்தைக்கு வாய்ப்பளிக்காது விழிப்புடன் செயற்பட வேண்டும் என்பதை என்றுமே மறந்துவிடலாகாது.

### பெற்றோர்களின் பங்கு

குழந்தைகளை எதிர்காலத்தில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் மாற்றும் பாரிய பொறுப்பு பெற்றோருக்குண்டு. குழந்தைகள் பிறப்பில் ஒன்றும் அறியாதவர்கள். அந்நிலையில் அவ் வெள்ளை உள்ளம் படைத்தவர்களை நல்வழிப்படுத்துதல் பெற்றோரின் பொறுப்பாகும். 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைகள்தான் மண்ணிற் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்ற கூற்று எனக்கு ஞாபகம் வருகிறது. பிறந்ததில் இருந்து வளர்ந்து கட்டிளம் பருவத்தை அடைகின்ற காலங்கள் வரை கூடியளவு காலத்தை வீட்டில் கழிக்கின்றனர். இக்காலப் பகுதியில் பிள்ளைகளது ஒவ்வொரு அசைவிலும் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஒவ்வொரு வளர்ச்சிப் பாதையிலும் கூடியளவு கரிசனையும் கண்காணிப்பும் பெற்றோர்களே வழங்க வேண்டும். அவ்வகையில் கரிசனை காட்டி நல்லவற்றை வளர்க்கவும் தீயவற்றை விலக்கிக் கொள்ளவும் வழிகாட்டுதல்களையும் முன்மாதிரிகளையும் வழங்க வேண்டியது பெற்றோர்களது பொறுப்பாகும்.

அந்த வகையிலே தத்தமது சமய வழிபாடு, பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாகவும் பிள்ளைகளுக்கு சிறுபராயத்தில் இருந்தே ஆழ் மனதில் விதைக்க வேண்டும். சமயத்தின் நெறிமுறைகளையும் இறை வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் பண்பாட்டு விழுமியங்களின் மேன்மைகளையும் எடுத்துக் கூறுவதுடன் வீட்டில் சமய பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வுகள் அதற்கான ஏற்பாடுகள், சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சமய விழாக்கள், தினங்களின் போது நேரத்தை ஒதுக்கி ஆலயம் சென்று இறைவழிபாட்டில் ஈடுபட வேண்டும். பிள்ளைகள் ஆலயம் செல்லும் போது கலாசார பண்பாட்டு ஆடைகளை அணிந்து கொள்வது விரும்பத்தக்கது. அதற்காக பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

இப் பண்பாடு பழக்க வழக்கங்களுக்கு முன்னுதாரணமாகப் பெற்றோர்கள் விளங்க வேண்டும். ஆலயம் செல்லும்போது தத்தமது சமய பண்பாட்டிற்கு உரித்தான ஆடைகளை அணிந்து செல்லுதல் வேண்டும். அதை விடுத்து வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயம் தானே என்று விட்டு அநாகரிகமாகச் செல்லல் கூடாது. வழிகாட்ட வேண்டியவர்கள் வழி தவறினால் பின்பற்றுபவர்கள் வழி தவறுவதற்கு வாய்ப்பு அதிகம். தன்னிடம் அழுக்கை வைத்துக் கொண்டு பிறர் அழுக்கைப் பற்றி விமர்சிப்பது பொருத்தமற்றது. எனவே இங்கு பெற்றோர்கள் ஒவ்வொருவரும் நன்றாகச் சிந்திக்க வேண்டும். நீங்கள் இறைவழிபாடு, பண்பாட்டு அம்சங்களைக் கடைப்பிடிப்பதுடன் வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டியதும் உங்களது பொறுப்பென்பதை மறந்து விடலாகாது. ஆகவே தங்களது பிள்ளைகளை சிறுவயதில் இருந்தே சிறப்பான முறையில் வழி நடத்தி செயற்படச் செய்து ஆலய வழிபாட்டினையும் பண்பாட்டு கலாசார அம்சத்தையும் மேலோங்கச் செய்யுங்கள். அதனூடே இவ் விடயத்தில் பெற்றோர்கள் தவறுகின்றனர் என்ற ஐயத்திற்கும் குற்றச்சாட்டிற்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

### இளைஞர்களின் பங்கு

அன்பின் இளைஞர்களே மேற்சொன்ன விடயத் தலைப்பில் உங்களது பங்கும் அளப்பரியதாகும். உங்கள் வாழ்வின் உயர்ச்சியில் உமது பங்கு முழுக்க முழுக்க அவசியம். வாழப்பிறந்த நீங்கள் வாழ்வைத் தொலைத்தல் கூடாது. பிறந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம் என்ற நிலையில் எம்மைப் பற்றிய சுவடுகளே இல்லாமல் போதல் விரும்பப்படுவதல்ல. உங்களைப் பின்பற்றி எதிர்வரும் சமூகம் பாடம் கற்க கருத்தளவிலான சிறு தடயத்தையாவது ஏற்படுத்திக் கொடுத்தல் விரும்பத்தக்கது. விட்டுச் செல்லும் தடயங்கள் நேரானதாக திகழ வேண்டும்.

சகோதரர்களே உங்களால் நிட்சயம் முடியும். நீங்கள் வாழ்க்கையில் முன்னேறவும், சமூகத்தால் புகழ்ந்து பேசப்படுபவர்களாகவும் மாற வேண்டுமாயின் உங்களில் படிப்படியான நேரான மாறுதல்களைச் செய்ய வேண்டும். முதலில் உங்களைப் பற்றிய சுய மதிப்பீடு என்பது ஒவ்வொரு நாளும் இடம்பெற வேண்டும். இதன் மூலம் உங்களது பலங்கள், பலவீனங்கள், ஆற்றல்கள், ஆளுமைகள் என்பவற்றையறிந்து அதற்கேற்ப உங்களைச் சீர்செய்து கொள்ள முடிகின்றது. இதனாலேயே சுவாமி விவேகானந்தர் 'உன்னையே நீ அறிவாய்' என்று கூறினார். மேலும்,

இளைஞர்களே இங்கு பேசப்படுபவர்கள் நீங்களே. நீங்களே இவற்றிக்கு விடைகளைத் தேட வேண்டும். யார் எதையும் கூறட்டும். நமக்கென்ற என்று தயவுசெய்து இருந்து விடாதீர்கள். உங்களிடம் அருகிச் செல்லும் பல்வேறு நற்பழக்க வழக்கங்கள், சமய விழுமியங்கள், சமூகப் பண்பாடுகள் என்பவற்றைப் பின்பற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டியவர்கள் நீங்களே! இன்று பல முதியவர்களது மனங்களில் உங்களைப் பற்றிய உள்ளக் குமுறல்கள் வார்த்தைகளில் வெளிவராத ஆழப்பதிந்துள்ளன. சொல்லித் திருத்தவும் முடியவில்லை. சொல்லாமலும் இருக்க முடியவில்லை என்ற திண்டாட்டத்தில் சிக்கிக் காணப்படுகிறார்கள்.

எது எவ்வாறமையிலும் எம்மைப் பொறுத்தவரை நோய்த் தாக்கங்களையும் நோய்த்தாக்கத்திற்குட்பட்டவர்களையும் இனங்கண்டாகிப் போச்சு, எனவே நோயைக் குணப்படுத்துவது யார்? என்று வியாக்கியானம், கருத்தாடல்கள் மேற்கொள்வதில் பயனில்லை. நோய்த் தாக்கத்திற்குட்பட்டவர்கள் மற்றும் வைத்தியர்களான பெற்றோர்கள், பாடசாலைச் சமூகத்தினர், சமூக பண்பாட்டு நிறுவனங்கள் சமய சமூகப் பெரியோர்கள் எல்லோரும் இணைந்து இதனை நீக்க ஒத்துழைப்பதூடன் தொடர்ந்து நல் சமய பண்பாட்டு விழுமியங்களை இளைஞர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கத் தயாராகுவோம்.

**க.பத்மகாந்தன்**
**ஆசிரியர்**
**யா/ மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை**

# யுத்தம் செய் எதிரியை அறிந்து...?

## தொழில் ரகசியம்



புராண கால போர்களங்களில் மடிந்தவர்களின் கதைகளைப் படித்தால் ஒன்று புரியும். வெல்பவர் வெவ்வேறு விதங்களில் போரிடுகிறார். வெல்கிறார். தோற்பவர் தன் தோல்வி எங்கிருந்து, எப்படி, எதனால், எப்பொழுது வருகிறது என்பதை உணராமல் போட்டியிடுகிறார். தோற்கிறார்.

மகாபாரதத்தில் அர்ஜுனன் கர்ணணை நேருக்கு நேர் மோதி அம்பெய்தி கொன்றார். இது ஒண்டிக்கு ஒண்டி.

இராமாயணத்தில் ராமன் வாலியை மறைந்திருந்து வென்றார். இது ஸ்னைபர் தாக்குதல்.

பஸ்மாஸ்வரனை தன் தலையில் தானே கை வைக்க வைத்து அந்தக் காலத்திலேயே செல்.ஃ.பி ஸ்டைலில் கொன்றார் மஹா விஷ்ணு. இது கில்லாடி கில்லிங்.

இதுபோல் பலவித போர்கள், சண்டைகள் இருப்பதை விடுங்கள். வெல்வதற்கும், கொல்வதற்கும் எத்தனை வழிகள் உள்ளன என்று பாருங்கள். பகையும் பாடையும் எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வரும் என்பதைக் கவனியுங்கள்.

புராண போர்களங்களை விட்டு மார்க்கெட்டிங் விடயத்துக்கு வருவோம். மார்கெட்டிங் போர்களில் பலர் தோற்பதற்கு காரணம் அவர்கள் பலவீன மானவர்கள் என்பதாலோ பயந்து நடுங்குபவர்கள் என்பதாலோ அல்ல. யார் போட்டியாளர் என்பது தெரியாததால் விழுகிறார்கள். போட்டி எங்கிருந்து வருகிறது என்று புரியாததால் அழுகிறார்கள். குறைந்தபட்சம் யார் அடித்தார், எங்கிருந்து அடி வந்தது, எப்படி விழுந்தது என்று தெரிந்து விழுந்தாலும் ஆறுதலாக இருக்கும். சின்ன வயதில் பாடசாலையில் திடீரென்று பின்னால் இருந்து ஒருவன் நம் கண்ணை மூட அனைவரும் சேர்ந்து தர்ம அடி அடிப்பார்களே, அந்த நிலை தான் இன்று மார்க்கெட்டர்களுக்கு. வில்லனும் வில்லங்கமும் எப்படி வருகிறது என்பது புரிவதில்லை.

### போட்டியாளர் என்பவர் யார்?

நான் விற்கும் பொருளைப் போலவே செய்து விற்பவர்,என்பார் சிலர். இவர்கள் பஸ்மாஸ்வரன் லிஸ்ட்டில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். என் அளவு வளர்ந்து என்னை கீழே தள்ளப் பார்ப்பவர், என்பார் சிலர். இவர்களை வாலியின் வரிசையில் வைத்து வசைபாடப்பட வேண்டியவர்கள். என் பொருள் பிரிவை சேர்ந்தவர்கள் என்பார் மற்றவர். இவர்கள் கர்ணன் கதையோடு கட்டப்பட வேண்டியவர்கள்.

நேருக்கு நேர் நின்று போட்டியிடுபவரே போட்டியாளர் என்று நினைப்பது தவறு. அர்ஜுனன் போல் தான் அனைவரும் அடிக்க வருவார்கள் என்று நினைத்தால் மறைவிலிருந்து வரும் மரணம் தெரியாது. பின்னால் இருந்து வரும் தர்ம அடியை தடுக்க முடியாது.

போட்டியாளர் உங்கள் பொருளைப் போலவே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. உங்கள் பொருள் வகையை சேர்ந்தவராய் இருக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. உங்கள் அளவு இருந்தாக வேண்டும் என்ற தலையெழுத்தும் இல்லை. நீங்கள் விற்கும் பொருள் தரும் பயன் தருபவர் அனைவருமே உங்கள் போட்டியாளர்!

மார்கெட்டிங் விளையாட்டில் நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் போட்டியாளர் யார் என்று சரியாக அறிதியிடுவதுதான். அவர் யார் என்று தெரிந்தால் தான் எங்கிருக்கிறார் என்பது புரியும். எப்படி தாக்குவார் என்பதும் தெரியும்.

பொதுவாக போட்டியாளர்கள் நான்கு வகையில் அமையலாம். நான்கு ரூபங்களில் உங்களைத் தாக்க வரலாம். இந்த நான்கு வழிகளையும் நன்கு ஆராய்ந்து தற்காத்துக் கொள்ள ரெடியாய் இருப்பது உடம்புக்கு நல்லது. அப்பொழுது தான் தற்சமயம் நம் போட்டியாளர்கள் யார் என்பதும் தெரியும். வருங்காலத்தில் எப்படி போட்டியாளர்கள் வரலாம் என்பதும் புரியும். அப்பொழுதுதான் வாலியாய் விழாமல் ஜாலியாய் போரிடலாம். வெல்லலாம்.

### பிராண்ட் போட்டி (Brand Competition)

நீங்கள் விற்கும் பொருளைப் போலவே விற்பவர் பிராண்ட் போட்டியாளர்கள். ஒண்டிக்கு ஒண்டி நிற்பவர்கள். அதாவது நவீன கால அர்ஜுனர்கள். பெப்ஸிக்கு கோலா கோதாவில் நேரடியாய் இறங்கி தாக்கும் ஹகோக், ஹதம்ஸ் அப் போல. அதே கோலா, அதே சுவை, அதே வாடிக்கையாளரை கவர நினைப்பதால் இவை நேரடி பிராண்ட் போட்டி வகையறா.

### புராடக்ட் காம்பெடிஷன (Product Competition)

உங்கள் பொருளைப் போலவே மாற்றுப் பொருட்கள் பல இருக்கும். இதை புராடக்ட் காம்பெடிஷன் என்பார்கள். பெப்ஸியை எதற்கு பருகுகிறோம்? அது தாகத்தைத் தணிப்பதால். அதையே தான் ஃபேன்டா, மிரின்டா, லிம்கா, ஸ்ப்ரைட் போன்ற பானங்களும் செய்கின்றன. ரியல், ட்ராபிக்கானா, லிப்டன் ஐஸ் டீ போன்ற ப்ராண்டுகளும் செய்கின்றன. இவ்வளவு ஏன்? அக்வா.ஃபீனா, கின்லே, பிஸ்லரி போன்ற மினரல் வோட்டர் பிராண்டுகளும் நம் தாகத்தை தீர்க்கின்றன. இவை அனைத்தும் பானங்கள் என்ற பொருள் பிரிவைச் சேர்ந்தவை.

பெப்ஸி தரும் அதே பயனைத் தருபவை. அப்படியென்றால் பெப்ஸிக்கு இவையனைத்தும் போட்டியாளர்கள் தானே. இப்பேற்பட்ட பிராண்டுகள் பெப்சி விற்கும் விலையிலேயேதான் விற்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

### ஜெனரிக் காம்பெடிஷன் (Generic Competition)

வாடிக்கையாளருக்கு நீங்கள் அளிக்கும் பயனை அளிக்கும் சாதாரண பொருள்களும் போட்டியாளர்களே. இதை ஜெனரிக் காம்பெடிஷன் என்பார்கள். பெப்ஸி தணிக்கும் அதே தாகத்தை கார்பரேஷன் தண்ணீர, போர்வெல் வோட்டர் கூட தணிப்பதால இவையும் போட்டியாளர்களே. அவை ஓசியில் கிடைத்தாலும் கூட. வெயிலில் நாக்கு வறண்டு வரும் போஸ்ட்மேனுக்கு ஃப்ரிட்ஜிலிருந்து தண்ணீர தந்தால் அவர் பெட்டி கடை சென்று பெப்ஸி வாங்கத் தேவையில்லையே!

### டோட்டல் பட்ஜெட் காம்பெடிஷன் (Total Budget Competition)

நீங்கள் பூர்த்தி செய்ய நினைக்கும் வாடிக்கையாளர் தேவையை பூர்த்தி செய்ய வேறு சில பொருள் பிரிவுகள் இருக்கலாம். நீங்கள் பெற நினைக்கும் பணத்திற்கு உங்களைப் போலவே குறி வைக்கும் போட்டியாளர்கள். இதை டோட்டல் பட்ஜெட் காம்பெடிஷன் என்பார்கள்.

எதையாவது மெல்லவேண்டும், கொறிக்க வேண்டும், பருகவேண்டும் என்று நினைத்து ஒருவர் பெப்ஸி வாங்கலாம். சிப்ஸ், சொக்லேட், பிஸ்கெட் போன்றவற்றைக் கூட வாங்கலாம். அப்படியென்றால் லேஸ் சிப்ஸ், டெயிரி மில்க், பிரிட்டானியாவும் போட்டியாளர்கள் தானே. தீர்க்க நினைக்கும் தேவையை பூர்த்தி செய்து கறக்க நினைக்கும் அதே பணத்தை குறி வைப்பதால் அப்பொருள் பிரிவைச் சேர்ந்த பிராண்டுகளும் போட்டியாளர்களே.

போட்டியையும் போட்டியாளர்களையும் இப்படித் தான் முழுமையாகப் பார்க்க வேண்டும். பெப்ஸி தன் முக்கிய போட்டியாளராய் நினைப்பது கோக்கையும், தம்ஸ் அப்பையும் என்றாலும் மற்ற போட்டியாளர்களை மனதில் நிறுத்தாமல் உத்தி வகுக்காது. வகுக்கவும் கூடாது.

இன்னொரு உதாரணம் கொண்டு இதைப் பார்ப்போம். ஷாம்பு மார்க்கெட்டில் இன்று நம்பர் ஒன் பிராண்ட் க்ளினிக் ப்ளஸ். சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு வரை இந்த பிராண்ட் ஓஹோ என்றிருக்கவில்லை.

ஷாம்புவை ஒருவர் எதற்கு உபயோகிக்கிறார்? தலையை சுத்தம் செய்து அழகாக்க. இதே பயன் பெற அப்பொழுது பலர் சோப்பு உபயோகித் தார்கள். அப்படியென்றால் சோப்பும் ஷாம்புவிற்கு போட்டியாளர் தானே. பலர் இப்படி பார்க்கவில்லை. அப்பொழுது 12% இலங்கையர்களே ஷாம்பு பயன்படுத்தினர்.

12% மக்களை கட்டிக்கொண்டு மன்றாடுவதா என்று சிந்தித்தது சம்போ நிறுவனம். 88% மக்களை கவர்வோம் என்று முடிவெடுத்தது. தன் பிரதான போட்டியாளர்களாக சோப்பை பார்க்கத் தொடங்கியது. தலைக்கு சோப்பு போட்டால் முடி சொரசொரவென்று மாறி கொட்டும் க்ளினிக் ப்ளஸ் உபயோகியுங்கள். கேசம் பொலிவுடன் பளபளக்கும் என்று விளம்பரம் செய்தது.

பலரும் இதனால் கவரப்பட்டு சோப்பிலிருந்து க்ளினிக் ப்ளஸ்ஸிற்கு தாவினர். விரைவிலேயே க்ளினிக் ப்ளஸ் நம்பர் ஒன் ஆனது. போட்டியை சரியாக கணித்து உத்தி வகுத்ததால் பெற்ற வெற்றி இது. தலையில் நுரைக்க உரைக்கும் பாடம் இது!




# வெற்றி மொழி: வால்ட் டிஸ்னி



1901 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த வால்ட் டிஸ்னி அமெரிக்காவைச் சேர்ந்த புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட், தொழிலதிபர் மற்றும் திரைப்பட தயாரிப்பாளர் ஆவார். அனிமேஷன் மற்றும் தீம் பார்க் வடிவமைப்பில் பல புதுமைகளைப் புகுத்தி, இருபதாம் நூற்றாண்டின் பொழுதுபோக்கு துறையில் மாபெரும் பங்களிப்பினை அளித்தவர். மிக்கி மவுஸ், டொனால்ட் டக் போன்ற புகழ்பெற்ற கற்பனை கதாபாத் திரங்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. ஆஸ்கர் உட்பட எண்ணற்ற விருதுகளை பெற்றதோடு, அமெரிக்க அனிமேஷன் துறையில் மட்டுமின்றி உலகெங்கிலும் அறியப்பட்ட முக்கியமான நபராக விளங்கினார்.

# உங்களால் ஒன்றை கனவுகாண முடியுமென்றால், அதை உங்களால் செய்யவும் முடியும்.

# சாத்தியமற்ற விஷயங்களை செய்வது என்பது ஒரு வகையான வேடிக்கையே.

# ஒரு செயலை ஆரம்பிப்பதற்கான வழி, பேச்சை நிறுத்திவிட்டு செயல்பாட்டை தொடங்குவதே.

# எனக்கு இதுவரை தெரிந்த எந்த பெண்களையும் விட அதிகமாக நான் மிக்கி மவுஸை நேசிக்கிறேன்.

# மீண்டும் மீண்டும் கிடைக்கும் வெற்றிகளை நான் விரும்புவதில்லை, மற்ற விஷயங்களை நோக்கி நான் செல்ல விரும்புகிறேன்.

# நான் விமர்சகர்களை மகிழ்விக்க முயற்சி செய்யவில்லை, எனது வாய்ப்புகளை பொதுமக்களுக்காக கொண்டு செல்கிறேன்.

# துன்பத்தில் பூக்கும் பூக்களே அனைத்திலும் அரிதான மற்றும் மிகவும் அழகான ஒன்று.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,083.01 | 6,275.62 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,212.01 | 3,311.94 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 3,735.856

***உயர்வைற்றுங்குன்று*** அதம் கப்பிரல்(1.50), மல்ரி பினான்ஸ்(15.00)எஸ்எம்பி லீசிங்(0.40), லக்கி லங்கா(1.70), ரெஸ் அக்ரோ(1.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** அகலவத்தை(19.00), பரஹன்(50.10)அபான்ஸ் பினான்சியல்(34.00)ஏஐஏ இன்சுரன்ஸ்(242.20), பிறவுண்ஸ் கப்பிரல்(1.10). **மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.75 | 146.55 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 200.05 | 207.21 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.20 | 167.65 |
| சுவிஸ் பிராங் | 148.22 | 154.40 |
| கனேடிய டொலர் | 108.10 | 112.63 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.49 | 111.52 |
| சிங்கப்பூர் டொலர் | 105.12 | 109.15 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

## 136 திரை உலகில் எம்.ஜி.ஆர் எதிர்நீச்சல்

கண்டியில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஹந்தானா என்ற இடத்தில் எம்.ஜி.ஆர். பிறந்தார். அந்த இடம் 'தமிழில் பச்சைக்காடு என்று அழைக்கப் படுகிறது. எம்.ஜி.ஆர். பிறந்த வீட்டில் தற்போது பள்ளிக்கூடம் நடந்து வருகிறது.

எம்.ஜி.ஆருக்கு எம்.ஜி. சக்கரபாணி, பாலகிருஷ்ணன் என்று இரண்டு அண்ணன்கள், கமலாட்சி, சுபத்ரா என்ற 2 சகோதரிகள்4 குழந்தைகளுக்குப் பின் கடைக்குட்டியாகப் பிறந்தவர் எம்.ஜி.ஆர்.

பாலகிருஷ்ணன், கமலாட்சி, சுபத்ரா ஆகிய மூவரும் சிறு வயதிலலேயே இறந்துவிட்டனர். சக்ரபாணியையும் எம்.ஜி.ஆரையும் கோபால மேனனும் சத்யபாமாவும் அன்புடன் வளர்த்து வநதனர்.

எம்.ஜி.ஆருக்கு 2 1/2 வயதானபோது குடும்பத்துடன் தாயகம் திரும்பினார் கோபாலமேனன். முன்பு செல்வச் செழிப்புடன் வாழ்ந்த அவர் குடும்பம் ஒத்தப்பாலம் என்ற இடத்தில் வாடகை வீட்டில் வசித்தது.

தந்தை மரணம்

1920 ஆம் ஆண்டு கோபாலமேனன் திடீரென்று மாரடைப்பால் காலமானார். அப்போது எம்.ஜி.ஆருக்கு மூன்று வயது.

இரண்டு மகன்களையும் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு சத்யா அம்மையார் தலையில் விழுந்தது.

அவருடைய தம்பி நாராயணனும் குடும்ப நண்பர் வேலு நாயரும் அப்போது கும்பகோணத்தில் வசித்து வந்தனர். குழந்தைகளுடன் அங்கு சென்றார் சத்யபாமா.

நாராயணன், ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி என்ற நாடகக் குழுவில் பின்பாட்டு பாடி வந்தார்.

கும்பகோணம் ஆணையடிப் பள்ளியில் சக்ரபாணியும் எம்.ஜி.ஆரும் சேர்ந்தார்கள். இலங்கையில் இருந்துகொண்டு வந்திருந்த பணமும் நகைகளும் தீரும் வரை அன்றாட வாழ்க்கை சிரமம் இன்றி கழிந்தது. அதன் பின் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க அரும்பாடு பட்டார் சத்யபாமா.



குடும்பக் கஷ்டத்தைப் போக்க சத்யபாமா அம்மையாரிடம் அவர் தம்பி நாராயணன் ஒரு யோசனை தெரிவித்தார். சக்ரபாணியும் ராமச்சந்திரனும் பார்ப்பதற்கு அழகாக இருக்கிறார்கள். நான் வேலை பார்க்கும் கம்பெனியில் சேர்த்துவிட்டால் விரைவில் முன்னுக்கு வந்து விடுவார்கள். என்பதே அவருடைய யோசனை.

குழந்தைகளை நல்ல முறையில் படிக்க வைக்க வேண்டும் என்று சத்யபாமா விரும்பிய போதிலும் குடும்ப சூழ்நிலையைக் கருதி அவர்களை நாடகத்தில் சேர்க்க சம்மதித்தார்.

அதைத் தொடர்ந்து அவர்களை நாடகத்தில் சேர்த்துவிட்டார் நாராயணன். அப்போது அந்த கம்பெனியில் பி.யு.சின்னப்பா, டி.எஸ்.பாலையா ஆகியோர் நடிகர்களாக இருந்தனர்.

முதலில் சிறு வேடங்களில் நடித்து வந்த எம்.ஜி.ஆர் பிறகு கதாநாயகனாக உயர்ந்தார்.

முதல் படம்

இந்த சமயத்தில்தான் தமிழில் பேசும் படங்கள் வரத் தொடங்கின.

1935 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.வாசன் எழுதிய சதிலீலாவதி என்ற கதை. சினிமாவாக தயாரிக்கப்பட்டது. அதில் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் வேடத்தில் எம்.ஜி.ஆர். நடித்தார்.


இந்தப் படத்தில் நடித்தபோது எம்.ஜி. ஆருக்கு வயது 19. முதல் படத்தில் நடித்ததற்காக அவருக்கு கிடைத்த சம்பளம் நூறு ரூபாய். அதை அப்படியே அம்மாவிடம் கொண்டு போய் கொடுத்து ஆசி பெற்றார்.

எம்.ஜி.ஆரின் இரண்டாவது படம் இரு சகோதரர்கள். இதில் சக்ரபாணியும் நடித்தார். இந்தப் படமும் வெற்றிகரமாக ஓடியது.

திருமணம்

தொடர்ந்து சிறுசிறு வேடங்களில் நடித்து வந்த எம்.ஜி.ஆருக்கு திருமணம் செய்து வைக்க சத்யபாமா அம்மையார் விரும்பினார். (தொடரும்)

# இராணுவத்துக்குள் மகிந்த விசுவாசிகளை களையெடுப்பது எப்படி?



கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி இலங்கை பொலி ஸாரால் கதிர்காமத்தில் உள்ள பாதயாத்திரிகள் தங்குமிடத்திலிருந்து ஆபத்தான வெடிபொரு ட்கள் நிரப்பப்பட்ட தற்கொலை அங்கி ஒன்று மீட்டெடுக்கப்பட்டது. இத்தற்கொலை அங்கி இலங்கையின் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ கண்டெடுக்கப்படவில்லை.

இது ராஜபக்ஷாக்களின் கோட்டையாக விளங்கும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள கதிர்காமம் என்னும் இடத்திலேயே கண்டெடுக்கப்பட்டது. இது தொடர்பாக 2012 பெப்ரவரி 01 அன்று 'ஐலண்ட்' பத்திரிகையில் பின்வருமாறு செய்தி வெளியிடப்பட்டிருந்தது:

'பாதயாத்திரிகர்கள் தங்குமிடத்தில் பழைய தற்கொலை அங்கி ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. கதிர்காமத்திலுள்ள பாதயாத்திரிகர்கள் தங்குமிடம் ஒன்றைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் சலவை இயந்திரத்திலிருந்து தற்கொலை அங்கி ஒனறைக் கண்டெடுத்துள்ளனர். இது தொடர்பாக உள்ளூர் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து வெடிகுண்டு செயலிழக்கும் அணியினரால் தற்கொலை அங்கி அங்கிருந்து அகற்றப்பட்டு அதிலிருந்த வெடிகுண்டுகள் செயலிழக்க வைக்கப்பட்டன. இச்சலவை இயந்திரமானது ஐந்து ஆண்டுகளாக பயன்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் தற்கொலை அங்கி கண்டெடுக்கப்பட்டமை தொடர்பாக பாதயாத்திரிகர்களின் ஓய்வகப் பணியாளர்கள் சிலர் உட்பட எட்டுப் பேரை இலங்கை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இத்தற்கொலை அங்கி குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் றொகான் தெரிவித்தார். யுத்த காலப்பகுதியிலேயே இந்த அங்கி அங்கு கொண்டு வரப் பட்டதாக பொலிஸ் பேசசாளர் மேலும் தெரிவித்தார்'

'ஐலண்ட்' பத்திரிகை மட்டுமல்லாது, அனைத்து ஊடகங்களும் கதிர்காமத்தில் இவ்வாறானதொரு தற்கொலை அங்கி கண்டுபிடிக்கப் பட்டமை தொடர்பான செய்தியை மக்கள் மத்தியில் இருட்டடிப்புச் செய்தன. இந்தச் செய்தி ஐலண்ட் பத்திரிகையின் முதன்மைப் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் சிறியதொரு செய்தியாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதுமட்டுமல்லாது, விடுதலைப் புலிகள் செயற்பட்ட காலத்திலேயே இத்தற்கொலை அங்கி கதிர்காமத்தில் மறைத்து வைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியின் சொந்த இடத்தில் அல்லது 'அதிசயத்தின் தலைநகரில்' கண்டெடுக்கப்பட்ட போது வெளியுறவு அமைச்சராக ஜி.எல்.பீரிஸ் பதவி வகித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

எனினும் தற்கொலை அங்கி கண்டெடுக்கப் பட்டமை தொடர்பாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் எவ்வித ஊடக மாநாட்டையும் நடத்தவில்லை. இது மட்டுமல்லாது இவ்வாறானதொரு ஊடக மாநாட்டை நடத்தி அதில் புலிப் பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்கிவிட்டது, இதனால் ஆபத்தான சூழ்நிலை உருவாகியுள்ளது என்ற கருத்தை இந்த அங்கி கண்டெடுக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களுக்குள் பீரிஸ் தெரிவிக்கவில்லை. அப்போது நாமல் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுபபினராக இருந்தார். இவர் தனது ருவிற்றர் பக்கத்தில் 'புலிப் பயங் கரவாதம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இது தொடர்பில் எனது அப்பாவே பொறுப்புக் கூறவேண்டும்' எனத் தெரிவிக்கவில்லை.

விமல் வீரவன்சவும் எந்தவொரு ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு, 'மகிந்த பிறந்த இடத்தில் விடுதலைப் புலிகள் மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டனர், நாடு மிகவும் மோசமான ஆபத்தைச் சந்தித்துள்ளது' என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லை. இதேபோன்ற அப்போது பாதுகாப்புச் செயலராகக் கடமையாற்றிய கோத்தபாய ராஜபக்ஷ இந்தச் சம்பவம் தொடர்பாக எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை.

(தொடரும்)

கொட்டுவது தேளின் இயற்கைக் குணம். காப்பாற்றுவது மனிதனின் இயற்கைக் குணம். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கின் முதலமைச்சர் தீவிர போக்குடையவரா?

வடக்கு மாகாண சபை தீர்வுத்திட்ட வரைபு ஒன்றை முன்வைத்த நிலையில் தென்பகுதி பேரினவாதிகள் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் கடும் போக்குடையவராகவும் நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச் செல்பவராகவும் விமர்சித்து வருகின்றனர்.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அனைத்துத் தரப்பினரதும் மரியாதைக்குரியவர். சர்வதேசத்திலும் அவருக்கு அதி உயர் மதிப்பு உண்டு.

இந்நிலையில் அவரை தீவிர போக்குடையவராகக் காட்டுவதில் பேரினவாதிகள் கடுமையாக நிற்கின்றனர்.

தமிழ் மக்களின் தலைவர் என்ற தகைமையில் இருக்கக்கூடிய ஒருவரை தீவிர போக்குடையவராக தென்பகுதிப் பேரினவாதிகள் காட்டுவதன் மூலம் அவர்கள் எதனைச் சாதிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்டம் எத்தகைய விடயங்களை முன்வைக்கின்றது என்பதை முழுமையாக அறிய முன்னரே தென்பகுதி பேரினவாதிகள் அதனை விமர்சிப்பதும் வடக்கின் முதலமைச்சர் நாட்டை பிரிவினைக்கு உட்படுத்த முற்படுகின்றார் என்று கூறுவதும் இனவாதத்தைத் தொடர்ந்தும் சிங்கள மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என பேரினவாதிகள் தூண்டுவதாகவே இருக்கும்.

எது எப்படியாயினும் வடக்கு மாகாண சபை முன்வைத்த தீர்வுத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை பிரிவினைவாதியாக விமர்சிப்பதை தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

எனவே பேரினவாதிகள் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக முன்வைக்கும் விமர்சனங்களை முறியடிக்கும் கடமைப்பாடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைக்கும் வடக்கு மாகாண சபைக்கும் உண்டு எனலாம்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்களே இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பதால்,

வடக்கின் முதலமைச்சர் தொடர்பாக சிங்களப் பேரினவாதிகள் முன்வைக்கும் விமர்சனங்களை பாராளுமன்றத்தில் கண்டித்து உரையாற்றுவது சம்பந்தரின் தார்மீகக் கடமையாக இருக்கும்.

இதேபோல் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை வடக்கு மாகாண சபையில் கொண்டு வர வேண்டும் எனக் கூறி அப்படி ஒரு தீர்வுத்திட்டத்தை முதலமைச்சர் மூலம் முன்மொழிய வைத்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தென்பகுதிப் பேரினவாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் தங்களின் எதிர்க்கருத்தை சபையில் பதிவு செய்ய வேண்டும்.

இல்லையேல் வடக்கின் முதலமைச்சர் மூலம் தீர்வுத்திட்ட வரைவை முன்மொழியச் செய்து அவரை ஒரு தீவிர போக்குடையவராக தென்பகுதியில் காட்ட வடக்கு மாகாண உறுப்பினர்கள் தீட்டிய திட்டமே சபையில் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டம் என்பதாக நிலைமை மாறி விடும் என்பதால் வடக்கு முதலமைச்சர் குறித்து தென்பகுதி பேரினவாதிகள் முன்வைக்கும் பிரசாரங்களுக்கு தக்க பதிலடி கொடுப்பது வடக்கு மாகாண சபை உறுப்பினர்களின் தலையாய கடமையாகும்.

# தனியார் நிறுவனங்களின் வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்- ஐங்கரநேசன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அண்மைக் காலமாகப் பல தனியார் நிறுவனங்கள் புதிய பயிரினங்களை விவசாயிகளிடையே அறிமுகம் செய்து வருகின்றன. இந்நிறுவனங்களின் நம்பகத்தன்மையைத் தெரிந்து கொள்ளாமல், வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் பிரதேச கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது,

யாழ்ப்பாணத்தில் இஞ்சி வளர்ப்பை அறிமுகம் செய்த தனியார் நிறுவனம் ஒன்றால் தாங்கள் இலட்சக் கணக்கான ரூபாய்கள் நட்டம் அடைந்திருப்பதாக பல விவசாயிகள் எங்களிடம் முறையிட்டுள்ளனர். நட்ட ஈட்டைப் பெற்றுத் தருமாறு கோரி ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும் கடிதங்கள் கூட அனுப்பி வைத்திருக்கின்றனர். இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையை எங்களுடைய விவசாயிகள் தவிர்த்திருக்க முடியும்.

யுத்தத்திற்குப் பிறகு அபிவிருத்தி என்ற பெயரில் பல தனியார் நிறுவனங்கள் சந்தனமரம், இஞ்சி என்று பல புதிய பயிர்களை அறிமுகம் செய்து வருகின்றன. புதிய பயிரினங்களை அறிமுகம் செய்யும்போது முதலில் அவை எமது பிரதேசத்துக்குப் பொருத்தமானவையா? என்று தீர்மானிக்க வேண்டும். இஞ்சி வளர்ப்பில் விவசாயிகளை ஈடுபடுத்திய தனியார் நிறுவனம் விவசாயிகளுக்கு முழுங்காவிலிருந்து மண்ணை எடுத்து வந்து கொடுத்திருக்கிறது. பெரும் பாலும், விவசாயத் திணைக்களத்தின் கவனத்துக்கு வராமலேயே இவை இடம் பெறுகின்றன.

அதிக இலாபம் கிடைக்கும் என்ற கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி எமது விவசாயிகளும் இவற்றில் முதலீடு செய்கிறார்கள். கடைசியில், இலவு காத்த கிளியாக ஏமாறும்போதே நட்டஈட்டைப் பெற்றுத்தருமாறு கோரி எங்களிடம் வருகின்றார்கள். இது தொடர்பாக நாங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டால் எங்களை அபிவிருத்திக்கு எதிரானவர்களாகச் சமூகத்துக்குக் காணபிக்கும் முயற்சியில் அந்நிறுவனங்கள் ஈடுபடுகின்றன.

தனியார் நிறுவனம் ஒன்றில் எமது விவசாயிகள் இஞ்சியில் பெரும்பணத்தை முதலீடு செய்வது தெரிய வந்த உடனேயே எமது விவசாயத் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பாக விழிப்பாக இருக்குமாறு ஊடகங்களின் மூலம் கேட்டிருந்தார்கள். இப்போதும் அதே நிறுவனம் தங்களிடம் காளான் செய்கையில் முதலீடு செய்யுமாறு விவசாயி களைக் கேட்டுவருகிறது.

இஞ்சி, காளன் செய்கை தொடர்பாக எமது விவசாயத் திணைக்களம் எவ்வித கட்டணங்களும் இல்லாமல் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இலவசமாக நடுகைப் பொருட்களையும் வழங்கி வருகிறது. எனவே விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரின் ஆலோசனைகளைப் பெற்றே புதிய பயிரினங்களில் முதலீடுகளைச் செய்ய முன்வரவேணடும். தனியார் நிறுவனங்களின் நம்பகத் தன்மையைத் தெரிந்து கொள்ளாமல், வாக்குறுதிகளை மட்டும் நம்பி ஏமாற வேண்டாம் என்று தெரிவித்துள்ளார். (இ)

# பசுமைக் கட்சி பதிவை ரத்துச் செய்ய தீர்மானம்

(கொழும்பு)

பசுமை கட்சியின் பதிவை இரத்து செய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த கட்சியின் வருடாந்த கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிக்காமையே இதற்கு காரணம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம் மொஹமட் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிகளை மீள் பதிவு செய்வதன் நிமித்தம் கட்சிகளின் வருடாந்த கணக்காய்வு அறிக்கையை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பிற்கு அமைய பல கட்சிகள் தங்களின் வருடாந்த கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்திருந்த போதிலும், சில கட்சிகள் அறிக்கையை சமர்பிப்பதற்கு கால அவகாசம் கோரியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார். (12)

# நாமல் ராஜபக்ஷவுக்கு விமானத்தில் இருந்து வாழ்த்து

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் 30 ஆவது பிறந்த நாள் நேற்றாகும்.

நேற்றைய தினம் முழுவதும் பேஷ்புக் ஊடாக நாமலுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

சமூக வலைத்தளங்கள் மூலமாக நாமல் ராஜபக்ஷவுக்கு பலர் பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

விமானி ஒருவர் விமானத்தில் இருந்தவாறு வாழ்த்து அட்டை ஒன்றை காட்சிப்படுத்தி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 திகதி கொழும்பில் பிறந்தார். (12)

# பொலிஸ் சேவையில் 10 ஆயிரம் வெற்றிடங்கள்

(கொழும்பு)

பத்தாயிரம் பொலிஸ் கானஸ்டபிள் சேவைக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பொலிஸ சேவையை சிறந்த முறையில முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் 2 ஆயிரத்து 500 பேரை சேவையில் அமர்த்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த விடயம் குறித்து பாதுகாப்பு செயலாளருடன் கலந்துரையாடியுள்ளதாகவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார். (12)

# தொலைபேசி பயன்படுத்தியவர்; மின்னல் தாக்கி பலி

(கொழும்பு)

குருவிட - படதொட பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர நேற்று முனதினம் உயிரிழந்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்திக்கொணடிருந்த போதே அவர் இவ்வாறு மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் பட தொட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான ஒருவரே பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

சடலமானது வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, பிரேதப் பரிசோதனைகளின் பின்பு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (12)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30மணியிலிருந்து 5மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் ஜெயபுரம், நாகபடுவன், குமுழமுனை, நாச்சிக்குடா, முழங்காவில், வேரவில், ஆனைவிழுந்தான், 651 வது படைப்பிரிவு முகாம, 652வது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திறமை உயர்வு



ஏதோ ஒரு வகையிலோ, சில வகைகளிலோ, திறமைசாலியாக நீ இருக்கலாம் அல்லது அப்படி இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கலாம். உன் திறமைக்குக் கடந்த கால மனித இனத் தொடரும் இக்காலச் சமுதாயத் தொடரும் ஆதாரம் என்பதை மறந்துவிடாதே. இந்த உணர்வு உன் திறமைக்கு வீழ்ச்சி ஏற்படாது பாதுகாப்பளிக்கும். கடமையிலே உன்னை உயர்த்தும், உனது திறமையை மேலும் மேலும் அதிகரிக்கும்.

ஒவ்வொரு துறையிலும் நீ அடைந்துள்ள உயர்வைவிட அதிகமான உயர்வை அடைந்துள்ளோர் பலர் இருக்கின்றார்கள் என்பதையும் மறந்து விடாதே.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது உன்னைவிடத் திறமைசாலிகளைப் பாராட்டுவதும் உன்போன்ற திறமையில் முன்னேற்ற ஆர்வம் கொண்டுள்ளவர்களை உற்சாகப்படுத்துவதும் உன் திறமைக்கோர் சிறப்பளிக்கும் சாதனமாகும்.

சுயநல நோக்கத்தோடு பிறரைப் புகழ்வது கயமைச் செயல் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

# சதாசிவம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி





சதாசிவம் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் பி.ப 4 மணிக்கு கம்பர்மலை யங் கம்பன்ஸ் வி.கழக மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நவஜீவன்ஸ் வி.கழகம் கொம்மாந்தறை இ.வி. கழகத்தினை துடுப்பெடுத்தாடப் பணித்தது. ஆனாலும் நவஜீவன்ஸ் விளை யாட்டுக் கழக வீரர்களின் துல்லிய மான பந் திற்கு முகம் கொடுக்க முடியாமல் 8.2 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 48 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நவஜீவன்ஸ் வி.கழக 8.3 ஓவரில் 4 இலக்குகளைஇழந்து வெற்றி இலக்கான 48 ஓட்டத்தை பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. இப் போட்டியின் சிறந்த வீரனாக பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் பிரகாசித்த நவஜீவன்ஸ் வி.கழக வீரன் இ. பிரியந்தன் (பொபி) தெரிவு செய்யப்பட்டார். (கு)

# காற்பந்தாட்ட சுற்றுத் தொடர் கரணவாய் கொலின்ஸ் வெற்றி

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் காற்பந்தாட்டத்தொடரில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தப்பட்டு வரும் இந்தத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகமும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டத்தின் ஆரம்பம் கொலின்ஸ்க்கு சற்று சறுக்கலாக அமைந்துள்ளது. மத்தியில் வைத்து முன்னகர்த்தப்பட்ட பந்தை வல்வையின் சஞ்சீவன் எவரும் எதிர்பாராத விதமாக கோலாக மாற்றினார்.

தொடர்ந்து 5ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் சார்பாக பதில் கோல் போட்டு அதிர்ச்சி கொடுத்தார் விஷ்ணு. அடுத்த 5ஆவது நிமிடத்தில் பின்கள வீரர் பானுராஜ் மீண்டும் கொலின்ஸ் சார்பாக மற்றொரு கோலைப்பதிவுசெய்ய 2:1 என்ற கொலின்ஸின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் 3ஆவது நிமிடத்தில் கொலின்ஸின் வீரர் குமார் பிறிதொரு கோலைப் பதிவு செய்ய 3:1 என்ற அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கொலின்ஸ் விளையாட்டுக்கழகம். (கு)

## பரபரப்பான சுப்பர் ஓவரில்

# தொண்டைமானாறு ஒற்றுமையை வென்றது நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.க நடத்தும் அழைக்கப்பட்ட 8 அணிகளுக்கு இடையிலான 11 நபர் 10பந்து பரிமாற்றத்தை கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யங்கம்பன்ஸ்வி.க. மைதானத்தில் இடம் பெற்றது.

இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் நவஜீவன்ஸ் வி.கழகத்தினை எதிர்த்து தொண்டைமானாறு ஒற்றுமை வி.கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நவஜீவன்ஸ் வி.கழகம் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. நிர்ணயிக்கப்பட்ட 10பந்துப் பரிமாற்றம் நிறைவில் தொ. ஒ.வி. கழகம்69ஓட்டங்களை பெற்றது.

70ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ந.வி.க. 10பந்து பரிமாற்றம் நிறை வில் 69 ஓட்டங்களையேபெற்றுக்கொண்டது.

தொடர்ந்து வெற்றி தோல்வியினை தீர்மானிக்கும் சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய ந.வி.க 11 ஓட்டங்களை பெற்றது. 12 ஓட்டங்களைப்பெற்றால்வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தொ.ஒ.வி. கழகம் 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

பலம்பொருந்திய தொண்டைமானாறு ஒ.வி.கழகம் மகேசன் வி.கழகம் அண்மையில் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கிரிக்கெட் போட்டியில் சம்பியன் ஆகியமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்திற்கான வல்லவன் கிண்ணத்துக்கான காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும்

மாலை 4மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தாழ்வுபாடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன. (கு)

# கரம் தொடர்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 15வயது,19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமான கரம் தொடர் இன்று திங்கட் கிழமையும் மேசைப்பந்தாட்டம் நாளை செவ்வாய்க் கிழமையும் யாழ்.மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. (கு)

# திக்கம் இளைஞர் வி.கழக காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## அடுத்த சுற்றில் ஆதிசக்தி, சிறிவிக்னேஸ்வரா

திக்கம்இளைஞர்விளையாட்டுக்கழகம்நடத்திவரும்காற்பந்தாட்டத் தொடரில் வல்வை ஆதி சக்தி விளையாட்டுக்கழகமும் புத்தூர் சிறிவிக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் இந்தத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றது. தொடரில் அண்மையில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில்வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியும் கோல்கணக்கு இல்லாமல் நகர்ந்த போதிலும் 15 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆதிசக்தியின் பிரசாந்த கோல் ஒன்றைப் பதிவு செய்ய அக்கோலின் மூலம் வெற்றி பெற்றது வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும் புத்தூர் விக்னேஸ்வராக்கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

பரபரப்பாக இடம்பெற்ற முதல்பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் தமது கோல்பகுதியில் வைத்து விதிகளுக்கு முரணாக பாரதி வீரர் விளையாட எதிரணிக்கு தண்ட உதை வழங்கப்பட்டது. வாய்ப்பு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட விக்னேஸ்வரா சார்பாக முதல் கோல் பதிவானது.

18 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்து ஆட்டத்தை சமநிலைக்கு கொண்டு வந்தது பாரதி.

மேலதிக கோல்கள் எவையும் பதியப்படாமல் முடிபுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் இறுதிக்கட்டம் வரை கோல்கணக்கில் மாற்றங்கள் ஏற்படாததால் ஆட்டம் சமநிலையில் நிறைவடையும் நிலை ஏற்பட்டது.

இருப்பினும் இறுதி நிமிடத்தில் அசத்தலான கோல் ஒன்றை விக்னேஸ்வரா வீரர் பிரசாந் பதிவு செய்ய 2:1 என்ற வெற்றியை பறித்தெடுத்தது புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம். (கு)

# புதிய விடியல் காற்பந்தாட்டம் அரையிறுதியில் ஞானமுருகன்



புதிய விடியல் காற்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணியை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தது ஞான முருகன் அணி.

முதற்பாதி ஆட்டம் கோல் எதுவும் பெறாத நிலையில் முடிவுற்றது. இரண்டாம் பாதி தொடங்கிய சில நிமிடங்களில் யங்கென்றிஸ் அணி ஒரு கோலினைப் போட ஞான முருகன் அணி தமது ஆட்ட வேகத்தை மாற்றி பின்கள வீரர்களின் துடிப்பான தடுப்பாட்டத்தின் மூலமும் முன்கள வீரர்களின் அதிரடியான ஆட்டத்தின் மூலமும் 3 கோல்களை போட்டு யங்கென்றிஸ் அணியை சொந்த மைதானத்திலேயே வெற்றி பெற்றது. ஞான முருகன் அணி சார்பாக ஜெகன், சுபாஸ், சுமித் தலா ஒரு கோலினை போட்டனர். (கு)





அண்மையில் நடைபெற்ற பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியனான யாழ்ப்பாண பிரதேச செயலக அணியினரையும் 2 ஆம் இடத்தினைப் பெற்ற நல்லூர் பிரதேச செயலக அணியினரையும் படங்களில் காணலாம்.

## பேரவையின் தீர்வு...

டம் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், த.வசந்தராஜா ஆகியோரின் இணைந்தலைமையில் நேற்றையதினம் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறுதெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவையினால் தயாரித்து முன்மொழிவு செய்யப்பட்ட தீர்வுத்திட்ட வரைபில் திருத்தங்களை நாம் செய்வதற்கு தமது ஆலோசனைகள், கருத்துக்கள் விமர்சனங்களை முன்வைத்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளிலிருந்தும் கிடைக்கப் பெற்ற கருத்துக்களை உள்வாங்கியதுடன் எங்கள் மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கருத்துக்களையும் உளவாங்கி இத்திருத்தங்களை செய்துள்ளோம். இன்று திருத்தம் செய்யப்பட்டவற்றை உள்வாங்கி மிக விரைவில் அச்சுப்பிரதியை வெளியிடவுள்ளோம்.

இத் தீர்வுத்திட்டமானது ஏற்கெனவே நாங்கள் முன் வைத்தது போல் பெரியளவு மாற்றங்கள் எதுவுமின்றி திருத்தப்பட்டுள்ளது.

அடுத்ததாக விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் நாம் ஜேர்மன் முறையில் அமைந்த தேர்தல் முறைமை பற்றி கூறியிருந்தோம் ஆனால் எமக்கு கிடைத்த விமர்சனங்களின் அடிப்படையில் வடகிழக்குக்கு வெளியே வாழ்கின்ற சிறுபான்மையின மக்கள் மலையகத்தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களுடைய பிரதிநிதித்துவமாது குறைக்கப்படலாம் என்ற அடிப்படையில் செய்யப்பட்ட விமர்சனங்களை கருத்தில் கொண்டு மீண்டும் ஆலோசித்து திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கிடையில் பொது விடயங்கள் தொடர்பில் எவ்வாறு தொடர்புகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது பற்றியும் மாநிலங்கள் தங்களுக்கிடையிலான திட்டங்கள் தொடர்பில் இரு மாநிலங்களும் கலந்தாலோசித்து செயற்படவேண்டும் என்ற விடயத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் அதிகுறைந்த நியமங்களை வரையறுப்பது தொடர்பில் மத்திய அரசுடன் சேர்ந்ததான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்பதை கூறியுள்ளோம். குறிப்பாக கல்வி, சுகாதாரம், மருத்துவம் என்பவற்றில் செய்யவேண்டும் என தெரிவித்துள்ளோம்.

ஆளுநருக்குரிய பதவிகளில் தன்னுடைய அரசியல் அமைப்பினால் வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறி செயற்படுமிடத்தில் அவரை எவ்வாறு விலக்கவேண்டும் என்பது பற்றி தெரிவித்துள்ளோம்.

வட கிழக்கு மாகாணத்தில் அவசரகால சட்ட நிலைமைகள் முதலமைச்சினால் பிரகடனப்படுத்தப்படலாம் என்பது பற்றியும் அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படலாம் என்பது பற்றியும் திருத்தங்கள் செய்துள்ளோம்.

மேலும் தமிழ் மக்கள் வடகிழக்கு மாகாணத்தில் எவ்வாறு ஒரு தேசமாக, மொழி, நிலப்பரப்பு, பொருளாதாரம், கலைபண்பாடு என்ற அடிப்படையில் எவ்வாறு ஒன்றாயிருந்து நிர்ணயிப்பது என்பது தொடர்பாக இத் தீர்வுத்திட்டம் வரையப்பட்டுள்ளது.

அந்தவகையில் முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைகளுக்கு அவர்களால் தான் தீர்வுத்திட்டம் தயாரித்து தர முடியும் அதேபோல் மலையக மக்களின் பிரச்சினைக்குரிய தீர்வுத்திட்டங்களை அவர்கள் உருவாக்கி தரும் பட்சத்தில் அவர்களுடன் கலந்தாலோசித்து உள்வாங்குவதற்கு தயாராக உள்ளோம்.

தமிழ் மக்கள் சார்பில் முன்வரைபு ஒன்று வைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில எந்தவொரு அரசியல் நோக்கமும் இன்றி தமிழ் மக்களின் நலன்களுக்காக இத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளோம்.

இத் தீர்வுத்திட்டத்தை நாம் தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் தான் முன்வைத்துள்ளோம். எந்தவிதமான உரிமை கோரலையும் நாங்கள் செய்யவில்லை எனவே யாருடனும் இது தொடர்பாக பேசுவதற்கு தயாராக இருக்கிறோம்.

இத்திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்கும் முன் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் சிவில் அமைப்புக்கள் சேர்ந்து சிங்கள தரப்புடன் உடன்பாடு ஒன்றுக்குவரவேண்டும்.

நம் பிரதிநிதிகள் ஊடாகவும் முதலமைச்சர் ஊடாகவும் எமது அமைப்பின் ஊடாகவும் சர்வதேச சமூகத்தின் ஊடாகவும் இத் தீர்வுத்திட்டத்தை கொடுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களை கொடுப்பதற்கும் தீர்மானித்துள்ளோம் என மேலும் தெரிவித்தார். (ந-9)

## சுதந்திர வர்த்தக...

களும் தொடர்ந்தும் ஒத்துழைப்புடனும், இணைந்தும் செயற்படும் என்றும், சோதனை மிக்க தருணங்களில் ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்த சீனாவும் இலங்கையும், எல்லாக் காலத்திலும். நட்புறவுடன் இருக்கும் என்றும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவுக்கான சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலையில் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதமர் தனது சீன விஜயத்தின்போது இலங்கை தொடர்பில் மேற்கொண்ட தீர்மானங்கள் மற்றும், அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

2017ஆம் ஆண்டு இலங்கை மற்றும் சீனாவுக்கிடையில் முக்கியமான வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் G7 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜூலை மாதமளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பான் பயணமாகவுள்ளார். G7 மாநாட்டை முடித்துக்கொண்டு ஜனாதிபதி நாடுதிரும்பிய பின்னர் அடுத்த மூன்று வருடங்களுக்கான பொருளாதார நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், போட்சிட்டியை யாருக்கும் நிரந்தரமாக வழங்கவில்லை. போட்சிட்டிக்கான நிலங்கள் 99 வருடகால குத்தகையின் அடிப்படையிலேயே வழங்கப்படும். இந்த போட்சிட்டியில் யாவரும் நிலங்களை பெற்றுக்கொள்ளலாம், ஆனால் குத்தகையின் அடிப்படையிலேயே பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்தார்.

அதுமட்டுமின்றி ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் மற்றும் மத்தள விமான நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் சீனா உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளது எனவும் பிரதமர் கூறினார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை ஒரு பொருளாதார மத்திய நிலையமாக உருவாக்க உள்ளதாகவும், அதேநேரம் இந்த திட்டத்திற்காக சீனாவிடமிருந்து ஒருசதம் கூட கடனாக பெறப்போவதில்லை, ஆனால் நன்கொடைகள் மற்றும் முதலீடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த வருடத்திற்குள் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் முக்கியமான வர்த்தக பொருளாதார உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும் எனவும் இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.(12)

## கிராம சேவகர்...

குறித்த பகுதியில் 25 படகுகளில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களின் விபரங்களை சேகரிப்பதற்கு பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம சேவையாளர் அப்பகுதிக்குச் சென்றுள்ளார்.

அங்கிருந்த மீனவர் ஒருவரிடம் விபரங்களைக் கேட்க முற்பட்டவேளை ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியநிலையில் கிராம சேவையாளர் மீது மீனவர் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான கிராம சேவையாளர் காயமடைந்த நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (281-310)

# புதிய மகாநாயக்க தேரரை சந்தித்து ஜனாதிபதி ஆசி



(கண்டி)

புதிதாக அஸ்கிரி மஹா நாயக்கர் பதவிக்கு நியமிக்கப்பட்ட வறக்காகொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரத்தன நாயக்க தேரரை சந்திப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று பிற்பகல் கண்டி அஸ்கிரி மஹா விகாரைக்குச் சென்றார்.

புதிய மஹா நாயக்க தேரரைச் சந்தித்து அவரிடம் நலன் விசாரித்து ஜனாதிபதி, அவருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.புதிய மஹா நாயக்க தேரர் பிரித் ஓதி ஜனாதிபதியை ஆசீர்வதித்தார்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

பௌத்த மத மறுமலர்ச்சியுடன் இந்நாட்டைப் பொருளாதார ரீதியில் சுபீட்சமானதாக மாற்றுவது தனது எதிர்பார்ப்பாகுமெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஏனைய மதங்களையும் போசித்து மத ரீதியான சூழலுடன் இணைக்கப்பட்ட சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

வரலாற்று பிரசித்திபெற்ற தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, மல்வத்த விகாரைக்குச் சென்று மல்வத்து மஹா நாயக்கர் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள நாயக்க தேரரை சந்தித்து நலன் விசாரித்து குறுகிய உரையாடலில் ஈடுபட்டார்.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, மத்திய மாகாண ஆளுநர் நிலுகா எக்கநாயக்க, முதலமைச்சர் சரத் எக்கநாயக்க ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் இதன்போது ஜனாதிபதி உடன் இணைந்திருந்தனர். (12)

# நச்சுத் தன்மையற்ற உணவு; விவசாயிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

தேசத்தின் மாபெரும் விவசாய வழக்கமான தேசிய புத்தரிசி விழா ஜனாதிபதி தலைமையில் நேற்று முற்பகல் அநுராதபுரம் வரலாற்று பிரசித்திபெற்ற ஜயஸ்ரீ மஹா போதிக்கு அண்மையில் இடம்பெற்றது.

சம்பிரதாயபூர்வமாக வருடாந்தம் சிறுபோகத்தின்போது அறுவடை செய்யப்பட்ட அரிசியை ஜயஸ்ரீ மஹா போதிக்கு தானம் செய்யும் இவ்விழா 49-வது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி,

ஒட்டுமொத்த மக்களை ஆரோக்கியமானவர்களாக மாற்றும் பொருட்டு நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி செய்வதற்கு கூடியிருக்கும் விவசாயிகள் உறுதிபூணல் வேண்டுமெனத் தெரிவித்தார்.

மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற உணவுகளை வழங்குவதற்காக அரசு மேற்கொண்ட வேலைத்திட்டத்தினை எதிர்காலத்தில் கிராமத்திற்கு கிராமம் வியாபிக்கச் செய்து வலுவான முறையில் நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்த ஜனாதிபதி,

எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோதும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தேவையானவற்றை நிறைவேற்றுவதற்கு அரசு தன்னை அர்ப்பணித்துள்ளதாக தெரிவித்தார்.

அவ்வாறே நடுவர்களாக செயற்பட்டு பாரியளவு இலாபம் ஈட்டும் தரகர்கள் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தினை தடுப்பதற்கு விவசாயிகளை நெல் உற்பத்தியாளராக மாத்திரமன்றி, அரிசி உற்பத்தியாளராகவும் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் இதற்கான பல முன்னோடிக் கருத்திட்டங்களை நாடுபூராக அமுல்படுத்துவதாக குறிப்பிட்டார்.

வேடர்களின் தலைவர் ஊருவரிகே வன்னிலேத்தோவினால் சம்பிரதாயபூர்வமாக ஜயஸ்ரீ மஹா போதிக்கு தேன் பூஜை செய்யும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றதுடன், சகல மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் அம்மாகாணங்களுக்கே உரித்தான உள்நாட்டு அரிசியினை ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது.

விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்கவினால் புத்தரிசி விழா தொடர்பான நினைவுச் சின்னம் ஜனாதிபதியிடம் வழங்கி வைக்கப்பட்டது. (12)

# மன்னாரில் கைக்குண்டு மீட்பு

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் இருந்து கைக்குண்டு ஒன்றை நேற்று மாலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தாழ்வுபாட்டு கிராமத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதான பிரதான வீதியில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் இருந்தே குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் காணியினை துப்பரவு செய்து கொண்டிருந்த போது குறித்த காணியின் சுற்று வேலிக்கு அருகாமையில் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

உடனடியாக கிராம அலுவலகர் ஊடாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், மன்னார் பொலிஸார் மற்றும் அப்பகுதி இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து குறித்த கைக்குண்டை மீட்டுள்ளனர். குறித்த கைக்குண்டு புதிதாக காணப்படுவதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிக்குச் சென்ற மன்னார் பொலிஸார் அக்காணி உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு, மீட்கப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (12)

# தமிழ் மக்களின் விழிப்பே...

கேட்போர் கூடத்தில் இணைத் தலைவர்கள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், த.வசந்தராசா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற போது, அங்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்கள் பேரவை இது காறும் செய்த சேவை மகத்தானது.

நாம் தொடங்கிய இந்தசெயற்பாட்டால் ஏற்பட்டுள்ள நன்மைகளை நாம் பரிசீலித்தோமானால் நில மட்ட மக்களுடன் கலந்துறவாடி அரசியல்தீர்வு சம்பந்தமான அறிவை அவர்களுக்குப் புகட்டி அதேநேரம் அவர்களிடம் இருந்து அவர்களின் அனுபவத்தின் வாயிலாக அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை நாம் பெற்று நாமும் பயன் பெற்றுள்ளோம்.

அடுத்து எமது அரசியல் வானிலே ஒரு விடிவெள்ளியைப் பவனிவர வைத்துள்ளோம். தமிழ் மக்கள் பேரவையானது உறங்கிக் கிடந்த எம்மவர்களை உசுப்பேத்திவைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

எவ்வாறு காலையில் சுக்கிரன் எனும் விடிவெள்ளி பிரகாசமாகத் தோன்றுவதால் யாவரும் வானத்தை நோக்கி அதை உற்றுநோக்கு கின்றார்களோ அதேபோல் யார் இந்த தமிழ் மக்கள் பேரவை? அதனுடைய உள்நோக்கம் என்ன? எதை அடைய விரும்புகின்றார்கள்? என்றெல்லாம் பலரைச் சிந்திக்கவைத்துள்ளது எமது பேரவை.

அந்தச் சிந்தனையின் உந்துதலால், நிந்தனைக்குள்ளான சில கருத்துக்கள் கூட இப்பொழுது வந்தனைக்குரியதாக ஏற்கப்பட்டுள்ளது. முன்னர் எல்லாம் **"சமஷ்டி என்று சொல்லாதே சமர் வந்திடும பின்னாலே"** என்று கூறியவர்கள் கூட **"சமஷ்டி என்று சொல்லடா சரிசமமாய் நில்லடா"** என்று கூறும் அளவுக்கு வலுப் பெற்றுள்ளார்கள்.

எப்பொழுதுமே தெற்கில் வசிக்கும் எம்மவர்களுக்குவடகிழக்கில் வாழும் எம்முடன் ஒருகருத்து வேறுபாடு உண்டு. "சூழலுக்கு ஏற்ப எம்மைமாற்றிக் கொள்ளவேண்டும். இல்லை என்றால் சூழல் எங்களை விழுங்கிவிடும்" என்ற அவர்களின் எண்ணமே அது.

பல இனக் கலவரங்களுக்கு அவர்கள் அங்குமுகங் கொடுத்ததாலோ என்னவோ சூழலைக் கவனித்தே தமது கருத்தை வெளிப்படுத்துவர்.

அண்மையில் கூட ஒரு கொழும்புத் தமிழன்பர் என்னிடம் கேட்டார் "நீங்கள் கேட்பது கிடைக்குமா? கிடைக்காததை ஏன் கேட்கின்றீர்கள்?" என்று. நான் கூறினேன் "நாங்கள் நோய்க்கு மருந்து கேட்கின்றோம். அவர்கள் மருந்தை வைத்துக் கொண்டு மருந்து கைவசம் இல்லை என்கின்றார்கள். அப்படியானால் இருப்பதைத்தா என்று கேட்கச் சொல்கின்றீர்களா? இருக்கும் பனடோலை மட்டும் உள்ளேற்றிநோவைக் கொஞ்ச நேரத்திற்குக் குறைக்கச் சொல்கின்றீர்களா?" உடனே அன்பருக்கு என் மேல் கரிசனை ஏற்பட்டுவிட்டது. "உங்களைத் தீவிரவாதப் போக்குடையவர் என்று ஏற்கெனவே கூறுகின்றார்களே" என்றார்.

"தீவிரவாதிகள் என்று பிரித்தானியர்களால் அடையாளங்காட்டப்பட்டவர்களுக்கு இன்று எம்மக்கள் சிலைவடிக்கின்றார்களே! தீவிரவாதம் என்பதுநாம் எங்கிருந்து எதைப் பார்க்கின்றோம் என்பதில் இருக்கின்றது. சிங்களமக்களுக்குப் பிழையான தகவல்களை எமது அரசியல்வாதிகள் ஊட்டிவிட்டுள்ளனர். அதிலிருந்து அவர்கள் விடுபடாதவரையில் எங்களைத் தீவிரவாதிகள் என்றுதான் கூப்பிடுவார்கள்" என்றேன்.

நாங்கள் ஒரு முக்கியமான விடயத்தைக் கருத்தில்கொள்ள வேண்டும். உண்மையை, யதார்த்தத்தை வெளியிடுவதற்கு நாங்கள் பின்னற்கலாகாது. ஏனென்றால் எமது தேவைகளைநாங்கள் உண்மைக்கு மாறாகக் குறைத்து விளம்பினால் எமது கஷ்டங்களை மற்றவர்கள் அறியமுடியாது போய்விடும். எமது வலியை, எமது வேதனையை, எமது தேவைகளை, எமது அபிலாஷைகளை அறியாமலே மற்றவர்கள் வாழ்க்கை நடத்துவார்கள். இன்று அப்படித்தான் தெற்கில் மக்கள் வாழ்கின்றார்கள்.

மூன்றாவதாகச் சிங்களத் தலைவர்கள் எமது தேவைகளை, மனோநிலையை, எதிர்பார்ப்புக்களை அறியாதவர்கள் அல்ல என்பதை நினைவுறுத்தவிரும்புகின்றேன். ஆனால் எமது தமிழ் மக்கள் பேரவையின் மூலமாகத் தமிழ் மக்களின் எண்ணப்பாடுகள் வெளி வருகின்றன என்றதும் அவர்கள் சற்று அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளார்கள். எப்படியாவது எம்மைத் தீவிரவாதிகளாய்ப் பட்டம் சூட்டிக் கலைத்துவிடலாம் என்று எண்ணுகின்றார்கள். ஆனால் நாங்கள் தீவிரவாதக் கருத்துக்களுக்கு இடங்கொடுக்காது யதார்த்தமான தீர்வை நோக்கி எமது கருத்துக்களை முன்வைத்ததால் அவர்கள் சற்றுத் தடுமாறுகின்றார்கள்.

தந்தை செல்வா 1972-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தான் கூறுவதைத் தமிழ் மக்கள் புதிய தொரு தேர்தலில் ஏற்றால் அரசாங்கம் அரசியல் யாப்பைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் தான் தோற்றால் அதன் பின் அரசியலிலிருந்து தான் வெளியேறிக்கொள்வதாகவும்அறிவித்தார். 1975 பெப்ரவரிவரை தேர்தலைப் பின்போட்டுக் கொண்டு போனது இலங்கை அரசாங்கம். ஏனென்றால் எமது எதிர்பார்ப்புக்களை அரசாங்கத் தலைவர்கள் நன்குணர்ந்திருந்தார்கள். அதன் பின் தேர்தலை நடத்திய போது தந்தை செல்வா அபார வெற்றி பெற்றார்.

இடது சாரியான திரு.வி.பொன்னம்பலம் அவர்கள் வெகுவாகத் தோற்கடிக்கப்பட்டார். தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டு இருந்ததற்குக் காரணம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை இன்றும் சிங்கள அரசியல் தலைவர்கள் அறிந்து கொண்டிருந்தமையே. ஆகவே எமது எதிர்பார்ப்புக்களைச் சிங்களமக்கட் தலைவர்கள் இன்றும் அறிந் தேயுள்ளார்கள் என்று கருதுகின்றேன். எம்மை நாமே ஆள வேண்டும் என்றுநாம் கூறுவதில் அவர்கள் பிழை கண்டுபிடிக்கவில்லை. எங்கே நாங்கள் சமஷ்டி பெற்றபின்னர் பிரிவினைக்கு வழி அமைத்து விடுவோமோ என்பது தான் அவர்களின் பயம். உலகத்தில் வேறெங்கும் சிங்கள மக்கள் வாழவில்லை. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடம் கொடுத்தால் அவர்கள் எம்மை இல்லாதொழித்துவிடுவார்கள் என்று எண்ணுகின்றார்கள். அவர்கள் சந்தேகங்களைப் போக்குவது எமது கடப்பாடாகும்.

எனவேதமிழ் மக்கள் பேரவை மக்களுடன் கலந்தாலோசித்து அரசியல் கருத்துக்களை முன்வைத்துள்ளது. அன்று தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எம்மைப் பார்த்து இன்று எழுந்து நடமாடத் தொடங்கியுள்ளார்கள். தமிழ் மக்கள் ஏகோபித்தவாரியாக சமஷ்டியை வேண்டுவதால் அதுபற்றிஆராயத் தொடங்கயுள்ளார்கள். நாம் எமதுக் கடமைகளைச் சரிவரச்செய்ய உறுதி பூணுவோம்.

நேற்றைக்கு முன்தினம் ஜேர்மனியில் இருந்துவந்த பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தேன். சமஷ்டி பற்றிகதை வந்த போது தங்கள் நாட்டில் சமஷ்டி முறையே கடைப்பிடிக்கப் படுகின்றது என்றும் அரசரீதியான அலகுகள் எல்லாம் செவ்வனே சுமூகத்துடன் செயலாற்றுகின்றனஎன்றும் கூறினார்கள். அதைத் தயவுசெய்துஎங்கள் சிங்களமக்கட் தலைவர்களுக்குச் சொல்லிவையுங்கள் என்று கூறினேன். செய்வதாகவாக்களித்தார்கள. இவ்வாறுதான் தெற்கின் தலைவர்களின் மனோநிலையை மாற்ற வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை கலை, கலாசாரம் போன்ற மற்றையவிடயங்களிலும் மக்களிடையே தமது பார்வையைச் செலுத்துவது சாலச் சிறந்தது. தமிழ் மக்கள் விழித்துக் கொண்டுள்ளார்கள் என்பதற்கு அடையாளமே தமிழ்மக்கள்பேரவை என்றபேரலை. அது சுனாமி போன்ற அலை அல்ல. மிகச்சாதுவான அலை. அதனை எம்மக்கள் தம் மிடையே பரவிவிரவ இடம் அளிப் பதால் அரசியல்கட்சி மாற்றங்கள் எதுவும் ஏற்படாது.

மாறாக எமது மக்கள் உண்மையை உணரத் தொடங்குவார்கள். எமது பாரம் பரியங்கள் பற்றிஅறியத் தொடங்கு வார்கள். எமது இலட்சியங்களைப் பாதுகாக்க முன் வருவார்கள். ஒற்று மைக்கு வித்திடுவார்கள்.

இந்தப் புனித கைங்கரியத்தில் தமது நேரகாலங்களை, பணத்தை, பல்விதசுகங்களைத் தியாகம் செய்து எமக்கென தீர்வொன்றினை அடையாளப்படுத்திய தீர்வுத் திட்ட உபகுழுவினர் பாராட்டப்பட வேண்டியவர்கள். எமது பாசத்துக்குரியவர்கள். தொடர்ந்தும் எமதுபேரவையின் மக்கள் பணிசிறக்க வாழ்த்துகின்றேன் என்றார். (ந)

# இந்து மதகுரு...

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணி யளவில் தும்பளை நெல்லண்டைப் பத்திர காளி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த இராமலிங்கக் குருக்கள், சுந்தரலிங்கக் குருக்கள் என்பவரது வீட்டில் நுழைந்த ஆறுநபர்கள் வீட்டின் கேற் மற்றும் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன் வீட்டில் முன் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்திலும் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆறுபேரில் இருவரை மட்டுமே பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. யாழ் குடாநாட்டில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (60)

# பொலிஸ் மா...

என்.கே.இலங்ககோன் இன்று டன் ஓய்வு பெறுகிறார்.

இந் நிலையில், புதிய பொலிஸ் மா அதிபரை தெரிவு செய்வதற்காக அரசியலமைப்பு பேரவைக்கு மூன்று பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (12)

# ரெலிகொம் நிறு...

பீ.ஜீ.சிறிசேனவுடன் தொடர்பு கொண்ட போது அவர் தனக்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த விடயமாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரெலிக்காம் நிறுவனத்தின் தலைவர் பி.ஜி.சிறிசேன, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

ஆதிரையான் கல்வி நிலையம்
திக்கம்
O/L Day Class
ஆரம்பமாகிவிட்டன
தொடர்பு : 0770872903,
021 791 7791
(4183)

லப்டொப் தேவை
நல்லநிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள்(Laptop)தேவை!
GUNA BEST PC 077 9086737
Laptop Computers Repair, Sale and Purchase
CCTV Camera Sale,Installation, IPhone Repair
50/12 Hospital Road,Vairavar Kovil Lane,Jaffna




புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் மலிவு விற்பனை




இல: 230, நாவலர்வீதி,
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
T.P 077 831 4201
077 358 3879
(C-4281)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

20 வருட கால அசைக்க முடியாத
நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
021 222 3536
10, கஸ்தூரியார், வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.
(C-4279)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.